- 26 -

அருமந்த செல்வ! இறைவனின் புனித சங்கல்பம் (தக்தீர்) என்ற குதிரையின் காலடியில் விழுந்துவிடு! அது உன்னை மிதித்துத் துவைக்கட்டும்! அல்லது, உன் மீது நடந்து செல்லட்டும்! இறைவனின் மெய்ஞ்ஞானப் பாதையில் நடந்து சீர்குலைந்தவனுக்குச் சம்மானமளிக்க இறைவனே பொறுப்பேற்றுக் கொள்கிறான். இறைசங்கல்பம் உன் மீது (சோதனையாக) நடந்து சென்றாலும், அதனோடு பிணைத்திரு. அந்த அம்பு தாக்கும் இலக்காகச் சமைந்துவிடு. அதற்கு சம்பூர்ணமாக இணக்கம் காட்டிவிட்டால், அது உன்னை லேசாகக் குத்துமே தவிர கொன்றுவிடாது. இந்த மகத்தான ஞானபோதத் திக்ருகளைச் செவியேற்காமலிருப்பவனே! புனிதமான ஒழுக்கங்களைக் கற்றுக் கொண்டு முன்னேறு! முன்னால் நடந்ததை எல்லாம் அழித்துவிட்டு, அடியிலிருந்து மெய்வணக்கத்தில் ஈடுபடு! நான் ஞானபோதம் புரிய (மேடையில்) அமர்ந்திருக்கும் போது, நீ வீட்டில் அமர்ந்திருக்கிறாயே! அதற்காகப் பாவ மன்னிப்புத் தேடு! இத்தகைய ஞானபோதத் திருச்சபைகளில் மகத்தான (விலாயத்) பதவிகளும், மெய்ஞ்ஞானத்தின் திவ்வியமான படிவங்(குரஜாத்து)களும் வரமாக அருளப்படுகின்றன.

குடும்பப் பந்தத்தில் சிக்கிச் சோதனைக்கு ஆளானவர்களே! சம்பாதனைகளை மட்டும் உங்களின் குடும்பத்தினருக்கு விட்டு விட்டு தூய இதயத்தை இறைவனின் பேற்றினைப் பெறுவதற்காகப் புனிதப் படுத்துங்கள். ஆகுமான ஜீவனோபாயம் சிலருக்கு உழைப்பாலும், மற்றும் சிலருக்கு உன்னதமான பிரார்த்தனையாலும் கிட்டுவதாயுள்ளது. சிலருக்குப் பிறரிடம் யாசிக்கும் அவசியம் இன்றியும், வேறு சிலருக்கு மற்றவர்களிடம் யாசிப்பதின் மூலமும் அது கிடைக்கிறது. ஆகுமான வழியில் ஜீவனோபாயத்தைத் தேடுவதுதான் புனிதப் போரின் (ஜிஹாத்தின்) முதல் படிவமாகும். மேலும், இந்நிலை எப்போதுமிருந்து கொண்டும் இருக்காது. உழைப்பது சுன்னத்தாகும். பிறரிடம் யாசிப்பது மெய்யுறுதியின் பலகீனத்தைக் குறிப்பதாகும்;



இறைவனிடம் பரஞ்சாட்டுதல் (தவக்குல்) கட்டாய விதியாகும். எனினும், (புனிதப் போர் போன்றவற்றுக்காக) யாசிப்பது அவசியமான வணக்கத்தில் சேர்ந்துவிடும். உணவே வேண்டப்படாதவர்கள் கூடச் சில சமயங்களில் இருப்பவர்களிடம், அவர்களைச் சோதிக்க யாசிக்க வருவர். "இரவில் உங்களிடம் யாசிக்க வருபவர்களை ஏதும் கொடுக்காமல் விரட்டி விடாதீர்கள்! ஏனெனில், உங்களிடம் யாசகத்துக்கு வருபவர்கள் மனிதராகவோ, ஜின்னாகவோ இல்லாமல் வேறொருவராக(அமரர் ஆக)வுமிருக்கலாம். இறைவன் உங்களுக்குக் கடாட்சித்த சம்பத்துக்களை நீங்கள் எவ்வாறு செலவிடுகிறீர்கள் என்று நேரில் கண்டறியவே (அமரர்கள் யாசகர் போல்) வரலாம்" என்று நபி பெருமான் (ஸல்) அவர்கள் அருளியதற்கொப்ப உள்ள யாசகன் நான்! இறைவனின் கருணையால் அருளப்பட்ட செல்வங்களை நீங்கள் எவ்வழியில் செலவிடுகிறீர்கள் என்று சோதிக்கவே (உங்களிடம்) யாசிக்குமாறு, எனக்கும் சில சமயங்களில் (இறைவன்) ஆணையிடுகிறான்.

ஞான மகான்களான உங்களின் ஞானத் திருச்சபைகளில் அதிகமாக நீ அமர்வதாலும், சிரேஷ்ட அடியார் (சாலிஹீன்)களின் அடக்கத்தலங்களை நீ தரிசித்து (ஜியாரத்துச் செய்து) சிந்திப்பதாலும், அதிசயிக்கத்தக்க வகையில் உன் இதயம் (கல்பு) புனர்ஜீவனம் பெற்று ஜொலிப்பதைக் காண்பாய். சான்றோர்களான அந்த மகாத்மாக்கள் சன்மார்க்க நெறிமுறையை (ஷரீஅத்தை)ப் புனிதமாகக் கடைப் பிடிப்பதில் உறுதியுடன் திகழ்ந்தவர்கள். எனவே, இறை சங்கல்பமும் அவர்களுக்கு நல்ல விதமாக அமைந்தது. ஹஜ்ரத் அப்துல்லாஹ் இப்னு ஜுபைர் (ரலி) அவர்கள் வாரத்துக்கு ஒரு முறை, ஒரு கவள உணவையே உண்டு வந்தார்கள்! (அவ்வளவு எளிமை, துறவுநிலை) தண்ணீரே தங்காத பொத்தலான பழைய பாத்திரம் போல், கிலுறு நபி (அலை) அவர்கள் ஏறி அமர்ந்து பழுதாக்கி(ப் பிறகு சீர்படுத்திய) ஏழைகளின் ஓடத்தைப் போல் நீ சீர்படாதவரை உன் நிலை புனிதப்படாது. ஞான மார்க்கத்தில் பல படிவங்களுண்டு. அவைகளில் மிகவும் உன்னதமானது ஆத்மசாந்தி (இத்மீனான்) ஆகும்.

மற்றொன்று, அமைதியின்மையும், குழம்பிய நிலையுமாகும். இன்னொன்று, (சோதனைக்காக) செல்வங்களும், பாசங்களும் குறைக்கப்படுவதாகும். வேறொன்று, அதில் சௌபாக்கிய சம்பத்துக்கள் அதமிதமாகப் பொழிவிக்கப்படுவதாகும்.

என் உபதேச மன்றத்தை (மஜ்லிஸை)ப் புறக்கணித்து அப்பாலாகி விட்டவன், நாசத்தை நாடிச் சென்றவன் போலாவான். இறைவனின் நல்லருள் அவனுக்குப் பாக்கியமாகாமல் போகட்டும்! இரட்சகா, மனிதருள்! எங்கள் குறைகளை மறைத்தருள்! (உன் சத்தியப் பாதையில் நடக்க) எங்களுக்கு உறுதியான கால்களைத் தந்து கருணை புரி! உன் திருப்பொருத்தத்தை அமோகமாக எங்கள் மீது பொழிந்தருள்! ஓர் அரசனின் சமையல்காரன் நெடுநாள் ஊழியம் புரிந்து, வயோதிகமடைந்து, அவன் மூளையிலும், கண்ணிலும், காதிலும், கரங்களிலும், ஆட்டம் அசைவுகளிலும், குறையுண்டாகி விட்ட நிலையில், அவனுக்கு ஓய்வு தரப்பட்டு, அவன் வீட்டிலிருந்த படியே, ஊதியம் பெற்று, உணவுண்டு கொண்டிருக்கச் சலுகை பெறுவதுபோல, நீயும் (மெய்வணக்கங்களைப் புரிவதின் மூலம்) சீர்பட்டு, இறைவனின் திருச் சமூகத்தை அணுகும் மகிமை உனக்குச் சித்தியான பின்னரே கட்டாயமான (பர்லான) வணக்கங்களை மட்டும் நீ வணங்கினால் போதுமென்ற சலுகை உனக்குக் கிடைக்கும்.

இறைவனின் மெய்நேசனென்று உன்னை நீயே கருதிக் கொள்பவனே! அல்லாஹ்மீது ஆணையாகச் சொல், உன் உணவை, உன் அண்டை வீட்டானுக்கு அளித்துவிட வேண்டுமென்ற புனித எண்ணம் உனக்கு எப்போது வரும்? உன் சட்டையையும், தலைப்பாகையையும், உன் தொழுகை விரிப்பையும் எப்போது மற்றவர்களுக்குக் கொடுப்பாய்? உன் செல்வங்களை மற்றவர்களுக்கு எப்போது பங்கிட்டுக் கொடுக்கப் போகிறாய்? இரட்சகனின் மெய்யன்பர்களான உத்தம மகான்கள், தங்களின் கீழான மனத்தின் பாசங்களையும், சுபாவச் சேட்டைகளையும், சிற்றின்ப வேட்கைகளையும், ஏன், அவர்களின் ஊண், குடிப்பையும்கூட வெறுத்து, எரித்து உருக்கிவிட்டார்கள்; இருந்தும் இறந்து



அழிந்தவர்களாகவே தங்களைச் சமைத்துக் கொண்டார்கள். இறைவனின் மகா சக்தியே அவர்களை (அஸ்ஹாபுல் கஹ்புகளைப் போல) ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தது. இறை சங்கல்பமெனும் குளிப்பாட்டுபவர் அவர்களை இடமும், வலமும் புரட்டிப் புரட்டி எடுத்துக் கொண்டிருந்தார். அவர்களின் கீழான மனம் (நப்ஸ்) என்ற நாய், தன் முன்னங்கால்களை வாயிற்படியின் மீது நீட்டிப் படுத்துக் கிடந்தது. பாவங்கள், தவறுகள், அறுவருக்கத்தக்க செயல்கள் அனைத்தையும், செய்யாமலிருப்பதே அவயங்களுக்குப் போசாக்களிக்கும் அருமருந்தாகும். தீருட்டு, அடிதடிகளில் ஈடுபடுதல் ஆகியவைகளை விட்டும் உங்கள் கரங்களைத் தடுத்துக் கொள்ளுங்கள். அரசர்கள், செல்வர்களின் பக்கம் (நட்பைத் தேடி) நடக்காமல், கால்களைத் தடுத்துவிடுங்கள். அழகான அன்னிய மாதர்களை நோட்டமிடாமல் கண்களையும் விலக்கிக் கொள்ளுங்கள்.

- 27 -

சன்மார்க்க ஏவல் விலக்கல்களைத் தூய்மையாக கடைப் பிடிப்பதிலேயே கீழான மனத்தை (நப்ஸை)த் தூங்க வைத்துப் புனிதம் பெற்ற இதயத்தை இறைவனின் உன்னதமான முடுகுதலில் பறந்து திரிய விட்டுவிட வேண்டும். சான்றோர்களான இறை நேசர்கள் (வலிமார்கள்) புனிதமான வணக்கங்களில் நிறைவு பெற்ற பின்னரே, அவர்களுக்கு நபிமார்களுக்கு உரித்தான கல்யாணகுணங்கள் அருளப்படுகின்றன. (அந்த நிலையில்) புனித சன்மார்க்கத்தின் ஏவல் விலக்கல்களைக் கடைப்பிடிப்பதற்கு இடையிலும், தெளிவற்ற ஒருவகைக் குழப்பம் அவர்களை ஆட்கொள்கிறது. சில சமயங்களில் தாங்கள் சன்மார்க்க ஏவல் விலக்கல்களைப் புறக்கணிப்பது போன்றும், மறுக்கணம் ஞானோதயத்தை ஏற்க மறுப்பது போன்றும், அவர்கள் திகைப்பில் மூழ்கி விடுகின்றனர். அந்த நிலையில், "உனக்கு நபி பெருமான் (ஸல்) அவர்கள் காட்டிய வழியை மட்டும் பின்பற்றி ஒழுகு!" என்றும், நான் உனக்குப் பணியாளனாய் அமைந்து, உன் முன்னால் நிற்பது போதவில்லையா? உனக்கு நான் காவலாளியாய் உள்ளேன்.

அதனால்தான் நீ இறைவனின் முடுகுதலில் அமர்ந்திருக்கிறாய் என்றும் ஞானோதயம் அவர்களின் இதயத்தே உபதேசிக்கும்.

இவ்வாறாகச் சீர்பட்ட மகான்களுக்கு இரவு நேரமே சிம்மாசன மாயும், பேரின்பம் அனுபவிக்கும் சப்ரமஞ்சமாயும் திகழ்கிறது. பகல் நேரம் ஜீவனோபாயத்துக்கான உழைப்பில் கழிந்து விடுவதால், அதை அவர்கள் வெறுத்து, சஞ்சலங்களையும், சம்பூர்ணமாக மறைத்து வைப்பதால் தான், அவர்களுக்கு இரட்சகனின் கருணை கடாட்ச மாகிறது. யாகூப் நபி (அலை) அவர்கள் (தமது மகனான யூஸுப் நபியை நோக்கி), "மகனே நீ, கண்ட சிறந்த கனவை உன் சகோதரர்களிடம் கூறி விடாதே!" என்று கூறியுள்ளதைச் சிந்தித்துப் பார்!

உன் ஆயுள் முழுவதும் மனிதர்களுடன், மகா கண்ணியத் துடன் கலந்துறவாடு. மற்றவர்களுக்குச் சகாயம் புரியும் பாதுகாவல னாக இரு. புதை குழியில் உன்னிடம் முன்கர், நக்கீர் வந்ததும், என்னைப் பற்றி வினவு. அவர்கள் உனக்கு என்னைப் பற்றித் தெளிவுபடுத்துவார்கள். இன்று நீ பெரும்பாவியாயும் குற்றவாளியாயும் இருக்கிறாய். நாளை இறுதி நாளில் நீ நிச்சயம் விசாரிக்கப்படுவாய். புதைகுழியில் உன் நிலை மிகவும் கேவலமானதாகிவிடும். நீ சுவர்க்கவாதியா, நரகவாதியா என்று உணர்ந்து கொள்ளாமல், கண் மூடித்தனமாக நடந்துகொள்கிறாய். புனிதமடைந்து, ஈடேற்றம் பெற்று விட்டதாக அகந்தை கொள்ளாதே! நாளை நியாயத் தீர்ப்பு நாளில் உனக்கு என்ன பட்டம் சூட்டப்படுமென்று உனக்கே தெரியாது! காலையில் இருந்து கொண்டு மாலையில் என்ன நடக்குமென்றும், மாலையில் இருந்துகொண்டு, மறுநாள் என்ன நிகழும் என்றும் சிந்தித்துக் கொண்டிராதே! சென்று விட்ட 'ஒன்று' நீ தாய்மையானவன் என்று சாட்சி சொல்லுமா. அன்றி நீ பாவிதான் என்று குற்றம் சாட்டுமா? நாளையைச் சந்திப்பாயோ, மாட்டாயோ, உனக்கு இன்று இருக்கும் நேரத்துடன் பிணைப்பும், தொடர்பும் இருப்பது மட்டும் நிச்சயம். (அந்தோ) நீ எவ்வளவு படுமோசப் பொடுபோக்கில் உழன்று கொண்டிருக்கிறாய்!



மகாத்மாக்களான ஞான மகான்களின் புனித சகவாசம் உனக்குக் கிட்டவில்லையே! இதுவே உன் துரதிர்ஷ்டத்துக்குச் சான்று பகர்கிறதே; ஏ, அறிவிலி, இரட்சகனின் அனுக்கிரகம் படாதவர்களின் சகவாசத்தில் ஏன் விரும்பி அமருகிறாய்; அடிப்படைப் பல மற்றவர் களும், வெளிக்கோலம், இச்சாபாசங்களால் பொதியப்பட்டதாயும், உட்கோலம், இறுகியும் இருப்பவர்களும், கருணையாளனான இறைவனின் திருமுன் சலுகை அற்றவர்களேயாவர். இது (இறைவனின் புனிதச் சலுகை) புஜங்களை ஒடுக்கிக் கொள்வதைப் புறக்கணிப்பதாலும், கண்களில் விழிப்பு என்ற அஞ்சனத்தைத் தீட்டிக்கொள்வதை விட்டுச் சாதாரணச் சுருமாவைத் தீட்டிக் கொள்வ தாலும் சித்தியாகி விடாது. சர்வ படைப்புகளும், அவர்களின் சர்வ இன்பங்களும், மினுக்குகளும் கண்ணியத்துடன் அங்கீகரிக்கத்தக்க பண்பை அடையாத படிவத்தில் தான் இருக்கின்றன.

ஏ மதிகெட்டவனே! நீ ஒரு சமயம் ஒருவர் வாயிலிலும், மறுசமயம் வேறொருவர் வாயிலிலும் ஏறி, ஏறி பிச்சைக்காக நீ யாசித்து நிற்கிறாயே, அது உன் கைமுதலைப் பெருக்கிக் கொள்ளத்தானே; இந்த நிலையில் உனக்கு ஆத்ம ஞான வெற்றி கிடைக்குமா? நீ ஏன் சர்வலோக இரட்சகனின் மாளிகைக் காவலனாக அமரக்கூடாது? அவன் சந்நிதியுள் நுழைபவர்கள் அவனுடைய ஏகத்துவத்தைத் கொண்டு மட்டும் துணை தேடுபவர்களாகவே இருப்பர். அந்த நிபந்தனைக்கு உட்பட்டு நடந்தவர்களே அங்கு அனுமதிக்கப்படுவர். பிற படைப்புகளையும், உன் உற்றார் உறவினராக மதித்து, அவர்களோடு ஒன்றாகப் பழகி வருவதுடன் (உன் வீட்டில் அமர்ந்தவாறே ஜீவனோபாயத்துக்காக) ஏதாவது ஒரு தொழிலைச் செய்து கொண்டிருந்தால், மக்களுக்குத் தேவையானதை உன்னிடமிருந்து வாங்கிக் கொள்வார்களே! (பிச்சை எடுக்காமல் உன் ஜீவனோபாயம் நடக்குமே!) இந்த உயர்ந்த பண்பை, நீ ஏன் கற்றுக்கொள்ளக் கூடாது? ஏகாந்தம் (கல்வத்)தான் உனக்குப் புனிதமான வீடு. உத்தம தூய இதயம்தான் (நீ வசிக்கச்) சிலாக்கியமான மாளிகையாகும். மெய்வணக்கம் புரிவதும், அவன்

ஏவலுக்குப் பணிந்து, விலக்கலைத் தவிர்ப்பதும், தெய்வ சங்கல் பத்துக்கு முற்றும் பணிவதும்தான் இறைவனுடன் நீ கொள்ளும் புனித நேசமாகும்.

ஒரு கண்ணின் புனித நோக்கால், ஆயிரமாயிரம் கண் களுக்குக் கௌரவமும், சிறப்பும் உண்டாகிவிடுமே! நீ அமர்ந்துள்ள ஏகாந்தத்தில் ஞான மகான்களையும், அமரர்களையும் கண்ணியப் படுத்துவாயாயின், அப்போது உன் நல் அமல்கள் இறைவனுக்கே செய்தவையாக அமையும். நீயும் பாவ காரியங்களில் புகமாட்டாய். ஆகவே, ஞானநாதர்களைக் கண்ணியப்படுத்துவதன் மூலமும், அவர்களுக்கு முன் பணிவு காட்டுவதன் மூலமும் தான் உன் பெயர் கனவான்களின் பட்டியலில் இடம்பெறும்படி செய்ய முடியும். இவ்வாறு நீ கனவானாய் சீர்பட்டதும், உன் ஒரு திரு நோக்கின் மகிமையால் ஆயிரமாயிரம் கண்களைக் கண்ணியமிக்கவைகளாகச் சமைத்து விட இயலும். உன் ஒருவனின் மகிமையால், உன் உற்றார், பெற்றோர், அண்டைஅயலார், ஊரார்கள் மீதெல்லாம் இறங்க விருக்கும் சோதனைகள், தீங்குகள் (பலாய்கள்) யாவும் அகற்றப்படும்.

நீ ஆயுள் முழுவதும் பிச்சைக்காக யாசித்துக் கொண்டே இருந்தால், ஆயுளெல்லாம், பிச்சைக்காக வாயில் வாயிலாகத் திரிந்து கொண்டிருந்தால், பிறருக்கு நீ உணவளிக்கும் சந்தர்ப்பம் எப்போது வரும்? உன்னை நாடி, உன் வாயிலுக்கு மற்றவர்கள் வரும் காலம் எப்போது? நீ பிச்சையெடுக்கும் தொழிலை விட்டொழிக்கும் சமயம் எப்போது வரும்? மகாகனம் தங்கிய இறைவனின் திவ்விய சந்நிதியில் மணமகனாக அமரும் நேரம் எப்போது வரும்? இரட்சகனின் திவ்விய சமூகத்தில் மகத்தாக அமரும் மகிமையும், தகுதியும், பண்பும், உன்னில் எப்போது வெளிப்படும்? உனக்கு இறைவனின் கௌரவப் பட்டம், பதவிகள் கிடைப்பதென்று? மேலும், நபிபெருமான் (ஸல்) அவர்களின் மெய்ஞ்ஞானச் சொரூபப் புத்திரர்களில் சிறந்த ஒருவனாக விளங்கி, அவர்களின் மெய்ஞ்ஞானக் களஞ்சியத்துக்கு உத்தமமான வாரிசாக நீ திகழ்வதெப்போது?



ஞான மகான்கள் தங்களின் சத்திய போதனைகளாலும், புனித வணக்கங்களாலும், தாங்கள் கடந்துவிட்ட ஞானப் படிவங்களாலும், சித்திபெற்றுவிட்ட உயர் பதவி(மகாம்)களாலும் தான், நபிமார்களின் புனித வாரிசுகளாகத் திகழ்கின்றனரே அன்றி ,அவர்களின் பெயர் களாலோ, குடும்பப் பட்டங்களாலோ அல்லவே அல்ல. நபிமார்களுக்கு நபித்துவம் (நுபுவ்வத்) பெயர் என்றால், திருத்தூது (ரிஸாலத்) பட்டப் பெயர் போன்று விளங்குகிறது. ஏ மூடனே, நபித்துவமும், திருத்தூதும், திண்ணமாக முடிவு பெற்றுவிட்டன. இறை நேசர்களுக்குரிய 'விலாயத்', 'கௌதியத்', 'அப்தாலியத்' ஆகிய பதவிகளும், பட்டங்களும் இன்னும் முடிவு பெற்றுவிடவில்லையே!

மறுமையின் சிறப்புக்குப் பதிலாக, இம்மையின் இழிவான வாழ்வை மோகித்து, அதிலேயே அமர்ந்துவிடப் போகிறாயா? உன்னுடைய கீழான மனத்தையும், அதன் ஆசாபாசங்களையும், சுபாவச்சேட்டைகளும் தான், இம்மை என்று நான் கூறுகிறே ன். மனித இயற்கைக்கு அவசியமான வையும், அழிவதற்கு அருகதையுள்ளவைகளும் இம்மை யல்ல. அவை இம்மையில் உனக்களிக்கப் பெற்ற வரங்களாகும். (இவைகளை நீ சன்மார்க்க வரம்புக்கு உட்பட்டுச் சுவைக்கலாம்)

இறைவனே, உனக்காகக் கடமையாக்கிவிட்டதைத் தவிர்த்து, நீயே உன் முயற்சியால், உன் அவயவ உழைப்பால் தேடிக்கொண்டவைகளே 'இம்மை' என்பது. எவை எவை மனித வாழ்க்கைக்கு அவசியப்படுகின்றனவோ, அவை இம்மையாக மாட்டா. குடியிருக்கப் போதிய வீடும், உடலை மறைத்துக் கொள்ள அவசியமான துணியும், பசியைத் தீர்த்துக் கொள்ளப் போதிய உணவும், ஆத்ம சாந்தியை நல்கும் மனைவியும், இம்மையில் சேரமாட்டா, படைத்தவனான இறைவனைப் புறக்கணித்து விட்டு, படைப்புகளின் பக்கம் சாய்ந்துவிடும் நிலையே (விலக்கப்பட்ட) 'இம்மை'யாகும்.

மெய்ஞ்ஞான சிந்தனை வேறு. ஆத்ம ஆவேசம் வேறு. மெய்வணக்கம் வேறு. கீழான மனத் தூண்டுதல் வேறு. காரணம் (சபப்) வேறு. காரணகர்த்தா (முஸப்பிப்) வேறு. தூய உள்ளம் வேறு. வெளிக்கோலம் (புற அமல்கள்) வேறு. உன் வெளிக்கோலம் (லாஹிர்) புனிதமாகிச் சீர்பட்டதும்தான். தூய உள்ளத்தையும் சீர்படுத்திக் கொள்ளுமாறு ஏவப்படுவாய். சன்மார்க்க ஏவல் விலக்கல்களை, (ஷரீஅத்தை) நீ தூய்மையுடன் கடைபிடித்து உன்னை உறுதிப் படுத்திய பின்னரே, சுபாவச் சேட்டைகள் (தபிஅத்) உன் உடலை விட்டும் அழிந்து நாசமாகும். பின்னர் அருள் ஞானம் (இல்ம லதுன்னி) உனக்கு கடாட்சமாகும். இந்தப் புனிதப் படிவத்தில் நீ இரண்டு மனைவிகளுக்கிடையே ஒரே மணாளன் போலும், அரசனுக்கும் மந்திரிக்கும் இடையில் வாயில் காப்போன் போலும் மிளிர்வாய். இம்மை, மறுமை, படைப்பு, படைப்பாளி, அமரர்கள் அனைவரும் உன்னை நேசித்து மனம் குளிரவும் வழி பிறந்துவிடும்.

நீ தரிசிக்கவும், விளங்கிக் கொள்ளவும் இயலாத மகத்தான 'படிவங்கள்' (ஹாலாத்து) எங்களுக்குக் கடாட்சமாகியுள்ளன. "மகனே, பெயரளவில் மெய்ஞ்ஞானத் துறவியாகச் சமைந்துவிட்டுப் பின்னர் பாவியாகத் திரிவது எவ்வளவு கேவலமானது? வணக்கவாளியாய்ச் சமைந்தபின் இரட்சகனின் மெய்வணக்கத்தைப் புறக்கணிப்பது, அதை விடக் கேவலமல்லவா!" என்று தன் மகனார் சுலைமான் நபி (அலை) அவர்களுக்குத் தாவூது நபி (அலை) அவர்கள் உபதேசிப்பதை யும், "மகத்தான மறுமையைவிட, இம்மையையா விரும்புகிறாய்? என்ற இறைவனின் எச்சரிக்கையையும் சிந்தித்துப் பார்! உனக்கு ஒரே 'உள்ளமை' (உஜூத்) இருக்கிறது. நீ (பற்று நீக்கி) உன்னை, இருந்தும் இல்லாமலாக்கிக் கொள்வதுதான் உனக்கு மறுமையாகும்

உன் முயற்சிக்கு (ஹிம்மத்துக்கு) ஒரு மாற்றமும், மெய்ஞ்ஞான அகமியங்களுக்கு ஒரு திருப்பமும் உண்டு. அஃதே போல், சாதாரண மக்களுக்கும், பற்றற்ற பரம ஞானிகளுக்கும்கூட ஒருமகத்தான மாற்றமும் திருப்பமும் உண்டு. நீ கண்ணும் கருத்துமாயிருந்து



சேர்த்தாயே, அவை (செல்வங்)களே உனக்கு இம்மையாகும். உன் மெய்ஞ்ஞான வெற்றியால், நீ அறியாப்புறத்திலிருந்து அளிக்கப் பட்டவைகளே உனக்குத் திவ்வியமான மறுமையாகும். ஆகையால் தான், உனக்குக் குழப்பமாயிருக்கிறது. உன் உடலில் ஊடுருவியுள்ள அறிவின் சாதனையால் அடையப்பட்டதே இம்மையாகும். (அக்லுல் உகூல் என்ற) ஞானோதயத்தால் சித்தியான கடாட்சங்களே மறுமை யாகும். உன் போலி மினுக்கான வெளிக்கோலமே இம்மையாயும், சீர்பட்ட உள்ளமே மறுமையாயும் உள்ளன. மெய்ப்பொருளான அல்லாஹ்வை அல்லாத படைப்புகளோடு கொள்ளும் பிணைப்பு களால் லயிக்கும் நிலைகளனைத்தும் இகமாகும். குற்றங் குறைகளையும், புகழ் இகழ்வுகளையும், வீணான சிந்தனை களையும் அப்பலாக்கிவிட்டு, படைப்புக் கர்த்தாவான எஜமானனுடன் உனக்கு உண்டாகும் புனிதமான பிணைப்புகள் தாம் பரமாகும்.

இம்மையின் ஊசாட்டங்கள் உனக்குக் கிட்டிய சாந்தியை குலைக்கவே உதவுவனவாயுள்ளன. உன் நாட்டம் மட்டும் மெய்யான தாயின், பரம்பொருளான அல்லாஹ்வே உன்னைக் கைத்தூக்கி விடுவான்; தன் நேசத்தில் நடத்துவான். உன் தூய நாட்டத்தாலும், சீலமிக்க நடத்தையாலும் அயலானின் வீணான பிதற்றல்களைக் கேட்காமல் செவிடன்போல் ஆகிவிட்டால், உன் இரண்டு பாதங்களுக்கும் இடையேயுள்ள தூரம் ஆதம் நபி (அலை) அவர்களின் பாத இடைவெளியைவிடப் பாரதூரமானதாகக் காட்சிய ளிக்கும். ஏ அறிவீனனே, இறைவனின் அகமியங்களையும், அவனுடைய ஒப்பற்ற அருட்பாக்கியங்களையும், ஆணைகளையும், கண்ணின் மணிகளாகவும், பிரதான சிரசாயு (தலை) மதித்துத் தூய்மையுடன் ஒழுகிக் கனவான்களாகிவிட்ட மகாத்மாக்களை அறியக் கூடிய ஞானமற்ற நீ நாசமாகக் கடவாய்.

மகான்களான ஞான (ஒலி) உத்தமர்கள் விதிவசப் பட்டோ லையில் (லௌஹுல் மஹ்பூலில்) முதலில் தங்களுக்குக் கடாட்சமான அருட்கொடைகளை நிதர்சனமாகக் கண்ட பின்பே, தங்களின் உற்றார், உறவினர்களின் பாகத்தை (மக்ஸூம்)ப் பார்க்கின்றனர்.

விதிவசப் பட்டோலையையே தரிசிக்கும் பாக்கியம் தங்களுக்குக் கிடைத்ததற்காக அவர்கள், மகிழ்வும், வியப்பும் அடைகின்றனர். அந்த நிலையில், "நீ நம் அருட்கொடையில் கௌரவிக்கப்பட்டுச் சந்தேகமின்றி நம் திவ்விய சமூகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட புனித சீனாவாய்" என்று அவர்களின் உள்ளத்தில் இறைவனின் செய்தி உதிப்பாக்கப்படும். இறை நாட்டத்தை அவர்கள் புனிதமாக ஏற்பதன் மூலம், இந்த உயர்ந்த நிலை அவர்களுக்குச் சித்தியாகிறது. மகான்களான தமது ஞான குருமார்களின் ஞானோபதேசங்களைக் கண்டிப்பான முறையில் பின் பற்றி நடந்ததாலேயே அவர்களுக்கு மனத் தூய்மை உண்டாயிற்று.

- 28 -

(ஆண்டகை அவர்கள் 'தன்னை' மறந்த பரவச (ஜத்பு) நிலையிலிருக்கும் சமயம், மார்க்கச் சட்டம் (பிக்ஹு) சம்பந்தமான ஒரு கேள்வி (மஸ்அலா) அவர்களிடம் எழுதிக் கேட்கப்பட்டதற்கு அவர்கள் கூறியதாவது:)

எனக்குப் பேசவும், உரையாடவும் அனுமதி தரப்படாத வரை நான் பேசவும் மாட்டேன்; அதைக் குறித்துச் சிந்திக்கவும் மாட்டேன். "திருமணம் செய்துகொள்வது கட்டாயக் கடமையா (வாஜிபா) இல்லையா?" என்று வினவப்பட்டிருக்கிறது. சட்ட மேதைகளான இமாம்களில் சிலர், இதைச் 'சுன்னத்' என்றும் கூறியுள்ளனர். சித்த விகார உணர்ச்சி இல்லாதவர்கள், ஏகாந்தத்தில் தனித்திருந்து மெய்வணக்கத்தில் ஈடுபடலாம் என்று இமாம் ஷாபியீ, இமாம் அஹ்மதிப்னு ஹன்பல் ஆகிய இருவரும் கூறுகின்றனர். இமாம் அபூ ஹனீபா அவர்கள், திருமணம் புரிந்து கொள்வது அமலான காரியம் என்று தீர்ப்பளித்துள்ளார்கள். எனினும் நீ இறைவனின் தேட்டத்தில் புகுந்து, பக்தி மார்க்கப் பாதையில் நடந்து சென்றுகொண்டிருக்கும் வரை, அந்தப் பாதையைப் பின்பற்றித் தொடர்ந்து நல் வணக்கத்திலேயே ஈடுபட்டிரு. அந்தத் துறையில் நீ சீர்பட்டு சித்தி பெற்று விட்டால், பின் உன்னைப் பற்றிய வரை, நீ எதையும் சிந்திக்கத்



தேவையில்லை. இறைவன் நாடினால், உனக்கு மணமுடித்து வைப்பான். அல்லது, உன்னை வேறு நற்சேவையில் திருப்பி விடுவான். அவன் உனக்கு ஒதுக்கியுள்ள வரமனைத்தும் நிச்சயமாகக் கடாட்சமாகியே தீரும். "இந்த மனிதன் என்னைப் புறக் கணித்துவிட்டு ஓடுகிறான். இறைவா, என்னை ஏற்றுக் கொள்ளும்படி இவனுக்கு அருள்புரி!" என்று அந்த வரங்களே இறைவனிடம் மன்றாடும். பின்னர் அவன் உன்னை, உன் அருட்பாக்கியங்களை ருசிக்க அனுமதிப்பான்.

சாதகன் (முரீது) திருமணத்தை விட்டுவிடுவதே நலமாகும். ஓர் உடையும், உட்காரச் சிறிது தரையுமே அவனுக்குத் தேவை. ஏனெனில், மெய்ஞ்ஞானப் பாதையில் நடக்கும் சாதகன் ஒரு பிரயாணியைப் போன்றவன். அவனுக்கெனத் தங்கிடத் தனி விடுதியோ, தேவைக்கு அதிகமான சாமான்களோ இருக்கலாமா? அவன் பந்தங்களென்ற சகல உடைகளையும் கழற்றி விட்டு வெளியேறிய நிர்வாணியாவான். ஆம், அவனது பக்தி மார்க்கப் பிரயாணம் முடிந்து, அவன் தன் உன்னதமான லட்சிய இடத்தை அடைந்துவிட்டானாயின், பிறகு அவனுடைய கண்ணிய மிக்க எஜமானன் (அல்லாஹ்), அவனுக்குத் திருமணம் முடித்து வைக்கலாம். தன் பிரதிநிதியாக (விலாயத்தைக் கடாட்சித்து) அமர்த்தலாம். ஆக்கலாம், அழிக்கலாம். எஜமானின் புனித சங்கல்பமே அவனுக்குப் பாக்கியமாகிவிடும். மூடர்களின் சகவாசத்தை விரும்பி ஓடுபவனும் மூடன்தான். மகத்தான மறுமையை ஒதுக்கி விட்டு, இம்மையின் அற்ப வாழ்வுக்காக மகிமைகளையும், அகமியங் களையும் அறியாதுபோகும் அஞ்ஞானிகளும் மூடர்கள்தாம்.

அருமந்த செல்வா! உனக்காக அல்லாஹ் ஒதுக்கியுள்ள அருட் பாக்கியங்களை, உன்னையன்றி வேறு எவரும் அனுபவித்துவிட முடியாது. ஆகவே, உன் சுபாவச் சேட்டைகளுக்குப் பணிந்து, ஆதம ஆவேசமென்ற ஷைத்தானிய இயல்புள்ள கரங்களால் உண்ண விரும்பாதே! ஆனால், நீ உன்னுடைய சுவர்க்கத்தில் நுழையும்வரை, அல்லது உன் இரட்சகனின் திருச் சமூகத்தில் புனிதமாக அமரும் வரை (அவ்வாறு உண்பதைத் தவித்தது) சிறிதே சிந்தனை செய்!

(இந்தச் சமயம் ஒருவர் எழுந்து, "நாயகமே, நான சிறு வயதிலிருந்து ஒரு விர்தை (ஆத்மீக அப்பியாசத்துக்கான வாசகம் ஒன்றை) மிகுதமாக ஓதிவந்தேன். இப்போதோ தொழுகைக்காக நின்றால் இரண்டு 'ரக்அத்' தொழுகைகூடத் தொழ முடியாமல், அதற்குள் எனக்கு மயக்கம் வந்து கீழே விழுந்து விடுகிறேன். என் துர்ப்பாக்கிய நிலைக்கு யாது செய்வேன்?" என்று முறையிட்டார். அப்போது ஆண்டகையவர்கள் மேலும் தொடர்ந்து:)

ஏன் இது ஒரு சிரேஷ்டமான இறை நாட்டமாயுமிருக்கலாம். அல்லது மெய்நேசரான எவரேனும் ஓர் உத்தமர் இறைவனைத் தரிசிக்கச் செல்லும்போது, அவருடைய அருள்மிக்க பார்வை உன் மீது பட்டு, உன்னை அவர் நேசித்துமிருக்கலாம். (என்று கூறிவிட்டுத் தங்கள் சீடர்களைப் பார்த்து) இவரை உங்கள் புனித சகவாசனத்தில் சேர்த்துக் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் கருணாமாரி சில சமயங்களில் பொதுவாக எல்லோர் மீதும் பொழிகிறது. அந்தச் சமயம் இரட்சகன் அருள்மாரியில் இவரையும் அமர்த்துங்கள். (என்று கூறிவிட்டுத் தங்கள் பிரசங்கத்தைத் தொடர்ந்தார்கள்.)

உன் தூய இதயம் புனிதப்பட்டு (எஜமானனின் ஊழியத்தில் சீர்பெற்று) முதிர்ச்சியடைந்து, அதன் மகிமையால் சர்வ சக்தனான இறைவன், தன் திருச் சந்நிதியின் வாயிலில் அதை (இதயத்தை) அமர்த்திக் கொள்வது என்பது முடியாத காரியமா? உன் வெளித் தோற்றமான உடல் (வணக்கத்தால்) இளைத்து, உள்ளம் (பாதின்) வலுப்பெற்று விடுவதும் கூடாத காரியமா? உன் தூய இதயத்தின் தசை நார்கள் பலமற்று, அதன் தோல் மென்மையுற்று அதனுள் இரட்சகனின் கடாட்சம் துள்ளி விளையாடுவது நடக்க முடியாத காரியமா? உன் தூய உள்ளம் தன் இரட்சகனின் திவ்விய சமூகத்தைத் தரிசித்து, அதன் பொருட்டால், அவனுடைய மாண்பு பெற்ற முடுகுதல், உன் தூய இதயத்தைச் சூழ்ந்துகொள்வது முடியாத காரியமா? அதன் அருளால் இதயத்தில் தன்னை இழக்கும் நிலை சித்தியாகாதா என்ன?



இதயத்தைப் புனிதப்படுத்துவதும், உயர்வடையச் செய்வதும் மெய்யாகவே மிகவும் கடினமான காரியங்கள்தாம். ஏனெனில், இதயம் சதாவும் பல திசைகளிலும் அடியார்களைத் திருப்பித் திருப்பி அவர்களை மறதியில் ஆழ்த்திக் கொண்டே இருக்கும். சித்தசுத்தியுடன் கடைப்பிடிக்கப்படும் ஒரு சிறு நல்வணக்கம் கூட வெளி அவயங்களால் செய்யப்படும் விரிவான பல வணக்கங்களைவிட, ஆயிரமாயிரம் மடங்கு உயர்வானதாகும். கடைமையான (பர்லான), சுன்னத்தான வணக்கங்களைப் பேணுதலுடன் அனுஷ்டித்துக் கொண்டிருக்கும் வரை, எவ்வித தீமையோ, பாவமோ விளைந்து விடாது. ஒரு சமயம் ஹஜ்ரத் ஜுனைத் பக்தாதியிடம் ஒருவர், "நாயகமே, ஒருவனுக்குப் பரவசநிலை ஏற்பட்டதும், அவன் மாவரைக்கும் கல் இயந்திரம் போல் சுழன்று கொண்டிருக்கிறான். அப்போது அன்ன பானங்களைக்கூட அருந்துவதில்லை" என்று தெரிவித்தபோது, "தொழுகை நேரத்தில் அந்த மனிதன் எந்த நிலையில் இருக்கிறார்?" என்று ஜுனைத் வினவினார்கள். "முஅத்தின் பாங்கு (தொழுகை அழைப்பு) ஒலியெழுப்பியதும், அவருக்குத் தெளிவு வந்து விடுகிறது" என்று அவர் கூறினார். "அப்படியானால், பாதகமில்லை" என்று ஜுனைத் தெரிவித்தார்கள்.

ஞான மகான்கள் சிலர், சிறு வயதிலிருந்தே புனித வணக்கங்களைப் பேணுதலுடன் செய்வதிலேயே உறுதி கொண்டு சீர்படுகின்றனர். வேறு சிலரோ, தங்களின் நீண்ட நெடிய வணக்கங்களால் மெலிவுற்று, பலகீனப்பட்டு விடுகின்றனர். எனவே, இவ்வாறான 'புனிதப் பண்பு'கள் இறைவனின் முடுகுதலை அடைந்ததன் மகிமையாலோ, ஞானோதயச் சித்தியின் மாண்பாலோ, இரட்சகனின் திருக்காட்சியைத் தரிசித்த மகத்துவத்தாலோ (மகான்களுக்கு) உண்டாகிவிடின், அதனால் எவ்விதக் குறையும் ஏற்பட்டுவிடாது. இதற்கு மாற்றமாக மட்டுமிருந்து விட்டால், அது வழிகெடுக்கும் ஷைத்தானின், துன்புறுத்தும் கீழான மனத்தின் வேலையாகிவிடும். சன்மார்க்கத்தின் ஏவல், விலக்கல்களைப் புனிதமாக கடைப்பிடிப்பதன் மூலம் தான் அடியான், ஞானோதய ஒளியையும், மற்றும் சிறப்பான கிருபாகடாட்சங்களையும் அடைய முடியும்.

இந்த மகத்தான அகமியங்களைப்பற்றி எல்லாம் உனக்குத் தெரியுமா? முதலில் ஏகாந்தத்தில் அமர்ந்து சிந்தனை செய்! பிறகு மெய்ப்பொருளுடன் பிணைந்து ஒன்றிக்க முயற்சி செய்! முதலில் இறைவனுடன் உன்னதமாக இணைந்து விட்டுப் பிறகு (மற்றவர்களையும்) புனிதமாக இணைப்பவனாக (வாஸில்) சமைந்துவிடு! ஏ, பொடுபோக்கென்ற பேராசைக் கடையில் அமர்ந்துள்ளவனே, அந்தோ கைசேதம்! உன் தூய உள்ளம் செத்து, இதயமும் கருத்துவிடுமே! "புனித இதயங்கூடச் சில சமயங்களில் துருப்பிடித்துவிடும். அந்தத் துருவை நீக்கி, மெருகேற்றிப் பளப்பளப் பாக்கும் மருந்து திருக்குர்ஆனை அதிகமாக ஓதிவருவது தான்" என்று நபிபெருமான் (ஸல்) அவர்கள் அருளியுள்ளதைச் சிந்தித்துப்பார்! இரட்சகா, எங்களுக்குச் சத்தியமார்க்கத்தைத் துலக்கு! எங்கள் பொருட்டால் (மற்றவர்களுக்கும்) நேர்வழியைக் காட்டியருள்! எங்கள் மீது கருணைபுரி! எங்கள் பொருட்டால் (மற்றவர்களுக்கும்) தலைபுரி. எங்களை மெய்ஞ்ஞான நாதர்களாகச் சீர்படுத்து! மேலும் எங்கள் பொருட்டால் பிற படைப்புகளையும் ஞானமகான்களாக ஆக்கியருள்! நான் எங்கிருந்தாலும் இரட்சகா, அங்கெல்லாம் உன் சுபசோபனத்தை மட்டற்று பொழிந்தருள்.

- 29 -

ஏ, என் முன் அமர்ந்திருப்போனே, ஞானோதயம் (இல்மு) பெற்றுச் சீர்படுவதற்காக முதலில் மக்களுடன் சேர்ந்து வாழ்! பின்னரே ஏகாந்த (மெய்வணக்க)த்தைத் தேடு! பின்னரே, மற்றவர்களை இறைவனோடு பிணைத்துவைக்கும் (வாஸிலாக) வழிகாட்டியாக ஆகலாம். சன்மார்க்க நெறிமுறை இன்னதுதான் என்று தெரிந்து கொள்ளாமல், மெய்வணக்கத்தில் ஈடுபடுபவன் சீர்படுவதைவிட, அதிகமாக வழி தவறவும் கூடும். எனவே தான், சன்மார்க்க நெறிமுறை என்ற தீபத்தை உன் கையில் எடுத்துக்கொள்! அதன் மகிமையால்தான் மெய்ஞ்ஞானத்தில் (மாளிகையில்) சிலாக்கியமாக



நுழைவாய். பிறகே உலக சாதனங்களையும், உற்றார், உறவினரையும் புறக்கணித்து ஏகாந்தத்தில் மகத்தாக அமரலாம். உனக்காகக் கடாட்சமாக, இறைவன் அருள் புரிந்த வரப்பிரசாதங்(முக்ஸும்)களை வெறுத்து ஒதுக்கி விடுவதும் நல்லதல்ல. ஆகவே, உன் மனைவி மக்களின் போசனையையும் கவனி. மற்றுமுள்ள அருட்கொடைகளை அவர்களுடன் பகிர்ந்து கொள். பின்னர் துறவறத்தை மேற்கோண்டு புனிதத் துறவியாகிச் சீர்படு.

வேண்டுமென்றே (இறைவன் தந்த அருட்பாக்கியங்களைப்) புறக்கணிப்பதைக் கைவிடுவது போன்றே, பேராசைப்படுவதையும் தவிர்த்துப் புனிதப்படு! பேணுதலுடன் ஒழுகிச் சீர்படு! படைப்பாளன் அல்லாத பிற படைப்புகளையும், பிறரையும், மற்றும் (உலக) சாதனங்களையும் மட்டும் நம்பி இருக்காமல் (இரட்சகன் சகாயத்தின் மீது நல்லுறுதி கொண்டு) தனித்திரு! உன் ஜோதி பிரகாசமான விளக்கு அணைந்து, என்றென்றைக்குமே அஞ்ஞான இருள் உன்னை பிடித்துக் கொள்ளலாமென்ற அச்சங்கொள்! இந்த மகத்தான நிலையில் நீ சீர்பட்ட பின்னர்தான் மெய்ப்பொருளான் இறைவன் உன் விளக்கில் தன் மகிமைமிக்க நல்லுதவி என்ற எண்ணெய்யை நிரப்பி அருள் புரிவான்; உன் ஞானோதயத்தில் வெளிச்சமுண்டாக்குவான். தனக்குச் சித்தியான மெய்ஞ்ஞான விளக்கத்தின்படியே மெய்வணக்கம் புரிந்த அடியார்களுக்கு, அவர்கள் அதற்குமுன் தெரிந்துகொள்ளாத மகத்தான ஞான அகமியங்களையெல்லாம் உதிப்பாக்குவான். நாற்பது நாட்கள் வரை கலப்பற்ற சித்தசுத்தியோடு தன்னை மெய்வணக்கம் புரிந்த மெய்நேசர்களின் புனித இதயத்திலிருந்து, கருணைக் கடலான இறைவன், மெய்ஞ்ஞான ஊற்றை நாவின் வழியாக ஓட அருள்புரிகிறான். பின்னர் மூஸா நபி (அலை) அவர்களுக்குக் காட்சியளித்த புனித 'நெருப்பு' (ஞானப்பிரகாசம்) இந்த உத்தம நாதர்களுக்கும் காட்சி தரும்.

மூஸா நபி (அலை) அவர்கள் தூர் மலையில் நெருப்பை (இறை ஜோதியை) தரிசித்தும், தங்களோடு இருந்தவர்களிடம், "நீங்களனை

வரும் இங்கேயே இருங்கள். எனக்கு (இறைவனின்) ஜோதி காட்சியளிக்கிறது" என்று கூறினார்கள். உண்மையிலேயே ஜோதியைக் காட்டியதன் மூலம் இறைவன், அவர்களுடன் வசனித்தான். அந்தப் புனித ஜோதியே மூஸா நபியை இறைவன் திருச்சந்நிதியை அணுக வைத்தது. அதைத் தரிசித்த மகிமையால் அவர்கள் தங்களின் வழிகாட்டியையும் பெற்றார்கள். (இவ்வாறே சித்த சுத்தியில் புனிதம் பெற்ற) மெய்யடியார்கள், தங்களின் தூய இதயமென்ற விருட்சத்திலிருந்து ஒரு (நெருப்பை) ஒளியை தரிசித்தும், தங்களின் கீழான மனத்தையும், பாசங்களையும், தங்களின் உள்ளமையையும், பிற சாதனங்களையும் நோக்கி, 'நான் ஒரு ஜோதியைக் காண்கிறேன். நீங்கள் (என்னை விட்டு) அப்பாலாகி விடுங்கள்' என்று ஆணையிட்டு விடுவார்கள்.

உன் புனித அகம் (பாத்தின்) தூய இதயத்தைக் கல்பை) நோக்கி, என்னுள் தான் உன் இறைவனிருக்கிறான்; என்னில் தான் உன் இறைவனிருக்கிறான். ஆகவே, நீ படைப்புகள் முன் தலை சாய்க்காமல், என்னுள்ளிருக்கும் இறைவனையே வணங்கு. என்னை மட்டுமே அறிந்து அணுகு. மற்றவர்களை அப்பாலாக்கிவிடு. படைப்பு களை ஒதுக்கிவிட்டு என் மூலமே இறைவனோடு தொடர்பு கொள். என்னை மட்டுமே தேடிச் சீர்படு. என் ஞானபிரகாசத்தின் திசையில் திரும்பு. என் ஆளுகையில் வா" என்று உபதேசிக்கும். இந்த மேலான 'உணர்வு' உனக்குச் சம்பூர்ணமாகச் சித்தியானால்தான், அல்லாஹ்வின் திருச் சமூக தரிசனம் கிடைக்கும். அந்த நிலையில் தான் உன்னால் வெளிப்படும் அமல்கள் யாவும் புனித ஞானயோக வணக்கம் (சுலூக்) ஆகும். உனக்கு ஆணையிடப் படுவதெல்லாம், அவன் மூலமே ஆணையிடப்படும்: களங்கம் அப்பாலாகி விடும்; திரைகள் விலகி, இதயத்துக்குச் சாந்தி சித்தியாகும்; அமைதி கடாட்சமாகும்.

பிர்அவ்னிடம் போகும்படி மூஸா நபிக்கு ஆணை பிறந்தது போல், "ஏ, புனித இதயமே, கீழான மனத்தையும், அதன் தீய



பாசங்களையும், ஷைத்தானையும் அணுகி, அவைகளுக்கு என் சீரிய பாதையை விளக்கி, அவைகளை என் சமூகத்தின் பக்கம் நடக்கச் செய்!" என்னைப் பின்பற்றி வாருங்கள். உங்களைச் சத்திய வழியில் திருப்பிவிடுகிறேன்' என்று "அழை" என்று இதயத்துக்கு ஞானோதய மாகக் கட்டளை பிறக்கும். நீ முதலில் படைப்புகளோடு கலந்துறவாடிப் பிறகே பிணைப்பை அறுத்துக் கொள்ளவேண்டும். சேர்ந்து பழகிப் பின்னரே அவர்களையும் (இரட்சகன் சந்நிதியில்) சேரும்படி செய்ய வேண்டும். ஏ, அப்பாவியே! உன் மகத்தான சக்திகளெல்லாம், உன்னி டமிருந்து பிரிந்து ஓடிவிடும் நிலையில் அல்லவா (தாழ்ந்து) கிடக்கிறாய். (உனக்கு நேர்வழி காட்டும்) உன் நண்பர்கள், நீ நன்றிக்கு அருகதையற்றவன் என்று கருதி, உன்னை ஒதுக்கிவிட்டிருக்கின்றனர். இம்மையின் சோதனைகளும், மறுமையின் வேதனைகளும் ஒன்று சேர்ந்து, உன் புதைகுழியிலும் புகுந்து கசக்கிப் பிழிவதால், உன் எலும்புகள் இடம் விட்டு இடம் மாறிப்போகும். மேலும், அச்சமயம் முன்கர், நக்கீரின் கேள்விகளுக்குப் பதில் கூற முடியாத ஊமையாகி விடுவாய். புதைகுழியின் வேதனையோடு நரக வாயிலும் உன் பக்கம் திறக்கப்பட்டு, அதன் கொதிப்பும் உன்னைச் சூழ்ந்து கொள்ளும்.

அருமந்த நேசர்களே! இம்மை என்ற இவ்வீட்டில் ஒழுக்க சீலர்களாகத் திகழுங்கள்! உங்கள் சன்மார்க்கமும், அகமும், புறமும் புனிதமாகத் திகழட்டும்! அவ்வாறானால் தான், இறைவனின் 'திருமுன்' உங்கள் கண்களும், காதுகளும், வாயும் சிறப்புப் பெற்றவை களாக நின்று, இறைவனின் (அகமியத்) திரைகள் அப்பாலாகி, அவனை தரிசிக்கும் பாக்கியம் பெறுவீர்கள். அவனே உங்களுக்கு ஞான அமுதை ஊட்டுவான்; சக்திக்கு மேல் சக்தியையும், ஞானோதயத்துக்கு மேல் ஞானோதயத்தையும், தீர்க்காயுளையும், சிரஞ்சீவித் தன்மை யையும், இரணத்துக்கு மேல் இரணத்தையும் மட்டற்று பொழிவான்; உங்கள் திருநாமத்தை ஞான மகாத்மாக்கள், பொறுமைசாலிகள், உத்தமசீலர்களின் பட்டியலில் சேர்ப்பான். நீங்கள் நன்றி மிக்க அடியார்களின் (ஷாக்கிர்களின்) கூட்டத்தில் சேர்க்கப்படுவீர்கள். "அவர்

(மனிதர்)கள், தங்கள் நிலையை மாற்றிக் கொள்ளாத வரையில், இறைவன் அதை மாற்றிவிடமாட்டான்" என்பது அல்லாஹ்வின் திருவாக்காகும்.

-30 -

அங்கம் எதுவும் ஊனமாகி இனி அதை வெட்டி எடுக்காமல் குணப்படுத்த முடியாது என்ற நிலையிலுள்ள மனிதனுக்கு, மயக்கம் கொடுத்து, அந்த அங்கத்தை வெட்டி எடுத்துக் குணப்படுத்துவதுபோல், இறைவனின் மெய்யன்பர்கள் (அஹ்லுல்லாஹ்) சன்மார்க்கத்தின் ஏவல் விலக்கல்களைப் புனிதமாக ஏற்று ஒழுகுவதன் மூலமும், தீய ஒழுக்கங்களைத் தவிர்த்து தூய்மையடைவதன் மூலமும், ஞானோதய அருளின் மகிமையாலும், இறை விதிப்புக்கு (தக்தீருக்கு)ப் பணிந்து மனம் பொருந்தி மெய்யுறுதியைத் திடமாக்கிக் கொள்கின்றனர்.

பிணியாளிகளுக்கு மயக்கம் தெளிந்ததும், விதவிதமான மாறுதல்கள் தெரிவது போன்றே, மெய்நேசர்களுக்கும் இறைவனின் அருள்மாரிகள் (இனாயத்துக்கள்) சித்தியாகின்றன.அவர்கள் பசியின் (இன்னலை மகிழ்வுடன் ஏற்ற) பின், இறைவன் அவர்களுக்கு அமுதூட்டுகிறான்; தாகத்தின் (தவிப்பை மௌனமாக ஏற்ற) பின், அமுத பானமளிக்கிறான்; நிர்வாணச் சோதனையை அவர்கள் சகிப்புடன் ஏற்றுத் தேர்ந்த பின்னர், மகிமைமிக்க உடையை அவர்களுக்கு உடுத்துகிறான். மகத்துவம் பொருந்திய ஞானப் பாட்டையில் நீ நடந்து செல்லும் வரை (இம்மையின் செல்வங்களைக்) குறைவாக ருசிக்கவே ஏவப்பட்டுள்ளாய். அப்படியானால்தான் உன் ஆசாபாசங்கள் முழுவதையும் ஒதுக்கி, சன்மாக்கத்தின் ஏவல் விலக்கல்களை நீ சம்பூர்ணமாக கடைப்பிடிக்கவும், தீமைகளை விலக்கிக் கடமைகளைக் களங்கமற்று நிறைவேற்றவும் இயலும். இவ்வாறு கழியும் நாட்களில் உன் பாதங்கள் இறைவனின் திருச் சந்நிதியை நோக்கி மகத்தாகச் சென்று கொண்டிருக்கும்.



இறைவனின் மெய்நேசர்களில் பல வகையினருண்டு; அவர்களில் ஒரே நாளில் ஞானமார்க்கப் பாதையைக் கடந்து ஈடேற்றமடைந்தவர்களுமுண்டு; மாதக் கணக்கில், ஆண்டாண்டுக் கணக்கில், புனிதம் பெற தவமிருந்து சீர்பெற்றவர்களும் உண்டு. ஏன், எதற்கு, என்ற வீண் கேள்விகளில் உன் அருமையான நேரத்தை பாழ்படுத்தாமல், உறுதியுடன் இடுப்பைக் கட்டி நின்று நல்வணக்கம் புரிந்து மகிமை பெறு. உன் அன்பனின் (அல்லாஹ்வின்) மாளிகையில் நீ ஊழியம் (மெய்வணக்கம்) புரிய அமர்ந்துவிட்டால், உனக்கு ஊழியம் புரிய, அந்த அன்பன் பணிப்பெண்களை நியமிப்பான். அப்பெண்களில் எவளாவதொருத்தி, உன்னை உவந்து மணந்து கொண்டு, உன் வதனத்தையே மாற்றி விடுவதும் சாத்தியமே.. அப்போது உன் மண்வெட்டி, கூடைகளை (ஜீவனோபாயச் சாதனங்களை) நீ விலை கூறி விற்றுவிட்டு ஒரு மந்திரியாகவோ, மாகாண அதிபதியாகவோ, பிரதான அதிகாரியாகவோ, அரசனின் பிரதிநிதியாகவோ நியமிக்கவும் படலாம்.

இறைவனைச் சம்பூர்ணமாக அறிந்து, ஞானோதயம் சித்தியான மகான்கள், தங்களிலிருந்து அதிகமான புனித நிலை (கஷ்பு, கராமத்)கள் வெளிப்பட வேண்டுமென்று எண்ணவே மாட்டார்கள். நீ இறைவனுடன் முடுகுதல் பெற்றதும், அவன் தன் பேரின்பங்களை உன் மீது மட்டற்று பொழிவிப்பான். முழுமையான தூய துறவு நிலை உனக்குச் சீர்பட்ட பின்னரே, ஞானோதயம் கிட்டும். பின் நீ யார்? அமர லோகத்தில் (ஆலம்- மலகூத்) உன் இடம் யாது? என்பன உனக்கு விளங்கும். மெய்நேசர்கள் (தங்கள் ஞானத் தொடக்க நிலையில்) தங்களின் இன்ப நுகர்ச்சிகளையும், படாடோபங்களையும், வீட்டையும், உற்றார், உறவினரையும் அப்பாலாக்கி விடும்போது, ஓர் அடி முன் வைத்தால், ஓர் அடி பின்னே இழுக்கிறது. அதாவது அவர்கள் ஈடேற்றம் பெறவேண்டுமென்ற ஆவல் அவர்களை முன்னே தள்ளுகிறது. உயர்வு சித்தியாகுமோ, ஆகாதோ என்ற ஐயம் பின்னே இழுக்கிறது. இவை யாவையும் மறந்த பின்னர், துறவு நிலை சித்தியாகிறது. அப்போது தமக்கு நன்மை, தீமை பயப்பவை

யாவையும் அவர்கள் தம்மை அறியாமலே புறக்கணித்து விடு கிறார்கள். இந்தப் புனித நிலையில் இறைவனின் திருச்சமூக வாயிலில் அமர்ந்து விடுகிறார்கள்; அருகேயுள்ள ஊழியர்களுடன் நம்பிக் கையும், சந்தேகமும் கலந்த பக்குவத்தில் தாங்களும் நின்று கொள்கிறார்கள்.

அவ்வடியார்களுக்குத் தங்கள் லட்சியம் எதுவென்றே புலப்படுவதில்லை. அப்போது அவர்கள் மீது இறைவனின் கருணை மிக்க பார்வை திரும்புகிறது. அதன் மகிமையால் அவர்களுக்குச் சர்வ ஞானங்களும் படிப்படியாக உண்டாகி, அனைவரும், மகான் களாக்கப்படுகின்றனர். இவ்வாறு ஒவ்வோர் ஊழியமாக அவர்களிடமிருந்து பெறப்பட்டு, இரட்சகனின் சந்நிதியின் காவலாளிகளாயும், கண்ணியமுடன் ஆஸ்தானத்தில் நுழையும் பாக்கியம் பெற்ற கனவான்களையும், மாலையும், கச்சையும், தலைப்பாகையும், அங்கியும் அணிவிக்கப் பெற்று, மகத்தான ஞான அகமியங்களைப் பாதுகாக்கும் புதிய ஊழியர்களாயும் இறைவனால் நியமிக்கப்படுவார்கள். இவ்வாறு உயர்வு அடைந்த பிறகே, அவர்களும் (யூசுப் நபி (அலை) அவர்கள் எழுதியது போல்), "நீங்கள் அனைவரும் உற்றார், உறவினரோடு என்னிடம் வந்து மகிமை பெறுங்கள்" என்று தம்மை சேர்ந்தோர்களுக்குச் சுபச் செய்தியிடுப் பார்கள். சர்வசக்தனான அல்லாஹ், "அந்த மகான்களின் உன்னத நிலையை மாற்ற மாட்டேன்" என்று விதித்து, நீங்காத தோழமையை அவர்களுக்கு அருளுகிறான்.

அடியானுக்குப் பவித்திரமான ஞானோதயம் சித்தியான பின், துறவறம் தேவை இல்லாமல் ஆகிவிடுகிறது. இவ்வாறு மாண்பு பெற்று இலங்கும் மகாத்மாக்கள் எங்கோ லட்சத்தில் ஒருவர் தான் தோன்றுகின்றனர். சிறப்புமிக்க இப்படிவங்கள் அவ்வடியார்களுக்கு இறைவனின் திரு நாட்டத்தாலும், சங்கல்பத்தாலுமே 'வரமாக' அருளப் படுகின்றன. "பழித்துக் கூறும் கீழான மனத்தின் (நப்ஸின்) மீது ஆணையிடுகிறேன்" என்று கூறும் கூட்டத்தில் நீ சேர்ந்துவிடாதே! உன்



மனத்தின் தீய இயல்பை அகற்றி, சீர் செய்வதற்காக அதை நோக்கி, "நீ இவ்வாறு பேசியதன் கருத்தென்ன? எந்த நோக்கத்துக்காகக் காலால் நடந்தாய்? எந்த எண்ணத்தோடு உணவுண்டாய்? உன் செயல்கள் திருக்குர்ஆனுக்கும் ஹதீசுக்கும் பொருத்தமானவைதாமா?" என்று விசாரணை செய். இவ்வாறு மனத்தைப் புனிதப்படுத்திய பிறகே மெய்யுறுதி (யகீன்) என்ற படியில் அமரவேண்டும். அதுவே உன் மெய்விசுவாசம் சீர்பட்ட நிலையாகும். கடமையான வணக்கங் களையும், துறவையும் பரிபூரண மெய்யுறுதியோடு கடைப்பிடி. (அந்தோ பரிதாபம்) உன் பிரார்த்தனையை அல்லாஹ்வான இரட்சகன் ஏற்றுக் கொண்டுவிட்டாலோ, சாந்தியும், அமைதியும் பெற்றுவிடுகிறாய்; ஒப்புக்கொள்ளா விட்டாலோ (அறியாமையால் அல்லாஹ்வையே) ஆட்சேபிக்கத் துணிகிறாயே! தன் செயல் களனைத்திலும் இறைவன் பக்கம் சம்பூர்ணமாகத் திரும்பி விடுவது தான் மெய்நேசர்களின் (சித்தீக்கீன்களின்) புனிதப் பண்பாகும்.

மெய்நேசர்கள் தாங்கள் எய்தியுள்ள ஞானப்படிவங்களை (அஹ்வால்) மறைத்துவைக்க நேரிட்டுவிட்டால், லோகாயதக் கொடுக்கல் வாங்கல்களி கூடத் தூய இதயத்தை இறைவனிடம் சமர்ப்பித்துவிட்டுப் புறச் சடலத்தோடு மட்டுமே படைப்புகளை நெருங்குகின்றனர். மனிதன் நல்வணக்கம் புரிந்து, சீர்பட்டுத் தன் களங்கமான ஆத்மா, வைஷ்தான், இம்மையின் பாசங்கள் அனைத் தோடும், சதாவும் போர் (ஜிஹாத்) செய்து, (தன்னிடம் மறைந்து கிடக்கும்) மிருகக் குணங்களைக் களைந்து, சம்பூர்ண மனிதப் பண்பை வளர்த்துக் கொள்ள வேண்டும். "ஏ மூடா, உன்னை மண்ணிலிருந்து படைத்துப் பின் இந்திரியத் துளியிலாக்கி, பூரண மனிதனாக்கிச் சீர்படுத்திய இரட்சகனுக்கா மாற்றம் செய்கிறாய்? அவன் உன் மீது பொழிந்துள்ள அளவற்ற கருணைகளுக்குப் பகரமாக நன்றி காட்டாமல், வஞ்சகமா செய்கிறாய்? அவனை நிராகரிக்கிறாயா? உன்னைச் சரியாகக்கூடப் பார்க்க முடியாத படைப்புகளைக் கண்டு வெட்கப்படும் நீ, உன்னைச் சதாவும் தரிசித்துக் கொண்டிருக்கும் இறைவனைக்கண்டு வெட்கப்படுவதில்லையே!" என்று உன்னை நீயே ஆத்ம விசாரணை செய்து சீர்படு!

பகிரங்கமாகப் பாவச் செய்கைகளைச் செய்துகொண்டே, 'நான் இறைநேசன்' (ஔலியுல்லாஹ்) என்று பிதற்றித் திரிபவனே! இறைவன் உன்னை உள்ளும் புறமும் கூர்ந்து கவனித்துக் கொண்டு தானிருக்கிறான். உனக்கு வெட்கமோ, மானமோ இல்லை. இறைவன் அருளிய தனபாக்கியங்களை எல்லாம் மறைத்து வைத்துவிட்டு, வறுமையை மட்டும் கூறி ஓலமிடுபவர்களே! இம்மைக்காக மகத்தான மறுமையை விற்கிறீர்களே, உங்களுக்கு வெட்கமில்லையா? "உங்களிடமுள்ள சௌபாக்கிய, சம்பத்துக் களனைத்தும் இரட்சகனால் அளிக்கப்பட்டுள்ளவைதாம்." என்று இறைவனே கூறி எச்சரித்துள்ளவை நீங்கள் அறிவீர்களா? அதற்காக அவனுக்கு நீங்கள் காட்ட வேண்டிய நன்றி எங்கே மறைந்து விட்டது?

அருமந்தச் செல்வ, இறைவனுக்காக (இன்னவன் துறவு நிலையை ஏற்காமல் உல்லாச போகியாய் திரிகிறான் என்று) எவர் மீதும் குறை கூறிக் கொண்டிராதே? நீயும் மனிதன் தான். (உன்னிலி ருந்தும்) நன்மை, தீமையான அமல்கள் நிகழ்ந்து விடக்கூடும். உன் மெய்வணக்கங்கள் சீர்படாதவரை, பிறரை கெட்டவர்களாக மதியாதே! ஏனெனில், நன்மை தீமை எவை என்பதை தீர்மானிக்க வேண்டியது சன்மார்க்க நெறிமுறையே (ஷரீஅத்) அன்றி, உன் குறைமதியல்ல. வெளிப்படையான அமல்களைப் பற்றியவரை நீ இவ்வாறுதான் கடைபிடித்துவரவேண்டும். உள்ளத்தை (பாதினை)ப் பற்றிய வரையோ, நல்லவை, தீயவை எவை என்பதைப் புனித உள்ளம்தான் முடிவுகட்டவேண்டும். மார்க்க (பிக்ஹு)ச் சட்டங்கள் ஒருவிதச் சோதனையின் முடிவாயிருப்பதால், அவற்றை ஏவுவதும் தூய இதயந்தான். ஆனால், அந்த இதயம், இறைவனின் நல்லிணக் கத்துக்கு இணைந்து, நாட்டப்படியும், நேர்மையாகவும் ஒழுகி, உறுதி பெறாதவரை அதனால் சரியான தீர்ப்பளிக்கமுடியாது. நாம் பிறரை எவ்வாறு ஏவ வேண்டும் என்ற பிரச்சனை எழும்போது (மேலே கூறிய வழியைத் தான்) மெய்ஞ்ஞானம் நமக்குக் காட்டுகிறது.



முதலில் நீ (இறைவனின் சன்மார்க்க) ஏவல் விலக்கல்களைப் புனிதமாக ஏற்று ஒழுகிச் சீர்படு! பின்னர் ஞானோதயம் கடாட்சமான அடியானாக ஆகலாம். இந்த ஞானநாதராய் விட்ட நிலையிலும்கூடச் சன்மார்க்க நடைமுறை (ஹுக்மு) சிறப்பாக மிளிர்ந்து, இரட்சகன் திருமுன் நல்லிணக்கத்துடன் தலை சாய்த்து நிற்றல் வேண்டும். சன்மார்க்க நெறிமுறையின் வழிமுறைகளைச் சம்பூர்ணமாக நிறைவேற்றிக் கொண்டேதான் மெய்ஞ்ஞானப் படிவங்களில் ஐக்கியமாக வேண்டும். ஏனெனில், சன்மார்க்க நெறிமுறை (ஷரீஅத்) நல்லதல்லவென்று தீர்ப்பளிக்கும் அனைத்தும், நிராகரிப்பு நெருப்பில் தள்ளும் நீசத்தனமானவையாகும். சத்தியசீலர்களான மகான்களின் திவ்விய சமூகத்தில் அமரும் பாக்கியம் உனக்குச் சித்தியாகிவிட்டால், பிறகு அவர்கள் நிற்கும் புனிதத் தலத்தில் நிற்பாய். அவர்கள் அருந்துவதையே அருந்துவாய். உன் உயர்வான ஏகாந்தத்திலும், மக்களோடு பழகிக் கொண்டிருக்கும்போதும் கருணையாளனான இறைவனுக்கு ஒப்பற்ற நன்றி செலுத்து.

ஏ நகரவாசிகளே, உங்கள் போக்கை நான் வெறுக்கிறேன்: நீங்கள் என் நிலையை வெறுக்கிறீர்கள், நானும் நீங்களும் ஒன்றித்துக் கொள்ள முடியாத படிவத்திலிருந்து வருகிறோம். அண்ட சராசரங்கள் அனைத்தையும் படைத்த அல்லாஹ்வின் கருணைமிகுந்த சக்தியால்தான் நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். (இன்றேல்). நம் இதயப் பறவைக்கு அமைதியும், சாந்தியும் ஒருபோதும் கடாட்சமாகாது. உங்கள் மனைவி மக்களை, அண்டை அயலார்களை, ஆளும் அரசர்களை விசுவாசிப்பதிலேயே யௌவனத்தைக் கழித்துக் கொண்டிருக்கிறீர்கள். எவ்வாறிருப்பினும் அவனிடம் சென்றுதான் தீர வேண்டுமென்பதை உணர்ந்திருந்தும், அவனையும் அமரர்களையும் விசுவாசிக்காமல், அவனைக் கோபமடையச் செய்து கொண்டிருக் கிறீர்கள். நீங்கள் மரணத்தின் பிடியில் சிக்காமலிருக்க முடியாது. நிச்சயமாக மரித்தே தீர வேண்டும். (மறுமையில்) உற்றார், பெற்றோர், நண்பர்களையும், உங்களை ஆட்சிபுரிந்த அரசர்களையும்

சந்திக்கத்தான் போகிறீர்கள். மறுமை நாள், எப்போது வருமென்று யாரும் கூறிவிட முடியாது தான். ஆயினும், மரணமான உடனேயே ஒவ்வொருவருக்கும் அன்றிலிருந்தே மறுமை தொடங்கி விடுகிறது.

இறைநேசர் (ஔலிமார்)களோவெனின், இறைவன் திருமுன் முடுகிவிட்ட மகிமையால், சாகாத சிரஞ்சீவிகளாய்த் திகழ்கின்றனர். விலக்கப்பட்டதை (ஹராமானதைத்) தவிர்த்தல் என்ற மரணம் (மௌத்), சந்தேகாசுபதமானதை புறக்கணித்தல் என்ற மரணம் (மௌத்) ஆகுமென்றிருந்தாலும், அதையும் விட்டு ஒதுங்கிக் கொண்ட மரணம் (மௌத்), திட்டவட்டமாக ஆகுமானதைக் கூடச் சில சமயங்களில் செய்யாமல் அப்பாலாக்கிக் கொண்ட மரணம், (மௌத்), இறைவனையன்றி படைப்புகளின் பக்கமே ஒதுங்காமலிருந்த மரணம் (மௌத்), ஆகப் பல மரணங்களைக் கண்டு, அந்த லோகபாசங்கள் விஷயத்தில் பிணத்துக்குச் சமமாகி, அவைகளைத் தேடியலையாமலும், அவற்றின் பக்கம் நெருங்காமலும் சீர்பட்டு விட்டவர்களே இவர்கள்.

வடிவமில்லா அச்சில் உருக்கொண்ட அந்த மானசீக வடிவத்திற்கு வல்லோனே தன் மகிமையால் மகத்தான ஜீவனை அருளுகிறான். அவன் திருநாம மகிமைக்காகவே அவர்கள் நடக்கின்றனர்; உட்காருகின்றனர். இறை விதிப்பு (குத்தீர்) என்ற கடலில் முக்குளித்து அவர்களின் புனித இதயம் ஞானோதயம் பெற்று, இறைவனின் திருச்சமூக வாயிலின் படிமீது அமர்ந்துவிடுகிறது; கண்விழித்துப் புரியும் நல் அமல்களையே அவனுக்காகச் சிறந்த ஊழியமாகக் கருதுகிறது. இரட்சகனோடு ஐக்கியமாகி விடுவதையே (அந்த இதயம்) தனக்குரிய 'தூக்க'மாய் ஏற்கிறது. தூய்மையுடன் தொழுது விட்டுப் பிறகு அயர்ந்து தூங்கும் உத்தமோத்தமர்களைக் குறித்து இறைவன் வானவர்களிடம் கூறிப் பூரிப்படைகிறான். (மகான்களுக்கு) சடலம் கூடு போன்றும், புனித ஆத்மா (ரூஹ்) பறவை போன்றுமே திகழ்கின்றன. ஞான நாதர்கள் சர்வ படைப்புகளையும் ஈக்களாகவும், விட்டில்களாகவும், பட்டுப்பூச்சிகளாகவுமே மதிக்



கின்றனர். ஆகவே, இப்பிராணிகளின் மகத்தான மர்மங்களை நீங்கள் அறிந்து கொள்ளமுடியாது.

ஞானோதயம் பெற்று அறிஞனாகு! அடிமுதல் நுனிவரை முட்டாளாக இருப்பவனே, இறைவன் சமூகத்தில் வீணனாக மதிக்கப்படுகிறான். தனக்காக விதிப்பில் நாசம் எழுதப்பட்டுள்ளவனே இரட்சகன் சமூகத்திலும் நாசமானவனாக இருக்கிறான். தானதருமங்களைச் செய்யும்படி உன்னைத் தூண்டுபவனே, உனக்கு உயர்வான நேசனாவான். யாசகத்தைத் தொழிலாகக் கொண்டு செல்வனானவன், எப்போதும் பிறரிடம் யாசித்துக் கொண்டே தானிருப்பான். வெளிப் படையான இஸ்லாத்தின் கோலத்தைக் கொண்டு மட்டும் நீ திருப்திப் பட்டுவிடாதே! (மெய்யுறுதி என்ற படிவத்தையும் நீ பாக்கியமாகப் பெற வேண்டும்.) நீ எப்போதுதான் மெய்வணக்கத்திலும், புனித ஒழுக்கத்திலும் சம்பூர்ணமானவனாகப் போகிறாயோ!

(நான் சொற்பொழிவாற்றும்போது) என் அவயவங்கள் என்னையும் அறியாது ஆடினால், (உங்கள்) நிலையைப் பார்த்து என் இதயம் எரிகின்றது என்று உணருங்கள். ஏ இம்மையே, என் மெய் நேசர்களுக்கு ஆரம்பப் படிவத்தில் உன் பாசங்கள் கசப்பாகக் கடவது! உன் மீது அவர்கள் பற்றுக் கொள்ளாமலிருக்கட்டும். இறுதிப் படிவத்தில் அவர்களுக்கு உன் பாசங்கள் ஊழியர்களாகச் சமையட்டும்! அவ்வாறு ஆனால்தான், உன்னில் அவர்கள் மோகம் கொண்டு விடாமல் இருப்பார்கள். ஹஜரத் ஈஸா நபி (அலை) அவர்களிடம் இறுதிநாள் குறிதது பேசப்படும்போது, அதன் திடுக்கத்தை நினைத்துத் தன் செல்லக் குழந்தையைப் பறிகொடுத்த தாய் அலறுவதுபோல் அலறித் துடிப்பார்கள். மேலும், "இறுதி நாளின் திடுக்கம் குறித்து பேசப்படும்போது, மனிதன் திடுக்கிடாமல் நிம்மதியுடன் இருப்பது தகுதியல்ல" என்றும் கூறுவார்கள்.

- 31 -

நீ சர்வமும் அறிந்தவன்; உன்னிலே எந்த உணர்வையும் காணோம்; நீ எவர் மீதும் மெய்யன்பு கொண்டதுமில்லை; உன் மீது எவரும் மெய்யன்பு காட்டவும் மாட்டார்கள். ஞானநாதர்கள் (ஆரிபுகள்) பூவுலகில் நீண்டநாள் இருந்து, உயிர் வாழவும் ஆசைப்பட மாட்டார்கள். ஆசாபாசங்களும், சீர்கெட்ட ஆத்மாவும், சுபாவச் சேட்டைகளும், ஷைத்தானும், எங்கே தங்களின் புனித நிலைகளைக் களங்கப்படுத்தி, படைப்புகளின் மோகத்தில் தங்களை சிக்க வைத்துக் கருணையாளனான இறைவனைத் தாங்கள் தரிசிக்க விடாமல் அப்பாலாக்கிவிடுமோ என்று அவர்கள் விசனிப்பார்கள். அல்லாஹ்விடம் பயபக்தியின்றி, அச்சமற்று, இவ்வுலகில் திரிபவனே பெருத்த மூடனாவான். பிரிய மைந்தா, (இம்மையில்) இறைவனுக்கு மிக மிக அஞ்சி நடந்து கொண்டவனே, மறுமையில் அச்சமற்று உலவும் பாக்கியசாலியாவான். என் உயிரின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். நீ இவ்வாறு சீர்பட்டுவிட்டால், இறைவன் உன்னைத் தன் திவ்விய சமூகத்தில் அமர்த்தி, அணைத்து, உரையாடி அமுதூட்டுவான். தன் திவ்விய தரிசனத்தை நீ கண்டுகளிக்கக் கருணை புரிவான்; தன் சந்நிதியின் திருவாயில்களை உனக்காகத் திறந்து விடுவான். நீ (இம்மையில் அவனை அடைய) வியாகூலத்துடன் தேட வேண்டுமென்றே அவன் விரும்புகிறான்.

(இது சமயம் ஒருவர் எழுந்து ஏதோ கேட்க நாடினார். ஆண்டகை அவர்கள் அதைக் கவனிக்காமலே மேலும் தொடர்ந்தார்கள்:)

இது (இம்மை) வியாகூலப்படத்தக்க இடமே தான். மின்னல் ஒரு தீவர் பிரகாசம். அதற்குப் பின்னர் தான் மழை கொட்டுகிறது. (வியாகூலமென்ற கருத்துக்குப் பிறகு தான் தண்ணீர் என்ற மழை வரும்) அடியான் சன்மார்க்க நடைமுறைகளைச் சம்பூர்ணமாகவும், உறுதியுடனும் கடைபிடித்து புனிதமடைந்த பின்னும், இறைவன் மீது கொள்ளும் மெய்யுறுதி (யகீன்) என்ற நூலை கையில் ஏந்தி, ஓதித் தன்



அகமியங்களை விளங்கிக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அவனுக்கு இறைவனின் திருமுடுகுதல் கிட்டும். அதற்காக(ச் சம்மானமாக) அருளப்படப் போகும் கடாட்சங்களும்கூட இந்த நிலைக்குப் பிறகுதான் பிராப்தமாகும். பனீ உகைல் கூட்டத்தில் ஒரு மனீதர் (திருக்குர்ஆனை மனனம் செய்த) ஹாபிளாயும், ஆலிமாயும் (திருக்குர்ஆனை அழகாக ஓதும்) காரீயாயுமிருந்தார். அவர் ஒரு நாள் கிறித்துவராக மாறித் தன் கழுத்தில் சிலுவையைத் தொங்கவிட்டுக் கொண்டு, முஸ்லிமல்லாதவர்கள் வசிக்கும் பகுதியில் உலவிக் கொண்டிருந்தார். அவரை ஒருவர் அணுகி, "உம் தூய பக்தி விசுவாசமும், ஞானவிசுவாசமும் என்ன ஆயின?" என்று வினவினார். அதற்கு, "அவர்கள் செய்து கொண்டிருந்த அமல்களின் பக்கமே சாய்ந்தோம். மேலும், நாம் அவர்களைப் புழுதியாக ஆக்கி விட்டோம்" என்ற (திருக்குர்ஆன்) வசனத்தையன்றி வேறு எதையும் தான் அறிந்துகொள்ள முடியவில்லை என்று பதிலளித்துவிட்டார்.

முதலில் உள்ளம் (பாதின்) இறைவனை நிராகரிப்பது (முர்தத்) ஆனதும், ஆத்மாவும், அதையடுத்து அவயவங்களும் இறைவனை நிராகரிப்பவையாகி விடுகின்றன. கூட்டுக்குள் பறவைகளின் நெஞ்சங்கள் துடிப்பது போன்றே, மஸ்ஜிதுக்குள் நய வஞ்சகர்களின் நெஞ்சங்கள் துடித்துக் கொண்டிருக்கின்றன. சன்மார்க்கத்தின் வெளிப்படையான ஏவல் விலக்கல்களே, நயவஞ்சகர்களுக்குக் கூடுகள் போன்றிருப்பதால், அவற்றிலிருந்து விடுதலை பெறுவதற்கு அவர்கள் ஆவல் கொள்கின்றனர்!

சன்மார்க்க நெறிமுறை (ஷரீ அத்து) மட்டும் எனக்கு அனுமதியளிக்குமாயின் உங்கள் பாவச் செயல்களையும், படுநாச காரியங்களையும் நான் வெளிப்படுத்திக் காட்டுவேன். உங்களைக் காபிர்களே, பாவிகளே, என்று பெயர் சூட்டி அழைப்பேன். ஆனால், சன்மார்க்கத்தின் புனித ஆணைகள் தான் அவ்வாறு கூறவிடாமல், என் கரங்களைப் பிடித்துத் தடுக்கின்றன.

சன்மார்க்கத்தையும், மெய்ஞ்ஞானப் பிரகாசத்தையும் தேடிப் பெறுவதுடன், அவைகளை மதித்துப் போற்றும் சிறந்த ஊழியர்களாகவும் திகழுங்கள். ஞானோதயந்தான் உங்களை அற்புதங்களை நிகழ்த்தும் சித்த புருடர்களாக (ஸாஹிபே கஷ்புகளாகச்) சமைத்துத் தூய்மைபடுத்தும். சன்மார்க்க நெறிமுறையின் மகத்தான அகமியங்களைக் கற்றுணர்ந்த பின்னரே, துறவுநிலை பூண்டு ஏகாந்தத்தில் அமரவேண்டும்.

நீ ஆசாரசீலர்களான மகான்களுடன் அமரும் பாக்கியம் பெற்றுவிட்டால், அவர்களே உனக்கு ஞானோதயத்தைக் கடாட்சித்துக் கருணை புரிவார்கள். உன் இதயம் உன்னைச் சீர்படுத்திச் சம்பூர்ணப் படிவம் வரை உயர்த்தி விடுமாயின், இறைவனின் திருச் சமூக வாயிலில் நீ நிற்க அருகதை பெறுவாய்; கனவான்கள் போல் அதில் நுழையவும் ஆவல் கொள்வாய்; வாயில் திறக்கப்பட்டதும், உள்ளே புக வருவாய். அப்போது "நீ மட்டுமின்றி, உன்னைச் சேர்ந்தவர்களையும் உன்னோடு அழைத்துவா!" என்ற கண்ணியமிக்க கட்டளையைப் பெறுவாய். ஏ தூய உள்ளமே! உன் அகத்தையும், அவய வங்களையும் சீர்படுத்திச் சாந்தி பெறு! அந்தச் சமயத்தில் (மறுமையில்) கொடுக்கல் வாங்கலோ, ஒருவருக்கொருவர் (தங்களின் அமல்களின் பலன்களை) மாற்றிக் கொள்ளுவதோ ஒருக்காலும் நடக்காது. (இறைவனின் அமுதை) உண்ணும் பாக்கியம் கிட்டாதவனே! இப்போதே அதை அருந்தப் பாடுபடு! (பானங்களை) குடித்திராதவனே, இப்போதே குடித்துப் பேரின்பம் பெற்றுக்கொள்! கிணறு தோண்டத் தொடங்கினால், மண் அள்ளும் கஷ்டத்தையெல்லாம் சகித்து உழைத்தால்தான், ஊற்றுக்கண் திறக்கும்; வருவோர் போவோர் அனைவருக்கும் அந்த இடம் தாகந்தணிக்கும். (அஃதேபோல்) நீயும் (நப்ஸுடன்) புனிதமாகப் போராடி, அதன் கஷ்ட நஷ்டங்களைச் சகித்துச் சீர்படாவிடின், மெய்ஞ்ஞான சொரூபியாக (ஆரிபாக)த் திகழமுடியுமா?

ஏ ஏழையே! அழகிய பொறுமையைக் கைக்கொள்! விரைவிலேயே இறைவனின் திருநோக்கு உன்மீது பட்டு, அதன் மகிமையால் உயர்ந்த பதவிகளை நீ எய்த முடியும். இரட்சகனின்



மகிமை மிக்க தலைப்பாகையும், அருள்மிக்க உடையும் உனக்கு அணிவிக்கப்படலாம். இரட்சகா, படைப்புகளை விட்டும் நாங்கள் அப்பாலாகக் கிருபை கூர்ந்து, உன் புனித முடுகுதலைப் பொழிவாயாக! படைப்புகளின் பக்கம் எங்கள் தேவைகளைத் திருப்பிவிடாமல், உன் பக்கமே நாங்கள் நாடிவிட அருளுவாயாக! சர்வ படைப்புகளையும் புறக்கணிப்பதில் உறுதிபெற்று, உன்னையே (உன் தியானத்தையே) எங்களில் பதியவைப்பாயாக!

- 32 -

(தானென்ற) அஞ்ஞான இருளிலிருந்து உன் இதயத்தைத் தூய்மைபடுத்திக் கொண்டு, இரட்சகனின் திவ்விய சமூகத்தில் அமர்ந்தவிட்டால்தான், மெய்ஞ்ஞானமென்ற சூரியோதயம் உன்னில் உதயமாகும்; உன் இதயமென்ற கண்ணில் இறைவனின் அகமியம் (அஸ்ரார்) என்ற அஞ்சனம் தீட்டப்படும்; இறைசங்கல்பம் என்பதின் ரகசியங்களின் விளக்கங்களும் உனக்கு வெளிப்படையாகும். அந்தப் புனித நிலையில்தான் நீ சுவர்க்கம் புகுவாய். அங்கே இறைவனின் மெய்யருள் பெற்ற உத்தமர்களுக்கும், உத்தம மகான்களான இறைநேசர்களுக்கும் உரித்தான சம்மானங்கள் குவிந்து கிடக்கும். அந்த மகத்தான பேரின்ப அமுதையும், பானத்தையும் ருசித்து உண்பாய். சுக நித்திரை செய்யும் பாக்கியம் உனக்கு அருளப்படும்; புனிதமடைந்த உள்ளத்தின் பூரிப்போடு 'நான் கருணையாளனான அல்லாஹ்வின் ஒளியா (அதிகாரம் பெற்ற பிரதிநிதி), 'நான் அப்தால்' (தன்னையே புனிதமாக மாற்றிச் சீர்பட்டவன்) என்று கூறிப் பெருமைப்படும் பாக்கியம் கிட்டும். இந்த மகத்தான கிருபைகளெல்லாம் பேராசைப்படுவதால் மட்டும் சித்தியாகிவிடாது.

இறைவனின் படைப்புகளிலே மேன்மை தங்கிய அடியார்கள்தாம் இறைசங்கல்பமென்ற அவன் நாட்டத்தை (முராதை)யே குறிக்கோளாகக் கொள்கின்றனர். ஏ சபையோர்களே! ஏ வீண்வாதத்தில் மூழ்கிக் கிடப்பவர்களே! நீங்கள் இவைகளைப் பற்றியெல்லாம் அறிவீர்களா? (இது சமயம் ஆண்டகையவர்கள்

தங்கள் வாயால் ஊதிவிட்டுக் கொண்டு நான்கு புறமும் முகத்தைத் திருப்பி) ஏகாந்தத்திலும்கூடப் புனிதமாக பயபக்தி கொள்ளாத ஒருவன் இறைவனை நேசிப்பதாகக் கூறினால், அவன் மகாப் பொய்யனாவான். ஏழ்மை(பக்ரை)யையும், ஏழை (பகீர்)களையும் உயர்வாக மதிக்காத ஒருவன் நபி பெருமானார் (ஸல்) அவர்களை நேசிப்பதாகக் கூறினால், அவன் பெரும் புரட்டனாவான். உன் முகக் கண்களால் இம்மையின் காட்சிகளைப் பார்க்கும் நீ , தூய இதயத்தால் (கல்பால்) மறுமையையும், பரிசுத்த உள்ளத்தால் (பாத்தினால்) உன் எஜமானனையும் தரிசிக்க வேண்டாமா? உன்னைப் போன்ற படைப்பான மனிதனுக்கு மரியாதை காட்ட வேண்டுமென்று, அவனுக்கு முன் சப்தத்தை உயர்த்தி கூடப் பேசாத நீ பகிரங்கமாகவே அல்லாஹ்வுக்கு மாறு செய்கிறாயே!

இரட்சகனின் மகத்தான மர்மங்களடங்கிய செயல்களில் தர்க்கம் புரிந்து கொண்டிருக்கிறாயே! உன் நடத்தை எவ்வளவு கேவலமானது! தன் ஆசாபாசங்கள், சுபாவச் சேட்டைகள், ஆத்ம ஆவேசங்கள் அனைத்தையும்விட அல்லாஹ்வையே மகத்தாக மதிப்பவர்களை அன்றியுள்ள அனைவரும் அறிவிலிகளே. இவை சாமான்ய அறிவுக்கு அப்பாற்பட்டவையாகும். ஆத்மாவையும் சுபாவச் சேட்டைகளையும் தன் வசப்படுத்துவது, (அல்லாஹ்வுடன்) ஒன்றித்து அவனுக்குப் பரிபூரணமாகப் பணிவதில்தான் இருக்கிறது. ஒரு மனிதன் பலாத்காரமாக இஸ்லாத்தைக் கைவிடும்படி வற்புறுத்தப்பட்டால், வேறு வழியற்ற நிலையில் இஸ்லாத்தை நிராகரிப்பதாகக் கூறிவிட்டால் கூட அவன் இதயத்தில் மெய்விசுவாசம் பரிபூரணமாகச் சாந்தியுடன் நிலவிக் கொண்டேயிருக்க வேண்டுமென்பதுதான் சன்மார்க்கத்தின் ஆணை யாகும். (இதனால் வறுபுறுத்தல் அவயவங்களுக்குத் தானேயன்றி இதயத்துக்கோ, அகத்துக்கோ அல்லவென்பதை உணர்கிறோம்) உத்தமமான சாதகன் எவ்வித இக்கட்டான நிலை எதிர்ப்பட்டாலும், தன் வெளிப்படையான (அவயவங்கள் செய்யும்) மெய்வணக்கங்கள் யாவையும் சன்மார்க்க நியதியை முன்னிருத்தியும், அமல்கள் அனைத்தையும் மெய்ஞ்ஞான உதிப்பின் துணை கொண்டுமே நடத்திவர வேண்டும்.



இவ்வாறு, சன்மார்க்கம், மெய்ஞ்ஞானமென்ற இரண்டு கண்ணாடிகளின் உதவியால், சாதகனுடைய அமல்கள் புனிதப்பட்டு விடுமாயின், அந்த நல்வணக்கங்களே அவனைச் சர்வசக்தனான இறைவனின் திவ்விய சமூகத்தில் கொண்டு சேர்த்துவிடும். அவனுடைய செயல்களில் ஓர் அம்சம் சிறந்தது, மற்றது சிறப்புடையதாய் இல்லாவிடின் திருச்சந்நிதியின் வாயிற்படியில் தான் அமர நேரும். உன் அமல்களைப் புனிதப்படுத்திக்கொள். அதன் மூலம்தான் உன் முயற்சி பாராட்டுதலுக்கு உரியதாகும்; உன் முடிவு (அஞ்சாம்) இறைவனால் புகழப்படுவதாலும், இருக்கும். இறைவனின் திவ்விய வாயிலில் நல்வணக்கத்தாலும், மெய்ஞ்ஞானத்தாலுமே புகமுடியும். இவ்வாறு நீ புனிதமடைந்து சீர்பெற்று விட்டால், நீ முதலில் செய்த அமல்களை விடச் சிறப்பான, பின்னர் நீ கடைப்பிடிக்க வேண்டியவையான அமல்கள் உனக்கும் உன் இரட்சகனுக்கு மிடையில் மறைந்து கிடக்கும் மகத்தான வணக்கங்கள் உனக்குத் துவக்கமாகும். அவை அமரர்களுக்கும் கூட விளக்கமாகாதவை யாயுமிருக்கும். (இப்புனித நிலைமையில்) சன்மார்க்கம் என்ற உணர்வு அவர்களை விட்டும் நீங்கி அப்பாலாகி, அதனினும் உயர்ந்த ஞானோதயம் உதயமாகும்.

இவ்வாறு தன்னை மறந்திருத்தலென்ற நிலை முழுவுபெற்றதும், மகான்கள் (இரட்சகன் தரிசன பாக்கியத்தையே நாடிப்) பசித்திருந்ததற் காக உணவுண்ணவும், தாகித்திருந்ததற்காகத் தாகசாந்தி செய்து கொள்ளவும், விழித்திருந்ததற்காகச் சுக நித்திரை செய்யவும், வியாகூலப்பட்டிருந்ததற்காகப் பேரின்பத்தை ருசிக்கவும் ஏவப் படுவார்கள்.

சீர்பெற்ற மகான்கள் இறைவன் கஜானாவின் மகத்தான அகமியங்களை எல்லாம் தரிசிக்கும் பாக்கியம் பெற்றுவிட்ட மகிமையால், படைப்புகள் அனைத்தையுமே மறந்துவிடும்படியான மாபெரும் வேலைகளின் பக்கல் திருப்பிவிடப்படுகின்றனர். நாட்டிலும் நகரத்திலுமுள்ள எந்த மெய்நேசர்களின் மீதாவது இறைவனின் காருண்ய நாட்டம் விழுந்துவிடுமாயின், அவர்கள் யார் யார் என்பது

இந்த ஞானநாதர்களுக்கு உதிப்பாக்கித் தரப்படும். அதிர்ஷ்டவசமாக அந்த மகான்கள் 'குத்பு'களாக இருந்துவிட்டாலோ, அவர்களுக்கு இவ்வுலகத்தாரின் அமல்களின் பலாபலன்கள், முடிவுகள் யாவும் சுட்டிக் காட்டப்படுகின்றன. அவர்களே இறைவனின் மகிமைக்குரிய புனித சீலர்களாயும், அவனுடைய அகமியங்களை அறியும் பாக்கியவான்களாயும், நபிமார்களின், ரசூல்மார்களின் பிரதிநிதி களாயும், சர்வ ஆட்சியையும் வகித்த நம்பிக்கைக்குரியவர்களாயும் இருப்பதால் தான், உலகமக்களின் சர்வ நன்மை தீமைகளையும் அறியும் மகா ஞானம் அவர்களுக்கு அருளப்படுகிறது. அத்துடன் உலகின் மகத்தான சர்வ பொக்கிஷங்களின் மர்மங்களும் அவர்களுக்கு அறிவிக்கப்படுகின்றன. அவர்களைத்தான் அவர்கள் காலத்தின் 'குத்பு' (கடையாணி) என்று அழைக்கிறோம்.

சித்திபெற்ற 'குத்பு' மார்களின் புனித இதயம் தரிசனைக்காக அமரர்கள் வந்துபோகும் புண்ணியத்தலமாகும். அது சதாவும் இறைவனையே தரிசித்துக் கொண்டிருக்கும். அடியார்களை இறைவன் தன் திவ்விய சந்நிதியின் பக்கல் திருப்பிக் கொள்ள நாடிவிட்டால், முதலில் அந்த அடியார்களை மனிதர்களை விட்டும் அப்பாலக்கி காட்டு மிருகங்களோடும், ஜின்னுகளோடும் பழகுமாறு செய்கிறான். அவ்வாறு பழகும் மகிமையால் மனித இயற்கையான அச்சம் அவர்களை விட்டு அகலுகிறது; இதில் சித்தியானதும் பல கோலங்களில் அவர்களிடம் வரும் அமரர்களோடு ஒன்றித்திருக்கும் பாக்கியம் கடாட்சமாகிக் காடுகளிலும், வனாந்தரங்களிலும், கடலிலும் அமரர்களின் சம்பாஷணைகளைக் கேட்கின்றனர். இறைவனோடு ஐக்கியமாகி விட நாடும் மெய்நேசனே, (நான் கூறுவதைக்) கேள்! ஏ.பரம்பொருளான இறைவனைத் தேடுபவனே, முதலில் அவனுடன் உரையாடும் அருளைப் பெறு! பிறகு, அவன் தரிசனம் கடாட்சமாகும். அமரர்களுடன் பேசும் அருகதையும், அவர்களைத் தரிசிக்க வேண்டுமென்ற சத்திய நாட்டமும் உனக்குச் சம்பூர்ணமாக சித்தியானதும் உனக்கும், அவர்களுக்குமிடையேயுள்ள (அகமியத்) திரைகள் அப்பாலாகி விடும். இறைவனின் படைப்புகளிலேயே,



அமரர்களின் உரையாடல்களும், ஒப்பற்ற அழகும்தான் நிகரற்ற பேரின்பம் அளிப்பவையாகும்.

இங்ஙனம் மகிமை பெற்ற மெய்யடியார்களை இரட்சகன் திரையிட்டு மூடித் தன் திருச்சந்நிதியில் அழைத்துத் தன்னோடு அமரும் பாக்கியத்தையும் அவர்களுக்கு அருளுகிறான். அவர்களின் புனித 'மௌனம்' (சுகூத்) உன்னதமானபிறகே, குழந்தையான மூஸா நபியை மறைத்து வைக்கும்படி, அவர்களின் அன்னைக்கு இறைவன், எச்சரித்ததுபோல், அவர்களின் இதயத்தை விளித்து, ஏ, மகான்களின் புனித இதயமே, (உன் அகமியமிக்க மேன்மை தங்கிய சிறப்பு எங்கே வெளியாகிவிடுமோ என நீ அச்சங்கொண்டால் ) உன் உடலைக் காடுகளிலும், பாலைகளிலும் மறைத்துக்கொள்! உற்றார், உறவினர்களையும் புறக்கணித்து அப்பால்ஆகிவிடு!" என்று (ஞானோதயம் மூலம்) அறிவிக்கிறான். (அவ்வாறின்றேல்) உன்னைவிட (அல்லாஹ்வின் நாட்டத்தைப் பூரணமாக ஏற்றுத் தன் சிசுவை மூஸா நபியை ஆற்றில் எறிந்துவிட்ட அந்தப் பெண்ணே சிறந்தவராவார். உனக்கு இரண்டுகால்கள் இருந்தும், நடக்க (காட்டில் சென்று ஏகாந்தத்தில் அமர) அஞ்சுகிறாயே! இது உன் மெய்யுறுதிக் காரணத்தால்தானே! மூஸா நபியின் அன்னைக்கு இறைவன் மட்டும் (பொறுமை என்ற) முடிச்சைக் கட்டிவிடாமலிருந்திருந்தால், அச்சமேலீட்டால் ரகசியத்தை (குழந்தை இருப்பதை) வெளியாக்கி விட்டிருப்பார்கள்.

இவ்விதமே நீ (தவக்குல் என்ற) கானகத்துக்குச் சென்று, நிம்மதியான ஏகாந்தத்தில் அமர்ந்து, வணக்கங்களில் ஈடுபடுகையில் உன் லட்சியப் (பரம்) பொருள் கடாட்சமாகாமல் அப்பாலாகும்போது, உனக்குத் திகைப்பு உண்டாகும். அதனால், நீ மீண்டும் படைப்புகளின் பக்கமும், சாதனங்களின் பக்கமும்கூடத் திரும்பிவிடலாம். அப்படித் திரும்பாமல் உன் இதயத்தில் பொறுமை என்ற முடிச்சைப் போட வேண்டும். (அப்போதுதான் இறைவனின் நல்லருள் உன்னைக் காப்பாற்றும்.) ஏ! பயபக்தியிலும், ஏகத்துவப்படுத்துவதிலும், மெய்ஞ்ஞானத்திலும் நஷ்டவாளிகளாயுள்ளவர்களே! சதாவும்

பாவமன்னிப்புத் தேடிக் கொண்டிராமல், விலகி விலகி எங்கே செல்கிறீர்கள்? ஏ! துர்பாக்கியசாலிகளே, புனிதமான சன்மார்க்கத்தை விற்று (யாசித்து)த் தின்பது (நிபாக்) நயவஞ்சகமாகும். ஏதேனுமொரு தொழில் செய்து உண்பதே மகத்தான சுன்னத்தாகும். (அதுவே சிறப்பான அமலாகும்.) உனக்கு உறுதியான மெய்யுறுதி சித்தியாகும் வரை, இவ்விதம் 'சுன்னத்'தான செய்கைகளையே செய்துகொண்டிரு. ஜீவனத்துக்காக நீ ஒரு தொழிலை மேற்கொண்டாலும், படைப்புகளின் பக்கம் செல்லும் பாதையை உன் தூய இதயத்தைவிட்டும் அடைத்துவிடவேண்டும். அப்போது நீ உட்கார்ந்திருந்தாலும், (ஜீவனத்துக்காக) அலைந்து கொண்டிருந்தாலும், (மனசாந்திபெற்று) இறைவனின் மாளிகையில், செவிடனாயும், குருடனாயும் (கட்டுத் திட்டமின்றி) உல்லாசமாக உலவும் மகிமையைப் பெறமுடியும். அங்கே உன் காதுகள் இறைவனின் குரலையன்றி, வேறு எதையும் கேட்கமாட்டா; உன் கண்கள் அவன் கிருபா கடாட்சங்களையன்றி வேறு எதையும் தரிசிக்கமாட்டா. இதன் பின் (இரட்சகன் திருச் சந்நிதியை நோக்கிச்) சரியான துணையோடு பயணப்பட்டுப் பூமியைச் சுற்றிப் பவனி வருவாய்.

- 33 -

ஏ! மூடர்களே, படைப்புகளிடமிருந்து உங்களுக்கு ஏதாவது அற்பப் பொருள்கள் கிடைக்கும் போலிருந்தால், அவற்றைப் பெறுவதற்காக நீங்கள் பயணம் கட்டிக்கொண்டு ஓடுவதில்லையா? (அவ்வாறான நீங்கள்) இறைவனால் மெய்யாக அருளப்படும் கிருபா கடாட்சங்களையும், அருட்கொடைகளையும் சேகரித்துக் கொள்வது தான் மெய்யான பொருள்களைப் பெறுவதாகும். அவைகளை வாங்கிக் கொள்வதற்கு நீங்கள் பயணம் புறப்பட்டால் என்ன? ஆம், மெய்நேசர்களின் புனிதப் படிவங்கள் மென்மேலும் சீர்பட்டு, அவர்களின் இறைநேசம் (விலாயத்) உறுதிப்பட்டுவிடுமாயின், அப்போது கொடுப்பது, கொள்வது என்ற ஊசாட்டமே அவர்களின் தூய இதயங்களில் உதிக்காது. மகான்கள் தம்மிடம் இம்மையின் ஜசுவரிய



சம்பத்துக்கள் வரும்போது, அவற்றை ஏற்றுக் கொள்ளாமல் அப்பாலாகி விடுகின்றனர். ஆனால் இறைசங்கல்பத்தால் அவர்களுக்கு அவை அனுக்கிரகமாகி விட்டால், அவைகளைக் துய்க்குமாறு அவர்கள் கட்டாயப்படுத்துகின்றனர்.

ஹஜ்ரத் மூஸா நபி (அலை) அவர்களின் அன்னையாருக்குத் தங்கள் சிசுவை பிர்அவ்ன் கொன்றுவிடுவானோ என்ற திகில் உண்டான சமயம், அதை ஆற்றில் எறிந்துவிட்டதைப் போன்றே (ஏ மெய்விசுவாசியே) உன் சன்மார்க்கமும் (தீனும்) பாழாகிவிடுமோ என்று உனக்கு அச்சமுண்டானால், உன் புனிதம் பெற்ற இதயத்தை இறைவனின் பொறுப்பில் பூரணமாக விட்டுவிடு; உன் உற்றார் உறவினரையும், அவனுடைய சிறந்த பாதுகாப்பிலாக்கிவிடு. 'இரட்சகா நீயே (என் பக்தி) வழிப்பயணத்துக்குரிய உற்ற நேயன். நீயே என் உற்றார் பெற்றோரை இரட்சித்துக் காப்பவன்" என்று முழுப் பணிவுடன் பிரார்த்தனை புரி!

வரப்பிரசாதமான மெய்ஞ்ஞானமும் (மஃரிபத்தும்), மெய் நேசமும் (முஹப்பத்தும்) நீ பயணம் போகும்போது, உன் இடுப்பில் கட்டிக்கொள்ளும் பணப்பை போன்றவை. நீ எங்கே போனாலும் பணப்பையை உன்னோடுதானே வைத்துக் கொண்டிருப்பாய்! (அவை உன்னிடமிருந்துவிட்டால், இறைவனின் புனித சங்கல்பத்திலே உறங்கலாம்) அவனுடைய மகத்தான சக்தியைத்தான் உன் காதுகள் கேட்கும். இறை நேசர்களின் (ஔலியாக்கள்) நிலையும், நபிமார்கள் (தீர்க்கதரிசியின்) நிலையும் ஒரே மாதிரியானது தான் என்பதை அல்லாஹ்வின் மீது ஆணையிட்டு உரைக்கிறேன். எனினும், தீர்க்கத்தரிசிகளின் படித்தரங்கள் வேறு, இறைநேசர் (ஔலியாக்) களின் படிவங்கள் வேறு; படைப்புகளுக்காகப் பிழை பொறுக்கும்படி (ஷபாஅத்) தேடும் உரிமை, தீர்க்கதரிசிகளுக்கு உண்டு. எனவே, அவர்களிடம் முன்கர், நக்கீர் வரமாட்டார்கள். அதுபோலவே மகான்களான இறைவனின் மெய்நேசர், (ஔலியாக்)களும் இறைவனின் படைப்புகளில் உயர்வானவர்களாயிருப்பதால் இவர்களும் கேள்வி கணக்குக்கு உள்ளாக்கப்படமாட்டார்கள்.

களங்கமான ஆவேசங்கள், சுபாவச் சேட்டைகளுக்கு அடிமைப் பட்டு உழல்பவர்களே, முகத்துதிப் பிரியர்களே! இறைசங்கல்பத்தால் உங்கள் மீது சொரியப்படும் சோதனைகளையெல்லாம், எந்தச் சந்தர்ப் பத்திலும் முணு முணுக்காமல், நீங்கள் ஏற்று, அனுபவித்தேயாக வேண்டும். அப்பட்டமான புனித ஏகத்துவம் சித்தியான ஞானநாதர் களின் தூய இதயத்தில் ஒரு மகத்தான ஞான அகமியம் பிரகாசிக்கும். அதை அமரர்களோ, சாதரணமான அறிவோ, ஷைத்தானோ அறியவே முடியாது. உங்களை இருந்தும் இறந்தவர்களாக ஆக்கிக் கொள்ளும் (பனா என்ற) புனித நிலையிலாக்கி, (இரட்சகனின்) திவ்விய முடுகுதலைத் தேடும் நல் ஆத்மாக்களாகச் சமைத்துக் கொள்ளுங்கள்! இறைவன் விதிப்பை மனம்பொருந்தி ஏற்றுக் கொள்ளுங்கள்! அப்போது இறைவனின் மகத்தான அகமியங்களெல்லாம் உங்களுக்கு ஞானோதயமாகும். நீங்கள் இறைவனின் மெய்நேசர்களாகி, அவனுடைய நேசத்தில் திளைத்துக் கொண்டிருக்கலாம்.

தவசீலர் (ஆபித்)களுக்கு அவர்களின் மெய்வணத்தின் பாக்கியத்தால், இறைவனின் புனித நேசம் சித்தியாகும். ஒருவன் மெய்யாகவே இரட்சகனைத் தேடுகிறானா, இல்லையா என்று அறிந்து கொள்ளும் மெய்ஞ்ஞானம், ஞான மகான்களுக்கே (ஆரிப்களுக்கே) அருளப்படும். எனவே, அந்த ஞான நாதர்களுக்கு அடிபணிந்திரு! இந்த உயர் பண்புகளில் அல்லாஹ்வின் ஆணைகளுக்குப் பணிந்து, நீ பரிபூரணமாக ஒழுகிச் சீர்பட்டுவிட்டால், சர்வ கடாட்சங்களும் உனக்கு வரமாக அருளப்படும். இன்றேல், நீ சபிக்கப்பட்டவனாக (மர்தூதாக) ஒதுக்கப்படுவாய். இறைவனின் திவ்விய சமூகத்தில் புக நாடி, அதற்குத் தேவையான கால ஞானங்களைக் கற்பதற்காக நாங்கள் ஞானமகான்களின் பின்னால், அவர்களின் கால் தூசிக்குச் சமமாக ஓடிக் கொண்டிருந்தோம். தனக்கு ஒரு ஞான குரு தேவையில்லை என்று கூறித் தன் அரைகுறை மதியின் மீது மட்டும் நம்பிக்கை வைத்துப் பணிபுரிபவன், நிச்சயம் வழிதவறியவனாவான். ( இங்கே ஆண்டகையவர்கள் சிறிது நேரம் வேறு சம்பாஷணையிலிருந்து விட்டு மேலும் தொடர்ந்தார்கள்.)



சன்மார்க்க நெறிமுறையின் ஆணைப்படி கடைப்பிடிக்க வேண்டியதை கடைப்பிடிப்பதும், தவிர்க்க வேண்டியதைத் தவிர்ப்பதும், சீர்பட்ட உண்மையான (மூமினான) அடியார்களே நபி பெருமான் (ஸல்) அவர்களின் பிரதிநிதிகளாகத் திகழ்கின்றனர். இந்த(ச் சன்மார்க்க ஆணைகளின்) மர்மங்கள் அனைத்தும் நபி பெருமானாரின் முன்மாதிரியை (சுன்னத்தை)ப் பரிபூரணமாகப் பின்பற்றி ஒழுகுவதன் மூலமே மெய்விசுவாசிகளுக்குத் துலக்கமாகும். (இந்தப் புனிதப் படிவத்தில்) சில சமயங்களில் அவர்களுக்கு உள்ளமை (உஜூத்) என்ற அங்கியும், சில சமயங்களில் இருந்தும் இறந்த நிலை (பனா) என்ற அங்கியும் போர்த்தப்படுகின்றன. வேறு சில வேளைகளில் அவர்கள், (அதே பனா நிலையில் சொக்கித்) தம்மையே மறந்துவிடுகின்றனர். அல்லது இறைவன் தரிசனம் மூலம் தெளிவு பெற்று, அவனது ஏவல் விலக்கல்களை படைப்புகளுக்கு விளக்குகின்றனர். "நாங்கள் (திரையின்றியே) இறைவனிடம் அனுமதி பெற்று(ப் படைப்புகளுக்கு)ச் சன்மார்க்க நெறிமுறையை எடுத்து ஓதுகிறோம்" என்று மகானொருவர் கூறியுள்ளதற்கொப்பத் திகழ்கின்றனர், அவர்கள் (தங்கள் புனித) ஏகாந்தத்தின் மகிமையால் இரண்டு வாயில்களை அடைகின்றனர். இவற்றுள் படைப்பு (நேர்வழிகாட்டி)ப் புனிதப்படுத்துவதன் மூலம் படைப்புகளுக்குச் செய்ய வேண்டிய கடமையை நிறைவேற்றுவது ஒரு வாயிலாகும்; (மெய்வணக்கம் புரிந்து) சீர்படுவதின் மூலம் இறைவனுக்குச் செய்ய வேண்டிய கடமையை நிறைவேற்றுவது மறு வாயிலாகும். நீ படைப்புகளின் கொடுமையிலும், நாசத்திலுமிருந்து தப்பித்துத் தூய்மையாக இருக்க நாடினால், இறைவனின் திருப்பொருத்தம் ஒன்றுக்காக மட்டுமே படைப்புகளின் பாசத்தை விரும்பு. அப்போது இரட்சகனின் முடுகுதலும் சித்தியாகும். மெய்ப்பொருளான இறைவனை அன்றியுள்ள மற்றயாவும் படைப்புகளென்றே கொள்ள வேண்டும். இந்தத் தத்துவம் உன் சர்வ நிலைக்கும் பொருந்தும்.

படைப்புகளுக்கு நீ சேவை செய்ய நாடினால், அவர்களுக்கு நன்மையான காரியங்களையே செய்ய வேண்டும். அதுவும்

இறைவனின் நேசத்தை நிலைநிறுத்திய பின்னரே கவனிக்க வேண்டும். அப்பொழுதுதான் படைப்புகளின் பாசங்களில் சிக்கிக் கொள்ளாமலும், அவற்றின் அரவணைப்பை விட்டுத் தப்பியும், இறைவனின் மேலான பாதுகாப்புடன் இருக்கும் பாக்கியம் சித்தியாகும். உனக்குச் சம்பவிக்கும் நன்மை, தீமைகள் யாவும் படைப்புகளால்தான் உண்டாகின்றன என்று கருதாமல், அவை சம்பவிக்கும் போது (இறைவனின் ஆணையால்) உன் மீது அவை சாட்டப் பட்டுள்ளன என்றே நம்ப வேண்டும். இதுவே நீ அல்லாஹ்வுக்காகப் படைப்புகளை நேசிப்பதற்கு மெய்யான பொருளாகும். இவ்வாறு மகத்தாகச் சீர்பட்ட மகான்களின் தூய இதயங்களே (கல்புகளே), அவனுடைய கிருபா கடாட்சங்களை அனுபவிக்கின்றன; அவனுடைய திருவசனங்களைக் கேட்கும் மகிமை பெற்று, மகத்தான முடுகுதலால் அருளப்படும், மகிழ்ச்சியையும் பெறுகின்றன. கருணையாளன் அல்லாஹ் இவ்வுலகத்தில் அவர்கள் மரணிக்கு முன்னரே, அவர்களின் புனித இதயத்தோடும், மறுமையில் அவர்களோடு நேருக்குநேராகவும் சம்பாஷிக்கிறான். உலகத்திலிருக்கும் போதே இரட்சகனோடு நேருக்குநேர் பேசும் பாக்கியம் பெற்ற சிற்சில ஞான மகான்களும் இருக்கவே செய்கின்றனர்.

"மகான் சிர்ரி சிக்தி (ரஹ்) அவர்கள் உள்பட நாற்பது உன்னத ஞானமகான்கள் (அப்தால்கள்) உலகில் வீரமரண மெய்தி, அந்த நாற்பது மகான்களின் நல்லுபதேசத்தின்படி நான் ஒழுகிச் சீர்படும்வரை (மக்களுக்கு) ஞானோபதேசம் புரியமாட்டேன்" என்று ஜுனைத் (ரஹ்) அவர்கள் கூறிக் கொண்டிருந்தார்கள். ஆனால், ஒரு சமயம் அவர்களின் கனவில் நபி பெருமான் (ஸல்) அவர்கள் தோன்றி, 'ஜுனைதே, நீங்கள் ஞானபோதம் புரிய இதுதான் தக்க சமயம். சத்தியத்தையும், உன்னதப் பதவிகளையும், சன்மார்க்க நெறிமுறைப் படியே நல் அமல் புரிவதையும் நீங்கள் நாடினால், என் ஆணைப்படி நடவுங்கள். இன்றேல் நீங்கள் வழிதவறி விடுவீர்கள்" என்று அருளினார்கள். அதன் பின்னரே ஜுனைத் (ரஹ்) மக்களுக்கு உபதேசிக்க முன் வந்தார்கள்.



- 34 -

தொழுகைக்கு நிற்கும்போது 'கிப்லா'வின் பக்கம் முகம் திரும்புகிறீர்கள். அதே போல் ஏதேனும் கவலையுண்டானாலும் 'கிப்லா'வையே நோக்குங்கள். அப்படி இன்றேல் கவலைகள் உண்டாகும் போது (இறைவனைப் புறக்கணித்துவிட்டு) படைப்புகளின் பக்கம் திரும்பினீர்களோ, உங்கள் புனித மெய் விசுவாசமே (ஈமான்) பாழாகிவிடும்.

இறைவன் மீதே மெய்யுறுதி கொண்டால்தான் சர்வ சோதனைகளும் தோற்று ஓடும். அப்படியின்றிச் சோதனைகள் இம்சிக்கும் போது, அவற்றை நீக்க நீ படைப்புகளின் பக்கம் திரும்புவதின் மூலம்) உன் இதயம் களங்கமாகித் தோல்வி கண்டுவிட்டால், அதுவே பெரும் பாவமாகிவிடும். இத்தகைய துர்பாக்கிய நிலை சாதாரண மக்களுக்கு உண்டானால் அவர்களின் இம்மை மட்டுமே பாதிக்கப்படும்! 'கவாஸ்' களென்ற சில படிவங்களைக் கடந்துவிட்டவர்களுக்கு, இத்தகைய களங்கமுண்டாயின் அவர்களின் இம்மையோடு, மறுமையுமே பாதிக்கப்பட்டுவிடும். சகல படிவங்களையும் கடந்த ஞானநாதர்கள் (அகஸ்ஸுல் கவாஸ்) இதயம் இவ்விதம் தோல்வி கண்டுவிட்டலோ, கருணையாளனின் திருக்கரங்களிலிருந்தே தூக்கி எறியப்பட்டுவிடுவர். அல்லது திரை நீங்கிய மகா பாக்கியம் பெற்றிருந்த நிலை மாறி, திரையால் மறைக்கப்பட்ட துர்பார்க்கியர்களாக ஆகிவிடுவர். அவ்வாறே சகல அடியார்களுக்கும், அவர்களுக்குகந்த வகையில் ஒரு 'தோல்வி' இருந்தே தீரும். எனினும், எங்கோ ஒரு சில மகான்களுக்குத்தான் அவர்களின் 'தோல்வி' இறை நாட்டத்தால் சம்பவிப்பதாயிருக்கும். (மற்றவர்களுக்குத் தங்கள் நடத்தையாலேயே உண்டாவதாகும்.)

(இந்தச் சமயம் ஒருவர் எழுந்து, "எதுகைமோனையெல்லாம் நிறைந்த பாடல் போன்று ஆக்கப்பட்ட பிரார்த்தனையை இறைவன் ஏற்க மாட்டான்" என்று நபி பெருமான் (ஸல்) அவர்கள் அருளியுள்ள ஹதீஸின் தாத்பரியம் யாது.

விளக்கி அருள வேண்டும்" என்று வேண்டியதற்கு ஆண்டகை யவர்கள் பதிலளித்துப் பேசியதாவது:)

"நானும், பயபக்தி (தக்வா) உள்ள என் கூட்டத்தாரும் இலக்கிய அழகுக்காக எதுகை மோனைகளை வலிந்து புகுத்தி எழுதப்பட்ட (தகல்லுபான) பிரார்த்தனைகளைத் தவிர்த்துக் கொள்கிறோம்" என்று நபி பெருமான் (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள். சில சமயங்களில் தமது அமல்களில் பிழைகள் நேர்ந்திருக்குமோ (அதையும் பார்த்துவிட வேண்டும்.) என்ற ஆவல் மேலிட்டு, மெய்விசுவாசிகள் (மூமின்கள்), தங்கள் அமல்களின் பட்டியலையும் பரிசோதிக்கின்றனர். முடிவாக அதில் எந்தப் பிழையையும் காணாத நல்ல அதிர்ஷ்டம் பெறுகின்றனர். இந்த நல்லிணக்கம் (புனிதத் தன்மை) இவர்களுக்குத் துரிதமாகவே கிடைத்து விடுகிறது. (இவர்களுக்கு மெய்ஞ்ஞான சித்திக்கான ஆவல் உண்டானதும்) இவர்கள் சில சம்யங்களில் ஞான நூல்களைச் சுமந்து படிக்கின்றனர்; சில சமயங்களில் மெய்வணக்கம் புரியத் தனி இடத்தை நாடுகின்றனர். வேறு சில சமயங்களில், இவர்கள் தங்களுக்கு இறைவனால் விதிக்கப்பட்ட ஏவல், விலக்கல் களில் ஏதேனும் நிறைவேற்றப்படாமல் விடுப்பட்டிருக்குமோ என்று ஐயுற்றுத் தங்கள் பட்டியலை நோட்டமிட்டு, அதில் குறை காணாது பூரிக்கின்றனர். இதனால் (தங்களின் பக்தி நிலையைக் கண்டு இவர்கள் அகந்தை கொண்டு) சீர்கெட்டு விடாமல் இருப்பதற்காகவே (இரட்சகன் புறத்தால்) இவர்களுக்குச் சில ஆணைகளும் உண்டாகின்றன. அவற்றை இவர்கள் புனிதமாக நிறைவேற்றிப் பாவமன்னிப்புத் தேடுவதன் மூலம் புனிதமடைகின்றனர். எனவே, இந்த (அகந்தை என்ற) சிறு பிழையானது இறை சங்கல்பத்தால் வருவதாகும். சில சமயங்களில் அது மெய்விசுவாசிகளை ஆட்கொண்டே தீரும். அது அவர்களை (எச்சரிகைக்காகத்) தலையில் குட்டுவது போன்றதாகும். அன்றியும், எப்போதோ சில சமயங்களில் தான், அது (அகந்தை)-ஆதம் நபி (அலை) அவர்களுக்கு இறைவனின் சோதனையாக ஏறுபட்டது போன்று-மகான்களுக்கும் உண்டாகும். ஆகவே, நாம் அதைப் பாவமென்று) கணக்கிடவோ, ஊடுருவிப் பார்த்துக் கொண்டிருக்கவோ தேவையில்லை.



ஆத்மா சில சமயங்களில் படைப்புகளின் மோகத்திலும், சில சமயங்களில் படைப்பவனான இறைவனின் தரிசனப் பேரின்பத் திலுமாக, ஒன்றுக்கொன்று மாற்றமான இரண்டுவித ஊசாட்டங்களில் சிக்கிச் சதாவும் போரிட்டுக் கொண்டிருப்பதால், அதில் ஒரு சமயம் படைப்புகளின் பாசமும், மறு சமயம் இறைவனின் பேரின்ப மோகமும் மேலோங்கி நிற்கும். இந்தப் போராட்டம் நாற்பது ஆண்டுகள் வரை நடந்து ஒரு முடிவுக்கு வரும். இதைத்தான் நபிபெருமான் (ஸல்) அவர்கள், ஒருவனுக்கு நாற்பது ஆண்டுகள் கடந்ததும், அவன் பாவங்கள் தோற்று, நன்மைகள் வெற்றி பெறாவிடின், அவன் தன்னை நரகத்துக்கு ஆயத்தப்படுத்திக் கொள்ளவும்" என்று எச்சரித்துள்ளார்கள். மேலும், இந்த நபிமொழி, "நாற்பது வயதைக் கடக்கும் முன்பே உள்ள காலம்தான், உன் சீர்பாட்டுக்கு உகந்த காலமாகும்" என்ற தலையாய கருத்தையும் சுட்டிக் காட்டுகிறது.

ஏ! மெய்ஞ்ஞானப் படிவங்களை(த் தரீகத்து முதலியவைகளை)ப் புறக்கணிப்பவனே, வெளிப்படை (ஷரீஅத்தில் விதி)யான நல் அமல்கள் பாலூட்டி வளர்க்கும் செவிலித்தாய் போன்றவை. அக தரிசனமென்ற ஞானோதயம் தான், பால் குடி மறக்கும் பருவம் போன்றதாகும். நீ படைப்புகளை மட்டும் நேசித்துக் கொண்டிருந்தால், அவைகளும் உன்னையே நேசிக்கத் தொடங்கிவிடும். அது சமயம் நீ இகத்தின் பாசத்தால் இழுக்கப்பட்டுப் பணிந்து விடுவாய். பின்னர் அதன் முன் தலை வணங்கி நின்று நாசமாகி விடுவாய். இந்த (இம்மை என்ற) இல்லத்தை வெற்றியுடன் கடக்க (ஷரீஅத், தரீகத் என்ற) இரண்டு வழிகளே உள்ளன; இரட்சகன் மீதே முழு விசுவாசமும் கொண்டு, அவனிடம் பூரணத் திருப்தி கொண்டவர்களாகச் சர்வ சம்பத்துக்களையும் அப்பாலாக்கி விட்டுச் சகல கருமங்களுக்கும் அவன் பக்கமே திரும்புவதே மகான்களான இறைநேசர் (ஔலிமார்)களின் அடையாளமாகும். உனக்கு உயர்ந்த நிலை சித்தியாவதற்கு இறை நேசமெனும் (விலாயத்) பதவி கிட்டாத வரை எங்கே முடியப் போகிறதென்று உன் கீழான மனம் ஆட்சேபித்தால், அவ்வாறான தீய குணங்கள் உன் அகத்தே அணுகாதபடி வேலி

யிட்டுத் தடுத்தவை. இவ்வாறு தடுத்து, உன் மனத்தைப் பணிய வைக்க முடியாவிட்டால், அந்தப் புனிதப் படிவம் (விலாயத்) உனக்கு ஒருபோதும் சித்தியாகாது. மார்க்க ஞானியர் (தமது ஞான முதிர்ச்சி பூரணமாக சோபிக்கு முன்) அரசர்களை அண்டுவது சரியல்ல. ஆம், மெய்விசுவாசமும், பயபக்தியும் உறுதிபெற்று,ஞான விகாசம் துலங்கித் துறவுநிலை புனிதப்பட்டு, சத்திய ஞானம் விரிந்து, இரட்சகன் முடுகுதல் கெட்டிப்பட்ட பின்னர், அவர்கள் அரசர்களை அணுகினாலும், அணுகாவிடினும் அதனால் தீங்கேதுமில்லை.

நான் மகானொருவரின் திவ்விய சமூகத்தில் ஊழியம் புரிந்து கொண்டிருந்தேன். அவர்கள், என் சென்ற கால நடவடிக்கைகள் யாவை, என் வருங்கால நிலை என்ன என்பதை எல்லாம் ஞானதிருஷ்டியால் கண்டறியும் திறம் படைத்தவர்களாகத் திகழ்ந்தார்கள். அவர்கள் ஒரு சமயம் அடியேனை அழைத்து, "ஓர் அழகிய சிறுவனை என் பணிவிடைகளைச் செய்ய ஊழியனாக நியமித்திருந்தேன். மேலும், நான் அடிக்கடி அரசர்களிடமும் போய் வந்து கொண்டிருந்தேன்" என்றார்கள். உடனே என் மனத்தில் ஒருவிதக் குழப்பம் கண்டது. "இறைவனின் உத்தமசீலரான இந்த மகானோ, இறைவன் சம்மதத்துக்குப் புறம்பான இவ்விரண்டு வேலைகளையும் செய்தார்கள்!" என்று யோசிக்கலானேன். அதே கணத்திலேயே எனது குருநாதரவர்கள் என்னை நோக்கி, 'அன்பு, மகனே, அந்தச் சிறுவன் என் ஆசிரமத்தில் வசித்து வந்தான். அவனை அங்கே விட்டு வைத்தால், ஏதேனும் அசம்பாவிதமான காரியங்கள் நடந்து, அதனால் மற்ற சாதகர்கள் (முரீதுகள்) எங்கே புனிதம் கெட்டுவிடுவார்களோ என்று அஞ்சியே, அவனை என்னிடமே வைத்துக் கொண்டேன். நான் அவர்களிடம் சென்றது, அவர்களுக்கு நல் உபதேசம் செய்து நேர்வழிகாட்டி, அவர்கள் நீதி தவறாமல் ஆட்சி செய்யுமாறு தூண்டுவதற்கேயன்றி, அவர்களிடமுள்ள இம்மையின் சம்பத்துக்களை நாடியல்ல" என்று விளக்கினார்கள்.

உத்தம நேசர்களே! நீங்கள் சில சமயங்களில் ஞான மகான்களின் திவ்விய சமூகத்தில் அமர்ந்திருக்கும் தீயவர்களாகத்



தானே விளங்குகிறீர்கள்! (அதனால் உங்களுக்கு எந்தப் பயனும் கிட்டவில்லையே) நானோ ஞானநாதர்களின் திருச் சமூகத்தில் மிகமிகத் தாழ்மையுடன் அமர்ந்து சீர்பட்டுள்ளேன். (இது சமயம், ஒருவர் எழுந்து, "உண்ணும் உணவு விஷயத்திலே ஆகுமானதா, தடுக்கப்பட்டதா (ஹலாலா, ஹராமா) என்று சந்தேகமிருக்குமாயின், பிறகு தொழுகை, நோன்பு இவைகளெல்லாம் எவ்வாறு புனிதப்படும்?" என்று கேட்டார். ஆண்டகையவர்கள் அதற்குப் பதிலளித்தவாறு பேசியதாவது:) ஆகுமானவை, ஆகாதவை யாவை என்பதைச் சன்மார்க்க நெறிதுறை (ஷரீஅத்) உனக்குத் தெளிவாக்கியுள்ளது. சற்று சிந்தனை செய்; ஏதேனும் ஓர் உணவை உண்ணுகையில், உன் இதயம், 'அதை உண்ணாதே! என்றால், அதுவே ஆகாததாகும். அந்த இதயம் உண்ணும்படி தூண்டினால், அதுவே ஆகுமானதாகும். வேண்டும், வேண்டாமென்று இதயம் கூறாமல் மௌனமாகி விட்டால், அது சந்தேகத்திற்குரியதாகும். (அதிலும்தான் நீ பேணுதலாக இருக்க வேண்டும்) நீ விரும்பிய சம்பத்துக்கள் உனக்கு கிடைக்கா விட்டால், மனத்தைப் பொறுமை கொள்ளச் செய்! அதன் திருநாமம் தான் (கினாஅத்) 'திருப்தி' என்பதாகும். இன்றேல், உன் தொழுகை, நோன்பு போன்ற புனிதமான மெய்வணக்கங்கள் யாவும் இரட்சகனின் திவ்விய சமூகத்தில் மதிப்பற்றவையாகிவிடும். அவன் அவற்றை விரும்புவதுமில்லை.

உன்னில் இறைவன் விரும்புவது புனித இதயத்தைத்தான். முகஸ்துதிப் பிரியர்களான நஃப்ஸுத் துறவிகளோ, வெளிக் கோலத்தில்தான் சுத்தமாகக் காண்ப்படுவர். தங்கள் உள்ளத்தையே களங்கமாக்கிப் பாழடித்துக் கொண்டிருப்பர். இவர்களின் கன்னம் மஞ்சனித்தும், புயங்கள் தொங்கியுமிருக்கும்; கம்பளி அங்கியே அணிந்திருப்பர். ஆனால், அவர்கள் அந்தரங்கம் தூய்மை யற்றிருக்கும். அவர்கள் மனம், படைப்புகளின் புகழையும், இகழையும் கவனிக்கும். அவர்களின் கண்கள் மக்களிடமுள்ள செல்வங்களின் பக்கமே நோட்டமிட்டுக் கொண்டிருக்கும்.

மெய்ஞ்ஞான நாதர்கள் (ஆரிப்கள்), சில சமயங்களில் வெளிக் கோலத்தில் இறைவனால் தம்மீது சாட்டப்பட்ட தங்கள் மனைவி மக்களின் சம்ரட்சனை, கொடுக்கல் வாங்கல் போன்ற காரியங்களை நிறைவேற்றுவதில் ஈடுபடுவார்கள். ஏனெனில், அவர்களே இறைவனின் காரியத்தர்களாயும், அவனுடைய படைகளை நிர்வகிக்கும் நிர்வாகிகளாயும் திகழ்கின்றனர். இக்காரியங்கள் அனைத்தையும் அந்த உத்தம சீலர்கள் சீர்பட்ட உள்ளத்துடனும், புனிதமடைந்த மனத்துடனும், இறைவனின் அருள் பெற்ற தொண்டாகவே கருதிச் செய்து வருகின்றனர். (புனித தரிசனத்தால்) அவர்கள் மீது மெய்ஞ்ஞான பிரகாசத்தின் பேரின்ப அலைகள் இடைவிடாது, மோதிக்கொண்டிருக்கின்றன. பூவுலகம் முழுவதையும் சூழ்ந்து கொண்டிருக்கும் கடல்(களின் ஒப்பற்ற செல்வங்)களும், பூமியிலும், வானங்களிலும் பறந்து கிடக்கும் எல்லாப் படைப்புகளும் கூடத் தங்களின் இதயத்தை அசைத்துவிட முடியாதபடி, அவர்கள் சீர்பெற்றுள்ளனர். எனவே, அவர்களின் (புனிதமான) இதயத்துக்கு முன் படைப்புப் பொருட்கள் அனைத்தும் மதிப்பற்ற அற்பப் பொருளாகவே ஆகிவிடுகின்றன. இதுவே, கடந்த ஞான நாதர்களின் புனித நிலையாகும். முன் கூறிய நயவஞ்சக நிலையோ, நடிப்புத் துறவிகளுடையதாகும். நடிப்புத் துறவிகளின் வெளி வேடத்தை நீ மதிக்க வேண்டாம்! அத்துடன், படைப்புகளின் குறைகளை எடுத்துக் கூறிக் கொண்டிராமல், நாவைப் பேணு. உன்னையே நீ அறிந்து கொள்ளாத நிலையில், மற்றவர்களைப் பற்றிக் குறை கூறுவதும், தவறாக எண்ணுவதும் சரியானதல்லவா!

மறுமையைக் காட்டி மண்ணுலகவாசிகளிடமிருந்து இம்மையின் சம்பத்துக்களைச் சுருட்டுபவர்களே, மெய்ப்பொருளான இறைவனை உணராத பாவிகளே! சாமான்ய மக்களைக் காட்டிலும் நீங்கள் தாம் அதிகமாகப் பாவமன்னிப்பு (தௌபா)த் தேடக் கடமைப் பட்டவர்கள். உங்கள் பாவச் செயல்களை, உங்கள் நாவாலேயே மிகுதமும் சொல்லிச் சொல்லி வருந்தி பிராயச்சித்தம் தேட வேண்டியவர்கள் நீங்கள். உங்களிடம் (உங்களுக்கு) நன்மை



பயக்கக்கூடியதோ, பயனளிக்கக் கூடியதோ எதுவுமில்லை. நல்வாழ்வோ, ஈடேற்றமோ, சன்மார்க்கமோ, மெய்ஞ்ஞானப் பிரகாசமோ உங்களிடமில்லை. விரைவில் அழிந்து போகும் 'இம்மை'(யின் செல்வம்) ஒன்றுதான் உங்களிடமுள்ளது. நீங்கள் சுபாவச் சேட்டைகளின் தூண்டுதலாலும், ஆத்ம ஆவேசத்துக்குத் தலைசாய்த்துமே அதைச் சேகரிக்கிறீர்கள். என் உழைப்பும், நாட்டமும், ஞானபோதங்களும், நீங்கள் கடைத்தேறுவதையே குறிக்கோளாகக் கொண்டவையாகும்.

வாய்மூடி மௌனியாயிருந்து (மெய்ஞ்ஞானத்தை) கற்றுத் தேர்ச்சி பெறுங்கள். (நீங்கள் ஞானத்தில் நிறைவு பெறும் வரை) யாருக்கும் ஞானபோதம் செய்யத் துணியாதீர்கள். அதிலிருந்தும் ஒதுங்கிக் கொள்ளுங்கள். இன்று உங்கள் முன் அமர்ந்து ஞானபோதம் புரிய , நாவையும், உடலையும் நான் இரவல் பெற்று வந்திருக்கிறேன். (இன்றேல், ஏகாந்தமும், மௌனமும்தான் எனக்கு உகந்தவையாக இருந்தன.) தனித்திருப்பதும், (ஞான போதத்துக்காக) ஊர் ஊராகச் சுற்றிவருவதும் இறைவனின் திவ்விய முடுகுதல் கிட்டுவதற்கு வழி கோலுபவையாகும். ஏகாந்தத்தில் மௌனமுற்றுத் தியானிப்போரே, மனிதக் கும்பலிடையே (ஜல்வத்தில்) மௌனம் ஏற்பதுதான் உத்தமமானதாகும். அருமந்தச் செல்வ! முதலில் புனிதமான ஏகாந்தத்தில் சீர்படு; பின்னர் நீ மக்களுடன் கலந்து உறவாடலாம். முதலில் மௌனத்தை முதன்மையாக்கித் தூய்மைப்படு; பின்னர் பேசலாம். (ஞான போதம் புரியலாம்) முதலில் படைப்பாளனைத் தரிசிக்க முயல்! பிறகு அவன் அடிமைகளைப் பார்க்கலாம். "அப்பழுக்கற்ற, ஆகுமானதை (ஹலாலை) ஞான நாதர்களிடம் தான் காணலாம்" என்று மெய்நேசர் ஒருவர் திருவுளமாகியுள்ளார். எனவே, நீயும் ஒரு ஞானநாதராய் ஆக முயற்சிசெய்! அப்போதுதான் உனக்கு சித்தியாகும் படிவங்களால், ஆத்ம ஞானிகளின் தரத்தில் சேரும் அருகதை பெறுவாய்: உன் தூய உள்ளத்தின் சோதியும், மெய்ஞ்ஞானச் சூரியனும், இரட்சகன் முடுகுதல் என்ற சந்திரனும் சேர்ந்து , எவை நன்மையானவை, எவை தீமையானவை என்பதை உணரச் செய்யும்.

கீழான மனம் (நப்ஸ்) உன்னை ஆட்கொண்டிருந்த சமயம், விலக்கப்பட்ட உணவையும், சீர்படாத இதயம் (கல்பு) உன்னை ஆட்கொண்டிருந்த சமயம் சந்தேகத்திற்குரியதான உணவையும் உண்ண நேரலாம். சீர்பட்டுத் தூய்மையான உள்ளம் உன்னை ஆட்கொண்டு விட்டால்தான் கலப்பற்ற, ஆகுமான (ஹலாலான) உணவை உண்ணும் பாக்கியம் உனக்கு அருளப்படும். (நான் கூறும்) இந்த மகத்தான அகமியங்கள் எல்லாம் உன் சிறுமதிக்கு அப்பாற்பட்டவையாகும். கீழான மனத்துடன் (நப்ஸுடன்) விலக்கப்பட்ட (ஹராமான) உணவும், இதயத்துடன் சந்தேகத்திற்குரிய தான உணவும், சீர்பெற்ற உள்ளத்தோடு ஆகுமான (ஹலாலான) உணவும் இருக்கும் என்பதை உணர்ந்துகொள்: "கீழான மனம் நிச்சயமாகத் தீமையான செயல்களையே (செய்யத்) தூண்டும்" என்பதன் விளக்கம் யாதெனின், இந்த உணவை, எந்த வகையில் உண்ணுகிறோம், இது எப்படிப் பட்டது என்றெல்லாம் சிந்திக்குமளவுக்கு அது துணிவதில்லை. அதன் இயல்பு, விலக்கப்பட்டதா, ஆகுமானதா (ஹராமா, ஹலாலா) என்றெல்லாம் கவனிக்காமல், தி[illegible]வது கொண்டு வந்து, தன்னையும், தன் குடும்பத்தையும் காப்பாற்றும். தன் கணவனைத் தூண்டும் காட்டரபியின் மனைவியைப் போன்றதாகும். இதனால்தான், நபி பெருமான் (ஸல்) அவர்கள் கூட,"சன்மார்க்கத்தை (தீனை)ப் பேணுதலுடன் ஏற்று ஒழுகும் உத்தமப் பெண்களையே மணந்து கொள்ளுங்கள்" என்று அறிவுறுத்தியுள்ளார்கள். சன்மார்க்கத்தைப் பேணி நடக்கும் பெண்கள், மறுமையின் புனிதத்துக்காக உன்னோடேயே இருந்து உதவுவார்கள்.

தார்மீக அடிப்படையில், கீழான மனமும் பெண்களைப் போன்றே விளங்குகிறது. ஆகவே, ஆகுமானது, விலக்கப்பட்டதை உணர்ந்து, உன்னைப் பேணிக்கொள். நீயே உழைத்துத் தேடிய ஆகுமான பொருள்களே உன் முன் வைக்கப்பட்டானும், அப்போது கூட சற்று சிந்தனை செய்! உணவு இன்னும் ஆயத்தமாகவில்லை' என்று நினைத்து, ஒருகணம் யோசனை செய். அப்போது உன் புனித இதயம் (கல்பு) தூயஉள்ளத்தை (பாத்தினை)த் தொடும்; அந்த உள்ளம்



(பாதின்) இறைவனில் ஐக்கியமாகிவிடும். அதன் மூலம் இறைவன் உன் இதயத்துக்கு ஓர் அமரரை அனுப்பி, உன் முன்னால் இருக்கும் உணவு ஆகுமானதாயிருந்தால், ' உமக்கு நாம் கூடாட்சித்த புனிதமான (ஹலாலான) உணவை உண்ணுவீராக!" என்ற கருத்துள்ள திருக்குர்ஆன் வசனத்தை நினைவுபடுத்தச் செய்து, உன்னை அனுமதிப்பான். அப்போது நீ அந்த உணவை உண்ணலாம். அது ஆகாததாக இருப்பினும், அன்றிச் சந்தேகத்திற்குரியதாயிருப்பினும், "அல்லாஹ்வின் திருநாமம் எதன் மீது சொல்லப்படவில்லையோ, அதனை முற்றும் உண்ணாதீர்கள்!" என்ற திருக்குர்ஆன் வசனம் உனக்கு நினைவுபடுத்தப்படும். அப்படி நினைவு படுத்தப்பட்டால், அந்த உணவின் பக்கம் திரும்பாதே! அல்லாஹ் அதைவிடப் பன் மடங்கு புனிதமான உணவை உனக்கு அருளுவான்.

இறைவன் விதிப்பையும், தீர்ப்பையும் பூரணமாக ஏற்றுப் பணிவுடன் அமர்ந்துவிடு! இறைவனின் கருணை என்ற திருக்கரம் உன்னை வலிந்தணைத்துப் பேரின்பங்களைச் சுவைக்கும் திசையில் திரும்பும் வரை மனம் பொருந்திக் கொள்! துறவு நிலையும் (ஸுஹ்தும்) பயபக்தியும், இரண்டொரு வினாடிக்கான கிரியைகளாம்; மெய்ஞ் ஞானமோ (மஃரிபத்தோ) சதாவும் உன்னோடு ஐக்கியமாகியிருக்க வேண்டிய மெய் வணக்கமாகும். முன்னோர்களான ஞானநாதர் களின் புனித நிலை எங்கே? உன்னுடைய அற்ப நிலை எங்கே? உன் களங்கமான மனத்துக்குத்தான் உணவூட்டி வளர்க்கிறாய். (அது கொழுத்துத் திமிர் கொண்டு) உன்னையே எதிர்த்து நாசப்படுத்துகிறது. அது விரும்பும் கூடாத இச்சைகளை நீ திருப்தி செய்வதால்தான், அது உன்னைப் பார்த்தே முறைக்கிறது. நீ கோடாரியாக மாறி, அதன் (நப்ஸின்) களங்கமான மூலத்தையே வெட்டி வீழ்த்தியிருந்தால், எவ்வளவு நலமாகியிருக்கும்! ஆனால், அது கேட்கும் கூடா விருப்பங்கள் அனைத்தையும் நிறைவேற்றி வந்ததால், நீ மைத்தானுக்கே கதவைத் திறந்து வைத்து விட்டாய்.

அகத்துள்ளே மைத்தான் வகை வகையான ஆவேசங்களைப் புகுத்திவிடுகிறான். மனம் தன் நாவால் கேட்காமல் ஜின்னிலுள்ள

ஷைத்தானே அதில் ஊசாட்டங்களை எழுப்புகிறது. அவற்றுக்கு (ஆவேசங்களுக்கு)ப் பணிந்து நீ வாயைத் திறந்து விட்டாலோ, மனித ஷைத்தான் (கெட்ட நண்பர்)கள் உன் மீது சவாரி செய்கின்றனர். நீ மட்டும் மனத்திலுள்ள தீய தன்மையின் மூலத்தையே வெட்டிக் களைய முயன்றிருந்தால், விலக்கப்பட்டவை, சந்தேகத்திற்குரியவை யாவையும் அது விரும்பவிடாமல் தடுத்திருந்தால், அதன் கொதிப்புத் தணிந்திருக்கும். ஆகுமான உணவை அதற்கு அற்பமாக ஊட்டிப் போசித்திருந்தால், அதில் வேரூன்றிய எத்தனையோ இச்சாபாசங் களெல்லாம் உருகிக் கருகி, வேரோடு பிடுங்கப்பட்டு, அவை இருந்த இடத்தில் மெய்விசுவாசம் என்ற விருட்சம் முளைத்திருக்கும்; அதன் அஞ்ஞான இருள் (நீங்கி) ஜோதியாய் இலங்கி, அது சாந்தி பெற்ற நல் இதயமாகியிருக்கும். அப்போதுதான், "ஏ நற்சாந்தி பெற்ற ஆத்மாவே, உன் இரட்சகன் பக்கம் போய், அவனை நீயும், அவன் உன்னையும் விரும்பும் பாக்கியத்தை அடைவாயாக!" என்ற சோபனத்தை அது கேட்க முடியும்.

இந்தச் சுபமான அழைப்பைச் சாதாரணமானவர்கள் மரணத் தருவாயில்தான் செவியுற நேரும்; ஆனால், மெய்ஞ்ஞான நாதர்கள் தம் ஜீவியத்திலேயே இதைக் கேட்க முடிகிறது. "நிச்சயமாக, அவர்கள் நம் திவ்விய சந்நிதியில் மகிமை பொருந்தியவர்களாயும், நம்மால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாயுமிருக்கிறார்கள்" என்ற இறைவனின் திருவசனத்துக்கொப்ப இவர்கள் புனிதமடைந்துள்ளார்கள். நீயோ இறைவனின் மேன்மை தங்கிய முடுகுதல் என்ற விருந்தின் பந்தியில் அமராமல், அவனுடைய திவ்விய சமூகத்தில் புகுந்து புனித மடையாமல், எங்கோ ஓடிக் கொண்டிருக்கிறாய், குகையின் தோழர் (அஸ்ஹாபுல் கஹ்புகளுடைய நாயைப் போல், நீ முற்றிலும் இறைவனுக்குப் பணியாதவரை, உன் இதயம் ஒருக்காலும் சீர்பட்டு தூய்மையடையாது. இதயத்தை(க் கல்பை) இரட்சகன் திருமுன் வைத்து, அங்கிருந்தவாறே மனத்தை அவன் திருமுடுகுதலின் வாசர் படியில் அமரச் செய்யவேண்டும். உன் மெய்விசுவாசம் பலஹீன



மடையாமலிருக்கத் திருக்குர்ஆன், ஹதீஸ்களின் ஏவல் விலக்கல் களை ஏற்றுச் சன்மார்க்க நெறிமுறையின் (ஷரீஅத்தின்) வெளிப் படையான மெய்வணக்கங்களைச் சம்பூரணமாக நீ நிறைவேற்றி வரவேண்டும். இவ்வகையில் மெய்யுறுதி பரிபூரணமடைந்ததும், கடுமையான கட்டுத் திட்டங்களையும், நன்மை அதிகரிக்கக்கூடிய (அஜீமத்தான) மெய் வணக்கங்களையும் கடமையாக மேற்கொள்ள வேண்டும்.

- 35 -

என் இளமையில் என்னிடம் உயர்ந்த மேலங்கி ஒன்று இருந்தது. (அதை விற்றுவிடுவதற்காகப்) பல தடவைகள் நான் கடைத்தெருவுக்குச் சென்று விலை கூறினேன். அதை வாங்க யாரும் முன்வரவில்லை. கடைசியாக, அதை ஒருவரிடம் ஈடாகக் கொடுத்து, ஒரு தீனார் பெற்றேன். (நான் அதைத் திரும்பவும் மீட்டுக் கொள்ளவில்லை.) இதற்கிடையில் ஒரு பெருநாளன்று அம்மனிதர் என் அங்கியோடு என்னிடம் வந்து, "நீங்கள் எனக்குத் தரவேண்டிய ஒரு தீனாரையும், நான் உங்களுக்கே அன்பளிப்பாகக் கொடுத்து விட்டேன். இதோ உங்கள் அங்கி! இன்று இதை நீங்கள் அணிந்து கொள்ளுங்கள்!" என்றார். நான், "இல்லை, தீனாரைத் தந்தபின் பெற்றுக் கொள்கிறேன்" என்று கூறி அதை ஏற்க மறுத்துவிட்டேன். அவர் மீண்டும், மீண்டும் "நீங்கள் இதை அணியத்தான் வேண்டும். இன்றேல், இதை நான் நெருப்பிலிட்டுக் கொளுத்திவிடுவேன்" என்று கூறி, என்னை வற்புறுத்தி, அதை அணிந்து கொள்ளச் செய்துவிட்டார். இந்த நிகழ்ச்சி அப்பட்டமான இறை நாட்டமென்றும், என் துறவு நிலை (ஜுஹ்து) ஒன்றால் மட்டும் காரியம் நடந்துவிடாது என்றும் தெரிந்து கொண்டேன்.

"நாங்கள் படைப்புகளுக்காகவே (ஆசாபாசங்களை ருசிக்கவே) கலைஞானங்களைக் கற்றோம். ஆனால், அவை படைப்பாளனுக்கே (அவனை அடையவே) எங்களுக்கு உதவி

விட்டன" என்ற ஒரு வாசகத்தை வியக்கும்படி ஒருவர் ஆண்டகையவர்களிடம் கேட்டபோது, அவர்கள் தொடர்ந்து பேசியதாவது :

இவ்வார்த்தைகளை இறைநேசர் (ஔலியுல்லாஹ்) ஒருவர் கூறியிருந்தால், அது பழிப்புக்குரிய செயலாகியிருக்கும். ஏனெனில், படைப்புப் பொருள்களைச் சேகரிப்பதற்காகக் கலைஞானங்களைக் கற்பது இறைவனுக்கு இணை வைத்தல் (ஷிர்க்) ஆகும். படைப்புகளென்ற பதத்துக்கு-'மறுமை' என்று பொருள் கொள்ளுவதும் கூடக் குற்றம்தான். (எனினும், அது ஷிர்க்கல்ல.) மறுமையின் சௌபாக்கியங்களை வரமாகப் பெற்றுவிட வேண்டுமென்ற நிர்ணயத்துடனேயே ஞானங்களைக் கற்கவேண்டும். அதை ஒட்டியே மெய்வணக்கங்களைப் பின்பற்றவேண்டும். அப்படியானால்தான் அந்த நல் அமல்களால் இறைவனின் திருச் சந்நிதியை அடைய முடியும்.

அவர்கள் (படைப்புகளைத் திருத்தவேண்டும் என்ற எண்ணத்துடன் ஞானத்தைக் கற்று, அதன் மூலம் படைப்பாளனை அடைந்து முக்தி பெற்ற மகான்கள்) முதலில் சாதாரண மக்களுடன் விருந்தில் அமர்ந்து உணவருந்தி (புனித மறுமை சித்தியாகி)ப் பின் இறைவனின் கிருபாகடாட்ச அமுதை உண்ண அழைக்கப்பட்டவர்கள் போலாவர். அவர்கள் ஒரே புனிதப் படிவத்தில் (ஒரே ஞானத்தால் மறுமையும் சீர்பட்டு இரட்சகனின் கருணை கடாட்சம் என்ற) இருவித அமுதுகளையும் அருந்தும் பாக்கியசாலிகளாய்த் திகழ்கின்றனர். அவர்கள் தங்களுக்குக் கிடைத்தவற்றை (இம்மையின் ஜசுவரியங்களை ) மக்களுடன் பகிர்ந்து அவர்களைச் சீர்படுத்து கின்றனர். நீயும் அவ்வாறு சீர்பட்டுவிட்ட பின்தான், அவர்கள் உன்னிடமிருந்து ஏதேனும் ஊழியத்தை வேண்டுவார்களாயின், அதைக் கொடுப்பதற்கான பண்பு உண்டாகும். என் ஆரம்ப நிலையையும், தற்சமய நிலையையும் பார்த்த பின்னும், என்னைப் புறக்கணித்து ஒதுங்கிக் கொள்பவர்களே தவறு இழைத்தவர்களாவர்.



(ஆண்டகையவர்கள் தங்கள் தொடக்க நிலையில் மகாப் பேணுதலுடன் துறவு பூண்டு, காடு சென்று, புற்பூண்டுகளை உண்டு, மெய்வணக்கத்தில் சீர்பட்டுப் பின் மக்களிடையே தோன்றி, அவர்களைச் சீர்திருத்தும் பணியில் மூழ்கியிருந்த சமயம் ஜசுவரிய சம்பத்துக்கள் அவர்களிடம் குவிந்திருந்ததுமுண்டு. ஆனால், அவர்கள் அவற்றை ஏறெடுத்தும் பார்த்ததில்லை. இந்த உண்மை நிலையைச் சிலர் சரியாகப் புரிந்து கொள்ளாமல், அவர்களையும் இம்மையின் பாசம் பற்றிக் கொண்டது என்று எண்ணி, அவர்களை அணுகாமல் ஒதுங்கிக் கொண்டனர். அத்தகையோர்களைக் குறித்தே இவ்வாறு அவர்கள் கூறியுள்ளார்கள்!

முற்காலத்தில் யாராவது ஒருவர் ஒரு மகானின் (கஷ்டு, கராமத்து) சித்து வேலைகளைப் பார்த்து விட்டால், அவரை அழைத்து, அவர் உயிரோடிருக்கும் வரை தான் பார்த்து விட்ட அந்த சித்துக்களைப் பற்றி (கஷ்டு, கராமத்துக்களைப் பற்றி) எவரிடமும் பேசக் கூடாது என்று வாக்குறுதி பெற்று எச்சரித்து அனுப்பினர். இதுவே உத்தம மகான்களின் புனிதப் பண்பாகும். (அந்தோ கைசேதம்.) இக்காலத்திலோ அப்பாவியான ஒரு மனிதன், சில நாட்களின் வணக்கத்துக்கு பின்னர் (தன்னைச் சோதிப்பதற்காக) இறைவனின் அகமியங்களிலிருந்து ஓர் இரவில் அணுவளவு விளக்கமாவது கண்டானாயின், உடனே அதைப் பகல் முழுவதும் பறையடித்துக் கொண்டு அலைகிறான்! இதன் முடிவென்ன? இறுதியாக அந்த அற்ப அளவு கடாட்சமும், மெய்ப்பொருளால் பறிக்கப்பட்டு விடுகிறது. கருணையாளனான அல்லாஹ் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். மனிதனும் அற்பப் படைப்புதான், காரணங்களை நிகழ்த்தும் சக்தியும் ஓர் அற்பப் படைப்புதான். இறைவன் தீர்ப்பும், விதிப்பும், அந்தக் காரணங்களையும், அவற்றின் அகமியங்களையும் வெளியாக்கலாமென்று அனுமதித்தாலன்றி, அவற்றைப் பகிரங்கப்படுத்தாமலிருக்க வேண்டுவது கடமையாகும். (அவற்றை வெளியாக்கும்படி இரட்சகன் ஆணை வந்த பிறகும்கூட) வெளியாக்கும்போது தூய இதயத்தோடு

இறைவனுடன் தனக்குள்ள உண்மையான தொடர்பின் அகமியங்களைப் பேணிக் காப்பாற்றும் வகையிலேயே வெளியிட வேண்டும்.

இம்மையின் மோக பாசங்களும், அழகும், கவர்ச்சியும் உன் தூய இதயத்தைத் தாக்கத் தொடங்கியதும், அவைகளை உறுதியுடன் அப்பாலாக்கி ஒதுக்கிக் கொள்! அவ்வாறானால் தான் அவை உன் பின்னால் ஓடிவரும்.

(இம்மையின் ஆசாபாசமென்ற) பாலைக் குடிக்காமல் விட்டுவிட வேண்டுமென்று சொல்லப்படுவதன் விளக்கமென்ன வென்று சபையிலிருந்த ஒருவர் எழுந்து வினவினார். அதற்கு ஆண்டகையவர்கள் பதிலளித்துப் பேசியதாவது:)

தாயின் பாலைத் தவிர வேறு உணவை ருசித்திராத குழந்தைக்கே, பால் குடிப்பதை நிறுத்துவது கஷ்டமாகத் தோன்றும். வேறு பான, பண்டங்களைச் சாப்பிட்டுப் பழகிவிட்ட குழந்தைகள், தாயின் மார்பிலிருந்து ஊசிமுனை போல் வரும் பாலை மறப்பதற்குக் கஷ்டப்பட மாட்டா. இறைவனின் திவ்விய சமூகத் திருவாயிலை நாடி ஓடு! நான் இரட்சகன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். (இதிலென்ன அதிசயமிருக்கிறது) நீயும்கூடப் பாசங்கள் உன்னைப் பற்றாமல் அப்பாலாக்கி, அதன் நினைவுகூட உன் இதயத்தைத் தொடாமல், உன் இதயத்தை இறைவன் ஒரு நிலைப்படுத்துவான். உன்னைப் பற்றிக் கொள்ள முடியவில்லையே என்று அந்தப் பாசங்கள் தாம் கவலைப்படும். இம்மையின் பாசங்கள் அமர்ந்துவிட நினைத்த உன் புனித இதயத்தே, இறைவனின் பேரின்பம் அமர்ந்து கொள்ளும். இவ்வாறு இரட்சகனின் அருளும், பேரின்பப் பாக்கியத்தாலும், அவனுடைய புனித அரவணைப்பாலும், உன் தூய இதயம் (கல்பு) புளகாங்கிதம் பெற்றுச் சீர்பட்டு விட்டால், பின்னர் சாதனாங்களின் தேவையே அவசியமில்லாமலாகிவிடும். அந்த நிலையில் அவன் (உன்னைக் காப்பாற்றுவதற்காகவே) உனக்குக் கவசமணிவித்துப் பாதுகாப்பை நல்கிப் புனிதப்படுத்துவான். இம்மையின் ஆசாபாசங்கள் உனக்குத் தொண்டு செய்பவைகளாய்ச் சமைந்து, உன் முன் கைகட்டி



நிற்கும்படி செய்வான்: அவற்றிலிருந்த விஷயத்தை நீக்கி, அவற்றைச் சுத்திகரித்து உன்னிடம் விசுவாசமிக்க நேசநாவுடன், உனக்குரிய ஆகுமான பங்கு (சுகபோகங்)கள், இன்னின்ன இடங்களில் இருக்கின்றன. இன்னவளே உனக்கு ஆகுமான மனைவியானவள் என்று கூறிப் பணிந்து நிற்கச் செய்வான். சதாவும் உன் ஊழியத்துக்காகவே அவை காத்திருக்கும்.

- 36 -

ஏ! இராக்வாசிகளே! ஏ! உலக முழுமையிலுமுள்ள மன்னாதி மன்னர்களே! சர்வாதிகாரிகளே! (காது தாழ்த்திப் பணிவுடன் கேளுங்கள்.) என் இல்லத்தில் எண்ணற்ற உடைகள் தொங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றுள் நான் விரும்புவதை அணிந்து கொள்வேன். நீங்கள் என் விஷயத்தில் (குறை கூறாமல் ஒதுங்கி) நன்மையையே தேடிக் கொள்ளுங்கள். இன்றேல், உங்கள்மீது என் (ஆத்மீகமான) சைனியங்களை ஏவிவிடுவேன். உங்களால் அவற்றை எதிர்க்க ஒருக்காலும் முடியாது. (உங்கள் மீது இறைவனின் கருணை உண்டாகட்டும்! வஸ்ஸலாம்).

(இம்மையின் ஆசாபாசங்களைச்) சம்பூரணமாக அப்பாலாக்கி விடுவதையே புனிதத் துறவு என்கிறோம். சம்பூரணத் துறவு சித்தியான பின்னர், (இறைவனின் ஆணைக்கிணங்கி) அதை (அதன் இன்பங்களை) ருசிக்க எடுத்துக் கொள்ளும் படிவத்தையே மெய்ஞ்ஞான (மஃரிபத்) சித்தி என்று கூறுகிறோம்.

முன்னோர்களான ஞானமகான்கள், தமது காலத்திய ஞான வழிகாட்டிகளாகத் திகழ்ந்தனர். ஒரு துறவி தன்னுள் இம்மையை யாவது, அதன் பாசத்தையாவது புகுத்திக் கொள்வானாயின், அவன் சித்தி பெற்ற ஞானிக்கு அடிமை போலாவான். (துறவியானவன் அற்பசொற்பப் பாசங்களைக் கூட நீக்கிக் கொள்ள வேண்டும்) மறுமையின் இன்பம் கூடச் சுபாவச் சேட்டை, ஆத்ம வேட்கைகளின் ஒருவகையான உணர்ச்சித் தூண்டுதல்தான். (ஆகவே, இன்ப நுகர்ச்சியின் வேட்கை, ஆத்மாவிலிருந்து பரிபூரணமாகப் பிடுங்கப்

பட்டால்தான், தூய துறவு சித்தியாகும்.) இந்தப் புனிதமான துறவுக்கான பண்பு உன்னிடமில்லாதபோது ஞானநாதக்களைக் குறை கூறுவது சிறிய வாயிலிருந்து வெளிப்படும் பெரிய தவறாகும்.)

அவர்களின் இதயம் (இரட்சகனின் நல்லிணக்கத்துக்கொப்ப) ருசிக்க வேண்டியவை அனைத்தையும் ருசித்ததும் (அவர்களின்) இதயங்களிலிருந்தும் ஆசாபாசங்கள் முற்றும் களையப்பட்டு விடுகின்றன. (பாசமென்ற) மரம் அடியோடு பிடுங்கி எறியப்பட்டுப் பின்னரே, புனிதத் துறவிகளுக்கு மெய்ஞ்ஞானப் பிரகாசம் (மஃரிபத்) சித்தியாகிறது; களங்கம் நீக்கிப்பட்டுப் பூரணத் தூய்மை (ஸபா) கடாட்சமாகிறது. மெய்ப்பொருளான இறைவனும், அவனுடைய முடுகுதலும் பிராப்தமாகி, காரண சாதனங்கள் (சபப்) தேவையற்றுக் காரணகர்த்தனே (முஸப்பிபுல் அஸ்பாபே) பிரத்தியட்சமாகி விடுகிறான். அந்த நிலையில் அந்த உத்தம அடியாரிடம் நீங்கா உறுதி (இஸ்த்திகாமத்) நிலை பெற்று, அதன் மகிமையால் அவர் (சதாவும்) இரட்சகனின் திவ்விய சமூகத் திருவாயிலிலேயே அமர்ந்து, (இறைவனின் ஆணையை ஏற்றுப்) படைப்புகளுக்கு ஏவல், விலக்கல்களை உபதேசிக்கிறார். (நபித்துவத்தின் பிரதிநிதியாய்த் திகழ்கிறார்.) உன்னுடைய பாவச் செயல்களே, உன்னை மூடிக் கொண்டு விட்டன. உன் நெஞ்சைக் குளிர வைத்துக் கொண்டிருப் பவனே, உன் பகைவனாவான். உன் பகைவன் (நப்ஸ்) தோல்வி யடைய வேண்டுமானால், உடனே பாவமன்னிப்புத் தேடிப் புனிதமான மறுமையின் பக்கல் திரும்பு. இறைவன் சதாவும் உன்னை நோட்ட மிட்டுக் கொண்டிருக்கிறான். நீ செல்லுமிடமெல்லாம் அவனும் உன்னோடு வந்து கொண்டுதானிருக்கிறான். "இரட்சகா, இம்மையில் நானிருக்கும் அனாதரவான நிலைக்கு இறங்கிக் கருணை புரிவாயாக!" என்று இப்னு அதா பிரார்த்தித்துக் கொண்டிருந்ததைச் சிந்தித்துப் பார்!

"சாமான்யர்களின் மரணம்", "மகான்களின் மரணம்" என்று இரண்டு வித மரணங்கள் உள்ளன. சாமான்யர்களின் மரணத்தைத் தான் நாம் அறிந்திருக்கிறோமே. மகான்களின் மரணமோ அவர்கள் தமது கீழான மனத்தையும், கீழ்த்தரமான இச்சாபாசங்களையும்,



சுபாவச் சேட்டைகளையும், தீய உணர்ச்சிகளையும் அப்பாலாக்கித் (தூங்களைச்) சுத்திகரித்துக் கொள்வதாகவே விளங்குகிறது. ஆகவே, (அவைகளை ஒழித்து விடுவதின் மூலம்) அவர்களின் சீர்பெற்ற இதயத்தில் மகத்தான ஜீவன் சித்தியாகி இறைவனின் முடுகுதலும், சிரஞ்சீவித்தனமும் (ஹயாத்தத் தாயிமி) அவர்களுக்கு வரப்பிரசாத மாக அருளப்படுகின்றன. அந்தப் புனிதப் படிவத்தில் அவர்களுக்கும் மரணத்துக்கும் இடையில் திரையிடப்பட்டு, அவர்களுக்கு (இறைவ னால்) அருளப்பட்ட மகத்தான அனுக்கிரகங்கள், அவர்களுடைய புனித உள்ளங்களில் அருளப்படும். அவர்களின் பூத உடலோ மானிடர்க்கு மரணத்தையே நினைவு படுத்திக் கொண்டிருக்கும்.

உன் வெளிக் கோலத்தில் நீ ஏகத்துவத்தைப் பெரிதாக ஏற்றுப் பின்பற்றுபவன் போலவே காட்சி தருகிறாய். ஆனால், உன் அந்தரங்க நிலையோ, அதற்கு மாற்றமானதாகவே இருக்கிறது. உன் முகம் மகிமை மிக்க 'கஃபா'வின் திசையையே நோக்கினாலும், உன் உள்ளம் (இம்மையின்) செல்வத்தைச் சேகரிப்பதெப்படி என்ற கவனத்திலேயே ஆழ்ந்து கிடக்கிறது. இருட்டிலேயே உன் (பாதின்) உள்ளம் எழுந்துவிட்டாலும், அதில் (இரட்சகனின்) அச்சத்தைத்தான் காணோம். இறைவா (தீய பந்தங்கள் அனைத்தையும் விட்டு எங்களை அப்பாலாக்கும்.) ஈடேற்றத்தை எங்கள் மீது பொழிந்தருள்.! இப்பிரபஞ்சத்தில் ஒருவர் சிறப்பான படைப்பாக(க் குத்பாகச்) சீர்பட்டுவிட்டால், அவருடைய இதயத்துக்கு முன் ஷைத்தான் சக்தியற்றவனாகிப் பணிந்து, அவருடைய அடிமையாகித் தண்ணீர் நிறைந்த தோல் குடத்தைத் தன் தோளில் கட்டிக் கொண்டு, அவர் பின்னே (பணியாளனாய்) போய்கொண்டிருப்பான். அல்லாஹ்வின் நாம தியானத்தை, நீ அல்லாஹ்வின் மெய்நேசன் (முஹிப்பு) எனவும், அவன் உன்னைப் புகழ்வதை நீயே கேட்கும் மகிமை உனக்குச் சித்தியாகிவிட்டால், அப்போது அல்லாஹ்வால் நேசிக்கப்பட்டவன் (மஹ்பூப்) எனவும் அழைக்கப்படுவாய். அவனுடைய புனிதத் திருநாமங்களை உன் நாவால் உச்சரிக்கும்போது, உன்னைப்

பிராயச்சித்தம் செய்பவன் (தாயிப்) என்றும், தூய இதயத்தால் (கல்பால்) நீ அவன் திருநாமத்தை உச்சரிக்கும்போது, மெய்ஞ்ஞானப் பாதையில் நடப்பவன் (ஸாலிக்) என்றும், உன் தூய உள்ளத்தால் (பாதினால்), நீ அவன் திருநாமத்தை உச்சரிக்கும் போது ஞானமகான் (ஆரிப்) என்றும் அழைக்கப்படுவாய்.

உன் துர்க்குணங்களையும், துஷ்டத்தனங்களையும் ஒழித்துவிட்டுப் பரிபூரணமாக நீ சித்தியாகும் வரை, ஒரு கவள உணவுக்காகவோ, ஒரு முழத் துணிக்காகவோ (யாசகத்துக்காகக் கைநீட்டி) உன் நிலையைப் பங்கப்படுத்திக் கொள்ளாதே! அத்தகைய மகிமைக்குரிய பண்பாடு உன்னில் சீர்படாதவரை மகான்களின் சகவாசத்தையும் நாடாதே! இன்றேல், அவர்களின் சகவாசத்தால் உனக்கு நன்மையைவிடத் தீமையே அதிகமாகிவிடும். இந்த அகந்தையையெல்லாம் உதறியவனாக, இறைவனையன்றி, வேறு எவனையும், எதையும் நேசியாதே! ஏ இழிகுணம் படைத்தோனே! உன்னைவிட யூதர், கிறித்துவர்கள் விரும்பத் தக்கவர்களாவர். (அவர்களாவது தங்களை 'முஸ்லிம்கள்' என்று கூறிக் கொள்வதில்லை. நீயோ உன்னை 'முஸ்லிம்' என்று கூறிக்கொண்டு, யூதர், கிறித்துவர்கள் செய்யும் துர்க்கிருத்தியங்கள் அனைத்தையும் செய்கிறாயே) வெளிக்கோலத்தில் (உன்னைவிடச்) சுத்தமான வனாயும், அறிவாளி போன்றும் குராசனிலிருந்து வெளிப்படவிருக்கும் தஜ்ஜாலைக் கூட, நான் உன்னை விட அதிகம் விரும்புகிறேன். ஏன் அவனைவிட, நீ எந்த வகையில் நல்லவனாக இருக்கிறாய்?

ஏ! இறைவனின் நல்லடியார்களே! நித்திய ஜீவியத்தின் பக்கம் (ஹயாத்தத் தாயிமி) விரைந்து வாருங்கள்! ஒருக்காலும் வற்றாத ஜீவாமுத (மெய்ஞ்ஞான) ஊற்றை நோக்கி ஓடி வாருங்கள். எப்போதுமே அடைக்கப்படாத (சதாவும் திறந்தே கிடக்கும்) திவ்விய சந்நிதியின் திருவாயிலில் நுழைய ஓடி வாருங்கள்! எந்நாளும் நீங்காமல் நித்தியமாய் நின்றிலங்கும் புனித நிழலில் அமர வாருங்கள்! எப்போதுமே, அழுகியோ, காய்ந்தோ போகாத இன் கனியை ருசிக்க



வாருங்கள்! இவற்றின் மகிமையை அல்லாஹ்வையன்றி வேறு யாரும் அறியமாட்டார்கள்.

சிற்றின்பத்திலேயே மூழ்கி விட்டவர்களே! நப்பாசை என்ற உணர்வால் கொழுத்துள்ளவர்களே! உன்னதமான மெய்ப்பொருள் என்பது என்ன என்றே நீங்கள் அறியவில்லை. எனவே, நாம் தரும் 'புனித தீட்சை' என்ற நெருப்பில் (புகுந்து) கரிந்து விடுங்கள்! அதில் (அஞ்ஞானமென்ற) திரைகளும், வாயில்களுமே கரிந்து போகும். அப்போது நமக்கும், உங்களுக்குமிடையில் எந்தத் தடுப்புக்களும் இல்லாதொழிந்துவிடும். அந்தத் தருணமே, அந்தப் பரிசுத்த 'மெய்ப்பொருளை' நாம் தரிசித்துக் கொண்டிருப்பது போலவே, நீங்களும் தரிசிக்கும் பாக்கியம் பெறலாம். (இம்மையின் செல்வங்களைப் பயனுள்ள பாதையில் ஈடுபடுத்தலாம்.)

ஏ! இறைநேசன் எனத் தன்னைத் தானே) கூறிக் கொள்பவனே! அவ்வாறு பிதற்றுவது முறையல்ல. ஏனெனில், இறைத்தோழமை (விலாயத்) என்ற புனிதப் பண்பு (உத்தம மகான்களுக்கு) இறை வனால் அருளப்படும் மெய்ஞ்ஞானப் பிரகாசமாகும். புனிதமான மெய் வணக்கங்களின் திருநாமமே இறைத் தோழமை என்பதேயன்றி, வெறும் வாய் வீச்சின் பெயரல்ல. இறைத் தோழமை பெற்றவர், (ஒலியுல்லாஹ்) புனிதமிக்க ஆத்மீக மகிமை பொருந்தியவராவார். அவர் மாளிகை, படைப்புகளோடு பிணைந்து நிர்மாணிக்கப் பட்டுள்ளது. (அல்லாஹ்வின் மீது கொள்ளும் மெய்விசுவாசம் (ஈமான்) தான் இதயத்தின் திறவுகோலாகும். அதன் மெய்யான தாத்பரியத்தை நீ அறிவாயா? காலத்துக்கொரு புனிதப் புதல்வராக ஆத்ம சக்தி பெற்ற ஏதேனும் ஒரு மகாத்மாவின் புனிதப் போர்வைக்குள் போய் ஒளிந்துக்கொள்! அவர் திருச்சமூகத்தில் அமர்ந்து, அந்த அங்கியை நீ அணியும் வரத்தை அவர் அருளும் வரை நீயாகவே ஒரு பிடி உணவைக் கூட அவரிடம் கேட்காதே!

பிரமிக்காதே! உன்னதமான இந்தப் படிவத்தில் நின்று சீர்பட்டுவிட்டால், அந்த மகாத்மா உன்னைப் புனித அணைப்பில் அழைத்துத் தம் மகிமைமிக்க ஞானோபதேசங்கள் என்ற அங்கியை

உனக்குப் போர்த்தி, அகமியமிக்க சில புனிதப் படிவங்களையும் சூட்டிக் காட்டுவார். அந்தப் பாக்கியத்தால் உன் இதயமே (தூய கல்பே) ஞானப்பிரகாசம் பெற்றுவிடும். அப்போது அல்லாஹ்வின் ஞான அகமியங்களை உன் தூய இதயத்தால் தரிசிக்கும் பேறு கிடைக்கும். அந்த நிலையில் நீ உன் கண்களை மூடிச் சிரம் தாழ்த்தி அமர்ந்துவிட வேண்டும். அந்தப் பவித்திரமான அகமியங்களை எவரிடமும் கூறிக் கொண்டிருக்கக் கூடாது. உத்தம மகான்கள் தாங்கள் கடந்துவிட்ட புனிதப் படிவங்கள், சித்தியாக்கிக் கொண்ட உன்னத நிலைகளுக் கொப்பவேதான் இறைவனின் அகமியங்களையும், அற்புதங் களையும் அடைந்து கொண்டனர். அவர்களின் தூய இதயம் தூய்மை யடையுமளவுக்கு, அவர்களின் வெளிக்கோலத்திலும், வனப்புமிக்க மாறுதல்கள் நிகழும். மகான்களின் இப்புனித ரகசியங்களைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்ற சாதகர்கள், குருடர்கள், செவிடர்கள் போன்றே (எவரிடமும் அவற்றை வெளியாக்காமல்) சம்பூரணமாக மௌனமாகிவிட வேண்டும். சாதகனின் சிறப்பும், ஒழுக்கமும் பரிபூரணம் பெற்று, ஞான அகமியங்களை மறைத்து வைப்பதில் அவன் சீலமிக்கவனே என்று நிச்சயம் ஏற்பட்டு விட்டதும், மகான்கள் சாதகனின் தூய்மையான இதயத்தைத் தங்கள் மெய்ஞ்ஞானப் போர்வையால் போர்த்தி அழகுபடுத்தி, அவனுடைய சீர்பாட்டுக்கு இறைவனிடம் பகிரங்கமாகப் பிராத்தனையும் செய்வார்கள்.

பிரமிக்காதே! அந்த மேலான படித்தரத்தில், பாக்கியசாலியான அந்தச் சாதகனின் நிலை, (சதாவும் பயபக்தியுடன் அடிமை போல்), மூஸா நபி (அலை) அவர்களுடனிருந்த யூஷஃவின் நிலைபோல் சமைந்துவிடவேண்டும். பிரிய மகனே! உன் ஆதீனத்தில் இல்லாத ஐஸ்வரிய சம்பத்துக்கள் (நீ விரும்பினாலும்), உன்னுடையவை ஆகிவிடமாட்டா. சம்பத்துக்கள், ஒன்று, உன்னுடையவையாயிருக்க வேண்டும்; அல்லது, பிறருடையவையாயிருக்க வேண்டும். இந்த இரண்டு நிலைகள்தாம் உண்டு. இறை கடாட்சமான ஐஸ்வரியங்கள் உனக்கு அருளப்பட்டிருந்தால், நீ தூங்கிக் கொண்டிருந்தாலும், அவை நிச்சயம் உன்னிடம் வந்து சேரும். பின் ஏன் உன் புனித சன்மார்க்கத்



துக்கே நஷ்டமுண்டாகும்படியான சிரமமெடுத்துக் கொள்கிறாய்? நீ சதாவும் ஞானபோதங்களைச் செவிமடுப்பதிலும், மகான்கள், சன்மார்க்க அறிஞர்களான உத்தம சீலர்களின் புனித சகவாசத்தில் அமர்வதிலும், கவனம் செலுத்து! இம்மையில் நிகழ்ந்து கொண் டிருக்கும் சம்பவங்களைச் சிந்தித்துப் பார்த்தால், இம்மையின் சாதனங்களையும், (உதவி நாடிச் செல்லும்) நண்பர்களையும் நிராகரித்து விடுவது உனக்கு இலகுவாகும். சித்த சுத்தி கைவல்யமான பிறகும் கூட படைப்புகளின் முன் பெருமைப்பட்டுக் கொள்வதற்காக, ஜீவனோபாயத்துக்காக மேற்கொண்டிருந்த தொழிலைக் கைவிடுவது கூடப் பிறர் மெச்சச் செய்யும் அமல் (ரியா) என்ற குற்றமாக ஆகிவிடும். அவ்வாறு கைவிடுவது முகஸ்துதியாக இருந்தாலும், அதனால் (அதன் மூலம் சும்மா இருப்பதால்) மேலும், மேலும் சம்பூரணச் சித்திசுத்தி சித்தியாகலாமென்றிருந்தால், அந்தத் தொழிலைக் கைவிடுவதில் குற்றமில்லைதான்.

- 37 -

நீ நாட்டமுள்ளவனாயும், (இரட்சகனைத்) தேடுபவனாயும், இருக்கும் ஆரம்ப நிலையிலுங்கூடச் சன்மார்க்க நெறிமுறையின் (ஷரீஅத்தின்) ஏவல் விலக்கல்களை ஏற்று ஒழுகுவது அவசியமாகும். அதன் (ஷரீஅத்தின்) பவித்திரமான சத்வணக்கங்கள்தாம் உன்னை மெய்ஞ்ஞானப் படிவங்கள்வரை கொண்டு சேர்க்கும். அந்த மேலான உயர்ந்த ஞானப் பிரகாசம் தான், தூய இதயத்துடனும் (கல்புடனும்), ஜொலிக்கும் உள்ளத்துடனும் (பாதினுடனும்), களங்கமற்ற அவயவங் களுடனும், பரிபூரணமாக மெய் வணக்கம் புரியத் தூண்டும்; அதுவே உன்னை ஏவலும், விலக்கவும் முன்வரும். கருணா சமுத்திரத்தின் திவ்விய சமூகமே (இறைவா) உன்னை நாடாதவர்கள் எங்களில் யாருமே இல்லை தான். எனினும், இம்மையின் சோதனைகள் தாம் எங்களைத் தடுக்கின்றன. (அதனால் தான்) உன் புனித முடுகுதலை அடைய இயலாதவர்களாகிக் கிடக்கிறோம்.

சன்மார்க்க நெறிமுறையின் (ஷரீஅத்தின்) ஆணைகளைச் சம்பூரணமாகக் கடைப்பிடிப்பது உன் கடமையாகும். உனக்கு அந்த மகத்தான கடமைகளைக் கடைப்பிடிக்க உடல் பலமிருந்தும், அந்தந்த நேரங்களில் (வக்தில்) அவற்றை நிறைவேற்றாமல் வீணே பிற்படுத்தினால். நீ (உன் நப்சுக்கே) அநீதி இழைத்துக் கொண்டவனாவாய். அவற்றை நீ வேண்டுமென்றே கடைப்பிடியாமல் விட்டு விட்டால், நீ ஒரு காபிராவாய். இம்மையின் செல்வங்களை உன் (அவசியமான) தேவைக்கு மட்டுமே எடுத்துக் கொள்! ஆடம்பர உல்லாசத்துக்கோ, அனாவசியமான பேராசைக்கோ அடிமையாகி, அவற்றைச் சேகரிக்காதே! (இறைவனையே) சம்பூரணமாக வழிபட்டு, அதன் மகிமையால் உன் இஸ்லாம் உறுதி பெற்றபின், தூய ஆத்மாவை இறைவனின் விதிப்பு என்ற திருக்கரத்தில் ஒப்படைத்துவிடு. அவனே உன் தூய இதயத்துக்குப் புனித உடை உடுப்பான். பிறகு, உன் வெளிக் கோலத்தையும், அதன்பின் உன் உள்ளத்தையும் கூட அழகு படுத்துவான். பகலில் உனக்கு விதவிதமான 'தன்னை அழித்த' நிலைகள் (பனாயிய்யத்) உண்டாகும். அதன்பின், இறைவனே உனக்கு உன்னதமான நித்திய ஜீவனை அருளி, இதயத்துள் புகுந்துவிட்ட களங்கங்களையும், ஊசாட்டங்களையும் அப்பாலாக்கி அருள்புரிவான். (சிறந்த அடியான்) படைப்புகளைக் கண்டதும் பிணத்துக்குச் சமமாய் (விருப்பு வெறுப்பின்றி) ஒதுங்கிக் கொள்கிறான்; படைப்பவனைத் தரிசித்ததும் உயிர் பெறுகிறான். பின்னும், படைப்புப் பொருள்கள் அவன் பார்வையில் தேவைப்படுவனவாயும், கேவலமானவையாயும் மாறி மாறிக் காட்சியளிக்கின்றன. மீண்டும் இரட்சகனின் தரிசன சித்தியால் உயிர் பெற்றுப் பிரகாசமடைந்து எழுந்து அமருகிறான். தன் கீழான மனத்தையும், உள்ளமையையும் அப்பாலாக்கிவிட்டு மறைந்து கொள்கிறான்; இறைவனின் சகவாசத்திலேயே (சுஹ்பத்திலேயே) வாழ்ந்து, மனிதர்களின் பார்வைக்கு உணர்வற்ற பிணத்துக்குச் சமமாக உலவுகிறான்.

உத்தம சாதகர்களுக்கு (இவ்வாறு சீர்பெற்ற மகான்களே) ஞானோபதேசம் கற்பிக்கும் கலாசாலைகளாவர். மெய்விசுவாசி



களான சாதகர்கள் இவர்களை அணுகியதும், முதலில் கீழான மனத்தையும், படைப்புகளின் மீதுள்ள மோகத்தையும் முற்றும் ஒதுக்குமாறு ஆணையிட்டு (அவை இல்லாதது போலவே நினைத்துவிட)ப் பழகுகின்றனர். இதில் சீர்பட்டதும், இகபரமிரண்டையும் (தம் இதயத்திலிருந்து) அழித்துவிடவும் பழகுகின்றனர். அதிலும் பூரணமான நிறைவு ஏற்பட்டபின், இறைவன், புனித சீலர்களான இந்தச் சாதகர்களை தான் நாடியவாறெல்லாம் மாற்றி உயர்வு படுத்துகிறான். நீயும் அந்த மேலான படிவத்துக்கு உயர்ந்து முக்தி பெற நாடுகிறாயா? அப்படியானால் விலக்கப்பட்டவை, சந்தேகத்திற்குரியவை அனைத்தையும் சம்பூரணமாக அப்பாலாக்கிவிடு! இதில் நிறைவு பெற்ற பின், கலப்புள்ள ஆகுமானது (ஹலால்)களையும் ஒதுக்குவதில் முனைந்து பண்படு. அதன்பின் கலப்பற்ற ஆகுமானதையே அனுபவித்து வா! சன்மார்க்க நெறிமுறையும், மெய்ஞ்ஞான உணர்வும், வெளிக்கோலமும், தூய இதயத்தின் தூண்டுதலும் எதைக் கடைப்பிடிக்க அனுமதியளிக்கின்றனவோ, அதுவே கலப்பற்ற 'ஆகுமானது' (ஹலாலானது) ஆகும். எவருக்கும் சொந்தமில்லாத காடுகளில், கடல்களில், பாலைவனங்களில் கிடக்கும் ஐஸ்வரியங்கள் உன்னைத் தேடித் தாமாகவே உன் காலடியில் வந்து கிடக்கும். அவைகளைச் சேகரிக்க வேண்டுமே என்று கவலை கொள்ளாதே! நீ தூங்கிக் கொண்டிருந்தாலும், அவை தொடர்ந்து உன் மீது பொழியப்பட்டுக் கொண்டே இருக்கும். அந்த நிலையில் உன் ஞானப்பார்வை திறந்ததும், உன்னைச் சுற்றி வானவர்களின், நபிமார்களின் புனித ஜீவன்கள் சூழ்ந்திருப்பதைத் தரிசிப்பாய். உனக்கு அருளப்பட்ட அந்தப் பேறுகளைப் பயன்படுத்த (உன்னில் சுடர் வீசிக் கொண்டிருக்கும்) மெய்ஞ்ஞானம் அனுமதி தந்து, இறைவனின் திருமுடுகுதலில் அச்சமற்று அமரப் பொறுப்பேற்றுக் கொள்ளும். படைப்புகளிடமிருந்து எந்தச் சகாயத்தையும் தேடாமலும், அவைகளின் அலங்காரம், புகழ், இகழ், புற அழகு யாவையும் உன் தூய இதயத்தில் ஐக்கியமாக்காமல், அப்பாலாக்கியும், சம்பூரணத்

தூய்மையோடு சீர்படு! அப்போது இறைவன் கருணையும், முடுகுதலும், நித்திய நேசமும், படைப்புகளிடம் ஆசிக்காத பண்பும், இருந்தும் இல்லாமலாகும் (பனாயிய்யத்) என்ற புனிதப் படிவமும் உனக்கும் சாத்தியமாகும். இவை உன்னில் சீர்பட்ட பின், இரட்சகன் ஐக்கியமாகுதலையும், உள்ளமைக்குப்பின் மறைவையும், விலகியிருந்து விட்டபின் முடுகுதலையும், களங்கத்தைப் போக்கித் தூய்மையையும், பிரிவுக்குப்பின் சேர்வதையும், வழி தவறியபின் புனிதச் சந்திப்பையும் வரமாக்கிக் கொள்ளப்பாடுபடு! புனித மௌனத்தால்தான் இதயம் தூய்மையடையும். அவ்வாறு சீர்பட்ட இதயத்தில், உள்ளமையையும் அமர்த்தாமல், சுத்தியாக்கினால் தான், தூய அகம் (பாதத்தின்) உருவாகும். இதன் பிறகுதான் அல்லாஹ்வின் தோழமை (விலாயத்) உனக்கு நெருக்கமாகும்.

இந்த இறைத் தோழமை பெற்ற மகானை, இறைவன், தான் நாடிய சமயம் படைப்புகளின் பக்கம் திரும்பி நிற்க வைத்து, அவர்களையும் தவசீலர்களாகச் சமைத்து, அவர்களின் மகிமையால் மெய்நேசர்களுக்குத் தனது முடுகுதலையும் அருளுகிறான். ஏ! அடிமுதல் நுனிவரை நாசமாகிக் கிடப்போனே! ஆசாபாசங்களில் சிக்கி உழல்பவனே! இகத்தின் சாதனங்களை(யும், மனித சகாயத்தையும்) மட்டும் நம்பிக் கிடக்கும் எண்ணத்தை நீ தூய்மையாக அப்பாலாக்கி விட்டால், நிச்சயம் (இறைவனின்) நல்லருள் பெறுவாய்; நீயே ஒதுக்கிய இம்மையின் சம்பத்துக்களெல்லாம் உன் முன் வந்து குவிந்துவிடும்; நீ ருசிக்க நாடிய (பேரின்ப) அமுதங்களனைத்தும் தட்டங்களில் பரப்பி வைக்கப்படும்; புனித முடுகுதல் என்ற வீட்டில், அன்பன் (மஹ்பூப்) என்ற வைத்தியனின் ஆதரவில் இருக்கும் பாக்கியம் கிட்டும். (இது சமயம் ஒருவர் ஒரு சந்தேக நிவர்த்திக்காக எழுந்து நின்றார். உடனேயே அவருக்கு விளக்கமளிக்கும் வகையில் ஆண்டகையவர்கள் தொடர்ந்து பேசினார்கள்.) உன் கேள்வி, உன் தூண்டுதலாலும் (சுபாவச் சேட்டையாலும் உண்டாகிறதென்பதை நானறிவேன். நீ உட்கார்) என்னை அச்சுறுத்துவதற்காக எதையும்



செய்யாதே! நான் வாளேந்தியுள்ளேன். மேலும் (இரட்சகனின் மார்க்கத்தில்! போரிட்டுக் கொண்டிருக்கும் ஆத்மார்த்த வீரனாயிருக்கிறேன். உன் கீழான மனத்தைக் கண்டு (அதனால் வேதனைக் குள்ளாகாமலிருக்க) இறைவன் உன்னை எச்சரிக்கிறான்.

ஏ! மூடனே! நீ அவன் வேதனைக்கு ஆளாகாமலிருக்குமாறு உன்னை அவன் எச்சரிக்கிறான். ஏ! சிறிதளவு ஞான உணர்வு பெற்றவர்(காஸ்)களே! உங்களை உங்கள் கீழான மனம் நாசமாக்கி விடும். அதனை (அடக்கி)த் தூய்மைப்படுத்துமாறு உங்களையும் இறைவன் எச்சரிக்கிறான். ஏ! மேலும் சிறிதளவு மெய்ஞ்ஞானத் துலக்கம் பெற்றவர்களே! (காஸுல் காஸ்களே!) உங்கள் நிலையை மாற்றிக் கொள்ளாமலிருக்குமாறு, உங்களையும் வல்ல இறைவன் எச்சரிக்கிறான். ஏ! சாதாரண மனிதா! உன்னை இம்மையின் சாதனங்கள் நாசமாக்கிவிடுமென்று அவன் எச்சரிக்கிறான். (அவன் ஆணையை மீறினால்) உன்னுடைய பார்க்கும், கேட்கும் சக்திகளையும், ஐஸ்வரிய சந்தானப் பாக்கியங்களையும் உன்னிடமிருந்து பறித்து விடுவான். மறுமையினும் அதற்காக விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவாய். ஏ! சற்றே கூடுதலான மெய்ஞ்ஞான விளக்கம் பெற்றவர்களே! (காஸுல் கவாஸுகளே!) நீங்கள் அவனிடம் பயபக்தி விசுவாசம் காட்டுவதில் அதிக உறுதியுள்ளவர்களாகத் திகழவேண்டும் என்று அவன் உங்களை எச்சரிக்கிறான். ஆகவே, அவனிடமே உறுதியாகப் பயபக்தி விசுவாசமுடையவர்களாகுங்கள்! இதனை ஒரு கணமும் மறக்காதீர்கள்; இறைவனே ஒரு சமயம், "நான்தான் உன்னுடைய அல்லாஹ். நீ அஞ்சற்க" என்று உங்களிடம் கூறி, இரகசிய சம்பாசணை செய்யும் பாக்கியம் உங்களுக்குக் கிடைக்கலாம். ஆகவே, இந்தப் புனிதப் படிவத்தில் நீங்கள் நிறைவு பெற்றதும், அச்சத்தின் பக்கம் உங்கள் பாதங்கள் நகர்ந்தாலும், அவனே உங்களைத் தடுத்துக் கொள்வான். மேலும், உங்கள் சாந்தியும், அமைதியும் அச்சத்தோடு கலந்துவிடும் விதமாக மாறினாலும், அவனே அவைகளைப் புனிதப்படுத்துவான்.

இவ்வாறு இதயத்தின் புனிதம் நிறைவு பெற்றபின் பூமி, வான லோகத்தின் ஆட்சிகள்கூட, அதைக் களங்கப்படுத்த முடியாது. ஜோடித்துக் கொள்வதாலும், ஆசைப்பட்டு விடுவதாலும், (ஞானிகள் போல்) நடித்து விடுவதாலுமெல்லாம் புனிதப் படிவங்கள் சித்தியாகி விடமாட்டா. முதலில் அவற்றைப் பெறுவதற்கான அருகதையை உன்னில் உண்டாக்கிக் கொள்ளவேண்டும். தூய, புனிதமான துறவு நிலையை அமர்த்தினால்தான், அந்த உயர்ந்த லட்சியம் மென்மேலும் சீர்பட்டு, (அவற்றின் மகிமையால்) உன் மீதும், சபையோர்கள் மீதும் இறைவன் கிருபாகடாட்சம் அமோகமாகப் பொழியப்படும்; சம்மானங்களும், மகாப் பேறுகளும் முன்னும் பின்னும் சொரியப் பட்டுக் கொண்டுமிருக்கும். சாதகர் ஒருவர், ஞான குரு ஒருவரை அணுகி, "நான் சுவர்க்கத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தை மட்டும் ஆசிக்கிறேன்" என்றார். அது கேட்ட அந்தப் பெரியார், "முகத்தான (அருட்கொடைகளெல்லாம் அமோகமாக் கிடக்கும்) மறுமையில் ஒரு குறுகிய இடம் மட்டும் போதுமென்கிறாயே. (அந்தோ, துர்ப்பாக்கியமே!) இம்மையில் இவ்வாறு ஒரு குறுகிய இடம் போதுமென்று நீ திருப்திப்படக்கூடாதா?" என்று கூறினார்.

மரணத்திலிருந்து ஒருக்காலும் தப்பிக்க முடியாது. பின் நீ ஏன் இப்போதே மரணித்து (இருந்தும் இறந்த நிலையிலாகி) விடக்கூடாது? மற்றவர்களோடு கலந்துறவாடுவதற்கும், பிணத்துக்கும் என்ன சம்பந்தம்? கொள்வதிலோ, கொடுப்பதிலோ பிணத்துக்கு என்ன அக்கறை? பிணத்துக்கு நண்பன் யார், பகைவன் யார்? மௌனமும் அமைதியும் தானே அதற்குரியவை! போக பாக்கியங்களை ஒதுக்குவதிலும், தீமைகளைத் தவிர்ப்பதிலும் பிரேதம் போலாகிவிடு. பிரேதம் யாரிடமாவது பேசுமா? இந்தப் புனித நிலையில் பரிபூரண மாகச் சித்தி பெற்றதும், நீ நாடினால் அந்த இருந்தும் இறந்த நிலையிலேயே உரையாடும் பேறுகள் உனக்குச் சித்தியாகும். உன்னைப் பொறுத்தவரை படைப்புகளைப் பொறுத்தவரை, நீ மரித்து



(இருந்தும் இறந்த நிலையிலாகி) விட்டால், அப்போது சத்திய புனித செயல்களையே செய்வாய். பிரேதம் சத்தியத்தைத்தான் அறிவிக்கும். (பொய்யை அல்ல.)

(ஒரு சூபி, தமக்கு ஏதோ இம்மையின் செல்வங்கள் வேண்டுமென்று கேட்டெழுதிய ஒரு கடிதத்தை இச்சமயம் ஆண்டகையவர்களிடம் கொடுக்கவே, அதற்குப் பதிலளித் தார்கள் :)

இந்த(த் 'தஸவ்வுப்') நிலை வீணானது. படைப்புப் பொருள்களின் ஆசையைத் தவிர்த்தும், அதன் பக்கம் பார்வையைக் கூடச் செலுத்தாமலும் தூய்மையாகுபவன் தான் மெய்யான சூபியாவான். சிறந்த சூபி கேட்கப்படுவானேயன்றி, யாரிடமும் யாசிக்கவே மாட்டான்.

(இச்சமயம் "கிழிசலில் ஒட்டுப்போடுவதால், அதிகம் கிழிந்து விட்டால் என்ன செய்வது?" என்று ஒருவர் ஆண்டகையவர்களிடம் கேட்டார். அதற்குப் பதில் கூறி ஆண்டகை அவர்கள் தொடர்ந்ததாவது:)

மௌனமாயும், (இரட்சகனின் நாட்டத்துக்கு) நல்லிணக்கம் காட்டியும் அமர்ந்துவிடு! அதுசமயம் இறை சங்கல்பம் ('தக்தீர்') கிழிசலின் அளவுக்கு ஒட்டுத் துணியைத் தரட்டும் அல்லது இறைவனின் புறத்திலிருந்து ஆணை ஏற்று, வேறொருவர் வந்து ஒட்டுப்போடட்டும்.

நீ திறவுகோலைத் தவறவிட்டுவிட்டால், வாயிற்படியிலேயே படுத்துத் தூங்கு! நீதான் படைப்புகளின் பாசத்துக்கு அடிமையாகிக் கிடக்கிறாயே! படைப்புகளை மோகிப்பதால், உப்பி ஊதியும், அவைகளைத் தவிர்ப்பதால் மெலிந்தும் போய் விடுகிறாயே! ஏகத்தவத்தை ஏற்காமல், உன் இதயம் காலியாகி, இறைவனுக்கு இணை வைப்பவனாய் உழல்கிறாயே! மனிதர்களுக்கே அடிமைப் பட்டு விட்டதால், உன்னிடம் சத்திய கருமங்களே இல்லாமலாகி

விட்டன. உன்னை (மனிதனாகவே) கணிக்க முடியவில்லை. ஞான நாதர்கள் கூட்டத்திலோ சிறந்த சாதகர்கள். உத்தமோத்தம மகான் களின் சத்திய சங்கத்திலோ காணப்படாதவனாகப் போய்விட்டாய். நான் மட்டும் அல்லாஹ்வுக்கு வெட்கப்படவில்லையானால், உங்களில் ஒவ்வொருவர் வீட்டுக்கும் விருந்தினனாக வந்து, உங்கள் காதுகளைத் திருகி ஒழுக்கத்தையும், கண்ணியத்தையும் உங்களுக்குக் கற்பித்து விடுவேன். ஆ. இந்த ஐஸ்வரிய சம்பத்துக்களின் பாசந்தான் என்னே! (இவ்வளவு தீங்கிழைக்கின்றனவே!) தம்மைப் பார்த்தவர்களையும் (தம்மைச் சுற்றி நிற்பவர்களையும்கூடத்) தம் பக்கம் இழுத்துக் கொள்கின்றனவே!

அந்தோ, கைசேதமே, இம்மையின் செல்வங்கள் கிழக்கில் இருக்க, நானோ மேற்கில் இருக்கிறேன்! (இந்த நிலையில்) என்னிடம் அவைகளை யாசிக்கிறாயே! (என்னில்) இறைவனின் ஏகத்துவத்தை முழுமையாக அமர்த்தியவனாக எனக்கு விதிக்கப்பட்டதை மட்டும் நான் எடுத்துக் கொள்கிறேன். மறுமையையும், புனித முடுதலையும் மட்டும் என்னிடம் கேள். நபி பெருமான் (ஸல்) அவர்களின் பரிசுத்த சன்மார்க்கத்தின் சுவர்கள் தொடர்ந்து வீழ்ந்து கொண்டே இருக்கின்றன. அதன் புனித அடிப்படை கலகலத்துக் கொண்டிருக்கிறது. ஏ பூமியில் வசிப்பவர்களே! வாருங்கள்! (சன்மார்க்கத்தின்) விழுந்துபட்ட பகுதியை மீண்டும் நிர்மாணித்துக் கட்டடத்தைக் கெட்டிப்படுத்துவோம்! பாழானதைப் புதுப்பிப்போம்! இந்தச் சீர்பாடு (என் ஒருவனால் மட்டும்) சம்பூரணமடையாது. (அனைவரும் சேர்ந்து செய்ய வேண்டும்) ஏ சூரிய சந்திரனே! ஏ பகலே! நீங்களும் வாருங்கள்! ஆம். மறைத்து வைக்க வேண்டிய சில (அகமியமான) படிவங்களும் இருக்கின்றன. அவை சித்தியாக இறைவன் குறித்துள்ள நேரம்வரை நாம் உறக்கத்தில் காத்திருப்பது நமது கடமையாகும். பிஸ்மில்லாஹ்!

(இப்போது ஆண்டகையவர்கள் மேடை மீது சிறிது சாய்ந்து, கையைத் தலைக்குக் கீழ் வைத்துக் கொண்டு, சிறிது



நேரம் கண்களை மூடிக் கொண்டிருந்துவிட்டுப் பிறகு நிமிர்ந்து உட்கார்ந்தவாறு பேசலானார்கள்:)

நீங்கள் அறிவிலிகளாயும், பைத்தியங்களாயும் விளங்குகிறீர்கள். கவனமில்லாமல் நீங்கள் என்னைப் புறக்கணித்துவிட்டு அப்பாலாகி விடுவது, உங்கள் மூலதனத்தையே குறைத்துவிடும். பேராசைக் காரர்களாய்ச் சமைந்து அகம் பாவத்தாலும், தான்தோன்றித் தனத்தாலும் இரட்சகனுக்கு இணை வைத்தல் உங்களை அணுகிவிடக்கூடாது.

(அரச அவையைச் சேர்ந்த தலைமை அதிகாரிகளுள் ஒருவரான அஜீஸுத்தீன் என்பவர், அதுவரை ஆண்டகை யவர்களின் திருச்சபைக்கு வராதவர். அவர்களோடு ஒரு தடவையாவது தனிப்பட்டுப் பேசாதவர். இச்சமயத்தில் காவலரும் ஏவலரும் புடைசூழ ஆண்டகையவர்களின் திருச்சபைக்கு வந்து அமர்ந்தார். உடனே ஆண்டகை அவர்கள் அவரை நோக்கிப் பேசினார்கள்:)

உங்கள் அனைவரின் நிலையும் இதுவாகவே இருக்கிறது. ஒருவர் மற்றவருக்குப் பணியாட்களாக ஊழியம் புரிந்து கொண்டு கிடக்கின்றீர்களே. இறைவனின் திருப் பணியை யார் செய்வது? நீங்கள் அனைவரும் படைப்புகளாகவும், படைப்புகளை மோகிப்பவர் களாகவுமே உழல்கிறீர்கள். ஆகவே, இதை நான் 'உள்ளமை' என்று கூறுகிறேன். (இதைத்தான் அழித்துவிட வேண்டும்.) ஏ மதிக்க வேண்டியவர்களே! ஏ மண்ணாங்கட்டியே! நீ மண்ணோடு மண்ணாய்த்தான் போய்விடுவாய்! உன் புதை குழியும் அழிந்து நாசமாகிவிடும். ஒரு மண்ணிலிருந்து, மற்றொரு மண்ணை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறீர்கள். அனைவரும் இன்ன கதி அடைவீர்கள் என்பதையே அறிந்து கொள்ளாமலிருக்கிறீர்களே! உங்களுக்குப் பைத்தியம் உண்டாகிவிட்டது. மரணம் வந்து உங்களை எழுப்பு முன்பு நீங்களாகவே விழித்துக் கொள்ளுங்கள்.

உன் கீழான மனத்துக்குப் புத்தி புகட்டி, அதை மிதித்துத் துவைத்துவிடு! உன் ஐஸ்வரியங்களைப் பங்கிட்டுவிடு! நீ விரும்பாமலேயே நீ (பரலோக) யாத்திரை போக நேரிட்டுவிடும். "அவரவர்களுக்குரிய தவணை வந்துவிட்டால், ஒரு வினாடியும் முந்தவோ, பிந்தவோ செய்யாது!" என்பது இறைவனின் எச்சரிக்கையாகும். தன்னிடமிருக்கும் அனைத்தும் (இம்மையின் சம்பத்துக்கள்) தனக்குச் சனியனாகவே வாய்த்துவிடும். மகத்தானதென்று நீ நம்பிக் கொண்டிருப்பவை யாவும் உனக்கு அழிவைத் தரக்கூடியவையாகவே இருக்கின்றன. (இம்மையில்) நீ கண்ணியமானதென்று கருதுவதே உனக்கு முதல் பகைவனாகும். உன்னைப் பொடுபோக்கில் ஆழ்த்துபவனே உன் மெய்யான விரோதியாவான்.

இரட்சகா! பொடுபோக்காளர், அசட்டையாளர்களின் தூக்கம் எங்களையும் பீடித்துவிடாமல் விழிப்படையச் செய்! நாங்கள் மற்றவர்களுக்கு நல்வழிகாட்டி ஆதரவு நல்க அருள்புரி! எங்களை புனிதச் சேவையிலேயே ஈடுபட்டிருக்கச் செய்! அப்படியானால் தான், எங்கள் கீழான மனத்தைத் தெளிவாக்கித் தூய்மைப்படுத்தி உனக்கே அதை அர்ப்பணிக்க முடியும்.

மற்றவர்களுக்கு ஞானோபதேசம் புரியத் தொடங்குமுன் நீ உண்மையான மெய் விசுவாசியாக இறைவனின் திவ்விய சமூகம் வரை செல்லாமல், பிற படைப்புகளை அங்கே வரும்படி அழைப்பது உனக்கு நல்லதல்ல. தானே நடந்து சீர்படாதவளை, பிறரைச் செய்யவேண்டாமென்று தடுத்த பாவ கரியங்களைத் தானே செய்பவனே! தான் உபதேசித்தபடி தானே கடைப்பிடித்துச் சீர்படாதவன் மூலம், தன் ஆத்மாவுக்கும், இறைவனுக்கும், அவன் திருத் தூதருக்கும் கேடு இழைத்து விட்டவனே! உனக்கே கைசேதம்! தன் முண்டாவை (ஞானிகள் செய்வதுபோல்) ஒடுக்கிக் கொள்வதாலோ, மீசையைக் கத்தரித்துக் கொள்வதாலோ, முகத்தை மஞ்சளாக்கிக் கொள்வதாலோ நீ இரட்சகனிடம் கண்ணியம் பெற்று விடமுடியாது. மெய் விசுவாசம், இங்கே (கல்பில்) இருக்கிறது; வெளி



உடையிலல்ல. (சபைக்கு வந்த தலைமை அதிகாரியோடு சுற்றிக் கொண்டு வந்திருந்த ஆலிம்களைச் சுட்டியே ஆண்டகையவர்கள் இந்தக் கடினமான வார்த்தைகளை உபயோகித்தார்கள்.)

உத்தம மகான்களின் இதயத்தில் (இரட்சகனின் கண்காணிப்பு) சாட்டப்பட்டுள்ளது. அதுவே அவர்களுக்குரிய கௌரவமுமாகும். கண்ணியமிக்க அந்தப் பாதுகாவலர்கள் மகான்களின் இதயங்களில், அவயவங்களில், ஆசாபாசங்களில் புகுந்து கொண்டிருக்கும் கொள்ளைக்காரர்களுடன் (தீமையுடன்) போராடிக் கொண்டிருக்கின்றனர். "நான் விண்ணுலக யாத்திரை (மிஃராஜ்) சென்றிருந்த சமயம், உதடுகள் வெட்டித் தள்ளப்பட்டுக் கொண்டிருந்த பாவிகளான ஒரு கூட்டத்தைக் கண்டேன். இவர்கள் யாரென்று வினவினேன். இவர்கள் தாம் உங்கள் கூட்டத்தாரில் தாங்கள் நல்அமல்களை கடைப்பிடிக்காமல், பிறரை ஏவிக் கொண்டிருந்த 'ஆலிம்கள்' என்று எனக்கு விளக்கப்பட்டது" என்று நபி பெருமான் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். இரட்சகா! அனைவரையும் சீர்படுத்தி, உத்தமர்களாகச் சமைத்துவிடு! எங்கள் மூலமாக (மற்றவர்களுக்கும்) உயர்வு அருள்! மேலும், எங்கள் வேண்டுகோளையும், தேவைகளை யும் உன்னிடமே கேட்க அருள்புரி! (அங்கே வந்திருந்த குறிப்பிட்ட அதிகாரியை நோக்கி) மெய் வணக்கத்துக்காகத் தயாராகிக் கொள்; தீட்சை (பைஅத்) பெற உன் கையை என் கரங்களின் மீது வை! அழிந்து போகும் இந்த வீடு, வாசல், செல்வம் அனைத்தையும் அப்பாலாக்கிவிட்டு ஓடி, இரட்சகன் பக்கமும், நல்வணக்கத்தின் திசையிலுமாகிவிடு! (என்று கூறினார்கள்).

விரைவிலேயே நிச்சயம் நீ (மரணித்து) இறைவனின் பக்கம் செல்ல நேரிடும். அப்போது அவன் உன் அமல்கள் குறித்து விசாரிப்பான். நீ அவனை ஏகத்துவப்படுத்துவதற்காகவே உன்னைப் படைத்தானேயன்றி, இம்மைக்காகவோ அன்றி மறுமைக்காகவோ (அவைகளை மட்டும் நீ ருசிக்க வேண்டியோ) அல்ல. இம்மை

உன்னை நடத்திக் கொண்டு சென்றுவிடாது; வெள்ளமும் உன்னை அடித்துக் கொண்டு போய்விடாது. உன் ஆத்மாவின் பக்கமே பார்த்துக் கொண்டிருப்பதும், அல்லது உன் கீழான மனத்தின் ஊசாட்டங்களுக் கிணங்கி இம்மையின் வாயைப் பார்த்துக் கொண்டிருப்பதும், அதை உனக்கு (ஆலோசனை கூறும்) மந்திரி போல் சமைத்துக் கொண்டிருப்ப தும், உனக்கு மாபெரும் ஆபத்தாகவே முடியும். தன் நல்ல முடிவை லட்சியமாக்கிக் கொள்பவனே உத்தமமான மெய் விசுவாசியாவான். நல்ல நேசன் பின்னே தள்ளப்பட மாட்டான். உன் மனத்தை வினவித் தனிமை கொண்டாயானால்; உன் தூய இதயமும், உள்ளமும் (கல்பும், பாத்தினும்) உன்னோடு உரையாடும். அவை இரண்டோடும் உன் ஐக்கியம் களங்மற்று (உன் காரியங்களுக்கு) இறைவனே பொறுப்பேற்றுக் கொள்வான். இந்த நிலைக்குப்பின் நீ பிரபஞ்ச வாசிகளுக்கே பாதுகாவலனாக நியமனமாகிவிடுவாய்.

இந்த மன ஊசாட்டங்களை (உன்னிலிருந்து) அப்பாலாக்கு! ஒரு வயோதிகனைப் பார்த்தால், "இவர் என்னைவிட வயது முதிர்ந்தவர். அதனால், இவர் எனக்கு முன்னரேயே மெய் வணக்கங்களை அமோகமாகச் செய்திருப்பார்" என்று எண்ணமிடு. அதுபோன்றே நல்லடியார்களை, தீயோர்களை, வாலிபர்களை, சிறுவர்களை, யாரைக் கண்டாலும், அவர்களைவிட நீ தாழ்ந்தவன் என்ற எண்ணம் உனக்கு உண்டாக வேண்டும். இந்த வகையில் (தானென்ற பெருமிதம் ஒழிந்து) கீழான மனத்தை ஒடுக்கவேண்டும். அதன் பின்னர் பிரபஞ்சமே உன் தூய இதயத்துள் ஐக்கியமாகிவிடும். இவ்விதமாயின், உன் தூய இதயத்தின் கண்களே (உன்னை) மேலான மறுமையின் பக்கம் வலித்து இறைவனின் முடுகுதலின் திருவாயிலிலும், திவ்விய சமூகத்திலும், பெருமிதத்தின் (கிப்ரியாவின்) படியிலும், தீவிரச்சுடர் (ஜலால்) வீசும் வாயிலிலும் கொண்டு வந்து அமர்த்திவிடும். அப்போது சித்தி பெற்ற உன் இதயத்துக்கு மறுமை மிக மிக அற்பமானதாகக் காட்சிதரும். இறைவனையே பூரணமாக நேசிப்பவனாகி, அவன் திவ்விய தரிசனத்தை மட்டுமே காதலிப்பவ



னாகச் சமைந்தபின், நீ இம்மையைப்பார்! அப்போது அதன் படைப்புகளெல்லாம் மிகமிகப் பயங்கரமானவையாகக் காட்சி யளிக்கும். அந்தப் புனித நிலையில் தன் குறை வெளிப்பட்டபின், கணவனால் வெறுத்து விவாகரத்துச் செய்யப்பட்ட ஒரு கேவலமான பெண் ஓடி ஒளிந்து கொள்வதைப்போல், இந்த இம்மையும் (உன்னை அணுகாமல்) உன் நெஞ்சிலிருந்தே அப்பாலாகிவிடும். உன் மனமும், இம்மையைக் கண்டு வெகுளும். அதன் பின்னர் மறுமை தன்னைத் தானே சிங்காரித்துக் கொண்டு, உன்னை அணுகும். பின்னர், இரட்ச கனின் கற்பனை, அதிலுள்ள குறைகளையும், அதுவும் (அவனால்) படைக்கப்பட்ட ஒரு படைப்புதான் என்பதையும் (உனக்குத்) தெளிய வைக்கும்.

யூதர்களும், கிறிஸ்தவர்களும் இஸ்லாமாகி விட்டால், அதில் நீயும்தான் கூடிக் கொள்வாய். இரட்சகனின் புனித முடுகுதலும், அவனோடு ஐக்கியமும், அவன் திவ்விய சந்நிதியில் அமர்வதுந்தான் சுவர்க்கவாதிகளுக்குக் கடாட்சமாகும். இம்மையின் தன்மையைத் தெரிந்து கொள்ளாமலேயே, அதை மோகிக்கும் அறிவிலிகளுடன் கலந்து விடாதே! மறுமையின் மாண்புகளை அறிந்து கொள்ளாமல், அதன்மீது பிரேமை கொள்ளும் அஞ்ஞானிகளோடும் சேர்ந்து விடாதே! படைப்புகளின் தத்துவார்த்தங்களையும் புரிந்து கொள்ளாமல், அவைகளை விரும்பிக் கிடக்கும் வீணர்களோடும் ஐக்கியமாகி விடாதே! உத்தம நேசர்களே! அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்! "உன்னை நான் தண்டித்து விடாமலிருப்பதற்காக என்னை அஞ்சிப் பயபக்தியுடன் நடந்துகொள்!" என்று ஒரு நபியைக்கூட இறைவன் எச்சரித்திருக்கிறான்.

யாகூப் நபி (அலை) அவர்கள் முதலில் யூஸுப் நபிக்காகவே அழுதார்கள். பிறகு தன் மனத்துக்காக அழத் தொடங்கினார்கள். நபியாவதற்குரிய அடையாளங்களும், அழகும் அவர்களில் திகழ்ந்ததை, யாகூப் நபியவர்கள் அறிந்து (எங்கே) அவை

அழிந்துவிடுமோ என்று பயந்து அழுதார்கள். நீங்கள் ஊமைகளாயும், குருடர், செவிடர்களாயும் சமைந்து விடுங்கள். உங்கள் தலைகளில் தான் காதுகள் இருக்கின்றனவே அன்றி, உங்கள் இதயங்களில் காதுகள் இல்லையே! ஏ நரக நெருப்பின் விறகுகளே! ஏ பாவாத்மாக்களே! ஏ அற்பர்களே! நீங்கள் இம்மையின் இச்சாபாசங்களில் சிக்குண்டு கிடக்கிறீர்கள்! உஷார், சகல கருமங்களும் சர்வ சக்தனான அல்லாஹ் வின் பக்கமே திரும்பி விடுகின்றன. விழிப்புடனிருந்து சீர்படுங்கள்! நான் உங்கள் மேய்ப்பாளன்; உங்களை (இறைவன் பக்கமே) விரட்டு பவன்; உங்களை(ச் சீர்படுத்தி)ப் பாதுகாக்கவே முனைந்துள்ளவன்! இரட்சகனைப் புனிதமாக ஏகத்துவப்படுத்துதல் என்ற வாளால் என் (இம்மையின்) லாப, நஷ்டங்களையெல்லாம் வெட்டித் தள்ளிவிட்டுத் தான் மகத்தான இந்தப் படிவங்களையெல்லாம் சித்தியாக்கிக் கொண்டேன். உங்களின் புகழையும், இகழையும், நீங்கள் என்னை மதிப்பதையும், அலட்சியப்படுத்துவதையும் சமமாகவே கருதுகிறேன். எத்தனையோ பேர் என்னை தாறுமாறாக இகழ்ந்தனர். அதே இகழ்ச்சிகள் பின்னர் எனக்குப் புகழாகச் சமைந்துவிட்டன. இந்த இரண்டும் (புகழும், இகழும்) இறைவனால் பொழியப்படுபவையே அன்றி மனிதர்களால் ஆவதல்ல. உங்களைக் கண்டு நான் பிரலாபிப்பதும், உங்களிடமிருந்து (செல்வங்களை) எடுத்துக் கொள்வதும் கூட இறைவனின் புனித ஆணையின் மீதே தான். எனக்கு மட்டும் சக்தியுமிருந்து, ஆணையுமிருந்தால், உங்கள் ஒவ்வொருவரோடும் சேர்ந்து, அவர்களின் புதை குழியுள் நுழைந்து முன்கர், நக்கீரின் கேள்விகளுக்கு உங்களுக்காக நானே பதில் சொல்லிவிடுவேன்.

- 39 -

இறைவனின்நேசம் பெற்ற நல்லடியார்களின் புனித இதயங்களில், அவன் தன் பேரின்பத்தையும், மெய்ஞ்ஞான உணர்வையும்



பொழிந்து விடுகிறான். இந்தப் புனிதமான பேரின்பமும், மெய்ஞ்ஞான உணர்வும் (வஜ்தும்) மேலிட்டு, அதனால் பற்பலவிதமான வார்த்தைகளெல்லாம் தம் வாயிலிருந்து மொழிந்து கொண்டிருப்பதற்காகவே, அபூ யஜீத் புஸ்தாமியை ஏழு தடவை நாடு கடத்தினார்கள். (புஸ்தாமி கூறிய சொற்களெல்லாம் சன்மார்க்கத்தின் ஆணைப்படி கூறக் கூடாதவையாகும்.) இறைவனின் முடுகுதலின் புனித வாயில்கள், மகான்களின் இதயங்களின் பக்கமே திறந்து வைக்கப் பட்டுள்ளன. ஐந்து வேளைத் தொழுகையைத் தொழுதல், மனிதர்களுக்குள்ள வெளிப்படையான இயல்புகள், பெயர்கள் இவைகளைத் தவிர, வேறு எதிலும் மகான்களும், மற்றவர்களும் ஒன்றாகக் கணிக்கப்படுவதேயில்லை. மகான்கள் வெளிக் கோலத்தில் மனிதர்கள் போன்றிருந்தாலும், அவர்களின் இதயங்கள் இறை நாட்டத்தோடும், உள்ளங்கள் சர்வ சக்தனான இறைவனோடுமே ஐக்கியமாயிருக்கின்றன. உன் முகத்திலும், உன் உடையிலும், வெளிப் பகட்டிலுந்தான் உன் மெய் வணக்கங்கள் (அதன் அடையாளங்கள்) காணப்படுகின்றன. உன் ஏகாந்தத்தில் இணை வைத்தலும், உள்ளத்தில் பொய்மையும், நெஞ்சில் நயவஞ்சகமும், தான்தோன்றித்தனமும் நிறைந்து, பிற படைப்புகளைப் பற்றிய அவநம்பிக்கையும் சேர்ந்து அலைமோதிக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் வாள்தான் (கத்திதான்) உன்னைத் தூய்மைப்படுத்த முடியும். இருப்பினும், அதிகமாகப் பாவமன்னிப்பு (தௌபா) கேட்டுவா! மௌனமாயிருக்கவும், அகமியங்களை மறைத்து வைக்கவுமே சன்மார்க்கம் எங்களுக்கு ஆணையிட்டிருக்கிறது. இன்றேல், உன்னைக் கைது செய்து, உன் கையைப் பிடித்து இழுத்துச் சபைக்கு வெளியில் தள்ளிவிடவும் செய்வேன்.

என் மீது அவதூறு கூறிப் பொய்யாக்கியவனை இறைவன் பொய்யாக்குவதுடன், அவனுக்கும் அவன் குடும்பத்தாருக்குமிடையிலும், அவன் ஜஸ்வியத்துக்கும் ஊராருக்குமிடையிலும், பிளவுகளை உண்டாக்கி நாசப்படுத்துவான். எனினும் அப்படிப்பட்டவர்களும் பாவமன்னிப்புத் தேடிக் கொள்ளட்டும். தொழ நினைக்கும்

போதெல்லாம் எனக்காக வேறு யாரையாவது தொழுதுவிடச் சொல்லலாமா என்றும் எனக்கோர் எண்ணம் தோன்றும். ஆயினும், (எனக்காக யார் தொழுவது?) தொழுகை நேரம் வந்ததும் நானே தொழுகைக்காக ஆஜராகிவிடுகிறேன். இதே எண்ணம் சபை கூடும்போதும் (வேறு யாரையாவது பேசச் சொல்லலாம் என்று) தோன்றுவதுண்டு. இரட்சகா! எங்களால் தூக்க முடியாத சுமையை எங்கள் மீது சுமத்தி விடாதே! (இம்மையைக் கண்டு) மகிழ்ந்திருப்போரோடு சேர்ந்து நாங்களும் மகிழ்ந்திருக்காமல், சஞ்சலப்படுவோரோடு சேர்ந்து கவலைப்படுபவர்களாகவும், சிரித்துக் கொண்டிருப்போரோடு சேர்ந்து நாங்களும் சிரித்துக் கொண்டிராமல், அழுவோரோடு கூடி நாங்களும் அழுபவர்களாகவும் எங்களை ஆக்கி அருள்புரி!

(பக்திப் பாதையில்) நடப்பதில் ஒப்பற்ற உறுதி காட்டு! அதன் மூலம் இறைக் கருணை எனும் பானத்தை அவனுடைய திவ்விய வாயிலில் அமர்ந்தவாறே அருந்த முடியும். உன்க்கு அறிவிப்பின், இம்மையைச் சேகரிக்கும் எண்ணத்தை அப்பாலாக்கிவிடு. குடும்பத்தவர்களுக்காகத் தேவைப்பட்டால், உனக்காகவன்றி அவர்களுக்காக வேண்டுவதை மட்டும் (இம்மையிலிருந்து) எடுத்துக் கொள்! நபி பெருமான் (ஸல்) அவர்கள் தருமப் பணத்தை வசூலித்து ஏழை, அனாதை, முஜாஹித் (புனிதப் போரில் ஈடுபட்டோர்) ஆகியவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்துவிட்டு, வீட்டுக்கு வந்து தங்கள் பிராட்டியார்களை நோக்கி, "யுத்தத்தில் வெற்றி கிடைத்தது: அதனால் உங்களுக்கு ஏதேனும் கிடைத்ததா?" என்று வினவுவார்கள். அவர்கள் 'இல்லை' என்று பதிலளித்ததும், 'நல்லது, நமக்கெல்லாம் இன்று நோன்பாகும்' என்று பதிலுரைத்துவிடுவார்கள். இதை நீ சிந்தித்துப்பார்! இதுபோன்றே மகான்களும் தமது சம்ரட்சணைக்காக ஏதும் கிட்டாதபோது, 'இறைவன் நம்மை நோன்பு பிடிக்க ஏவுகிறான்' என்றே முடிவு செய்து கொள்வார்கள்.

இறைநேசர்களான மகான்கள்கூட கூடு தாளாமல் சில சமயங்களில் மொட்டை மாடியில் தூங்கச் செல்வார்கள். திரும்பிக் கீழ்த்தளத்தின் வாயில் திறந்திருப்பதைக் கண்டதும், 'இறைவன் நம்மைக் கீழ் வீட்டின் உள்ளேதான் தூங்க ஆணையிடுகிறான்' என்று எண்ணிக் கொண்டு கீழே இறங்கி வந்துவிடுவார்கள். சில சமயங்களில் தங்களின் வீட்டு வாயில் கதவு திறந்து கிடப்பதைக் கண்டதும், 'இறைவன் நம்மை (ஏகாந்த வணக்கத்துக்காக)க் காட்டுக்கோ, வனாந்திரத்துக்கோ போக ஆணையிட்டே வீட்டின் வாயிலைத் திறந்து வைத்திருக்கிறான்' என்று எண்ணி வெளியேறி விடுவார்கள். பவித்திரமான தீர்க்கதரிசனத்தின் அம்சங்கள் படைப்பு களிடத்தில் (இன்னும்) மீதமிருக்கின்றன. அதாவது, அதன் புனிதமான பயன்களும், உயர்வான லட்சியங்களும். அல்லாஹ்வின் மெய்நேசர் களான மகான்களின் நெஞ்சங்களில் புகுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. தீர்க்கதரிசனம் ஒரு (நிறைவு பெற்ற) அமுதாகும். அதில் (கொட்டி) சிந்திப் போனதே, இறைநேயர்களின் (ஒளியாக்களின்) வாயிலிருக்கிறது. ஹராமானதையும், வட்டியையும் தின்போர்களே, இத்திருச்சபையி லிருந்து வெளியேறிவிடுங்கள்! நான் (நாட்டின்) நீதிபதியல்ல. நான் நீதிபதியாயிருந்தால் சன்மார்க்க நெறிமுறையின் ஆணைப்படி உங்களைத் தண்டித்துவிடுவேன். நானோ புனிதமான ஏகத்துவத்தை யும், சித்த சுத்தியையும் வளர்க்கவே முனைந்துள்ளவன்.



உங்களிடமுள்ள திரண்ட செல்வங்களை நான் எடுத்து என்ன செய்யப்போகிறேன்? உங்களிடம் பேருக்குக்கூட ஒரு புனித அமலும் இல்லையே! உங்களின் நன்மை, தீமையான காரியங்கள், உங்கள் முகத்தைப் பார்த்தே பிரலாபித்துக் கொண்டிருக்கின்றன. அவை உங்கள் கீழான மனத்தைப் பற்றி, உங்களை எச்சரிக்கின்றன. ஆகவே, நீங்கள் வாய்மூடி மௌனியாயிருப்பதே உங்களுக்கு நலமாகும். அந்த நிலையிலாவது, உங்கள் முகத்தின் களங்கங்கள் நீங்கி, அவற்றிலுள்ள கரும்புள்ளிகள் அகலலாம். பாக்தாத்வாசி ஒருவர் ஹஜ்ஜுக்குச் சென்று திரும்பியதும் என்னிடம் வந்தார். "நீ செய்துள்ள (விபச்சாரம் போன்ற) பெரும் பாவங்களுக்காகப் பாவமன்னிப்புத் தேடு! (தௌபாச் செய்)" என்றேன். "நான் ஹஜ்ஜுச் செய்திருக்கிறேன்" என்று

அவர் பதிலளித்தார். "ஆம், நீ ஹஜ்ஜு செய்திருக்கிறாய் என்பது எனக்குத் தெரியும்" என்றேன். எனினும், பாவமன்னிப்புத் தேடாமலே அவர் இறந்து போனார். பிரேதத் தொழுகையின்போது அவரை நான் பார்த்தேன். பெட்டியிலிருந்து வெளியில் வந்தவர் போல் வந்து என் அங்கியைப் பற்றிக் கொண்டார். நான் அவரை விளித்து, "இத்தகைய வேதனைக்குரிய தீயசெயல்களைக் குறித்துத்தான் உன்னை எச்சரித்துக் கொண்டிருந்தேன்" என்று விளக்கினேன்.

உன் வாதத்தில் எவ்வளவு பொய்யும் மோசடியும் கலந்திருக்கின்றன பார்! உனக்கே அவை கேடாக முடியுமே! நிச்சயம் கேடுதான் உண்டாகும். ஆகவே, அவைகளையெல்லாம் அகற்றியவனாக அவன் பக்கம் சார்ந்துவிடு. (அவ்வாறானால்தான்) நல்வணக்கங்களில் நீ குறையுறாதவனாக ஆகி, மரணத்தருவாயிலும் அது உனக்கு உதவும். அந்த (மறுமை) நாளில் உனக்காக நான் சிபாரிசு செய்வேன் என்று நீ நினைப்பது இணை வைத்தல் (ஷிர்க்) ஆகும். (அதைத்தான் நான் செய்ய முடியாது.) என் சிறு வயதிலிருந்தே (இரட்சகனின்) தூய்மையான ஏகத்துவத்தை நான் பேணிக் காத்து வந்தேன். (உனக்காக) அதை நான் வீணாக்கிக் கொள்வேனென்றா நினைக்கிறாய்! எனக்காகத் திறந்து கிடக்கும் புனித வாயிலை (உனக்காக) நான் அடைத்துக் கொள்ளவேண்டுமா? நான் ஞானபோதம் புரிந்து உன்னை அழைத்ததெல்லாம் முடிந்து விட்டது. அவைகளை நீ விசுவாசிக்கவுமில்லை; அவைகளால் உனக்கு எந்த நன்மையும் ஏற்பட்டதாகவும் தெரியவில்லை.

(இந்தச் சமயம் சபையிலிருந்த ஒருவர் 'அல்லாஹ்!' என்று கூச்சலிட்டார்.)

அண்மையிலேயே இதுபற்றி நீ வினவப்படுவாய்; இவ்வாறு நீ கத்தியது, பிறருக்கு உன்னை நல்லவனாகக் காட்டுவதற்காகவா அல்லது, உன் நயவஞ்சகத்தை மறைப்பதற்காகவா, (அல்லது) உன் நெஞ்சில் இணை வைத்தலை மறைத்துக் கொண்டா, இல்லை.



களங்கமற்ற இதயத்தோடா என்று அப்போது விசாரிக்கப்படுவாய். இன்று சம்மட்டி அடிக்குமேல் சம்மட்டியடி கொடுக்கப்படும். பிரியமுள்ளவர்கள் அமரலாம். பிரியமில்லாதவர்கள் (இச்சபையிலிருந்து) வெளியேறிவிடலாம்.

(என்று கூறி ஓர் உரத்த சப்தம் எழுப்பி எழுந்து நின்றதும், ஒரு பெரும் கூட்டமே சப்தமிட்டு அழுது தௌபாச் செய்து பாவமன்னிப்பு வேண்டிய) நிலையில் அவர்களுக்கு எதிரில் வந்து அவர்களைச் சூழ்ந்து கொண்டது. அப்போது எங்கிருந்தோ குருவி ஒன்று பறந்து வந்து ஆண்டகையவர்களின் தலை மீது உட்காரவே, அவர்களும் குருவி நன்றாக உட்காரத் தங்களின் மேலான சிரத்தைத் தாழ்த்தியவாறே அமர்ந்து கொண்டார்கள். சபையிலிருந்தவர்கள் மேடையைச் சுற்றி நாலா பக்கமும் 'தௌபா'வை ஓதிக் கொண்டே நின்றிருந்தனர். இதற்கிடையில் ஒருவர் அந்தக் குருவியைப் பிடிக்கத் தம் கையை நீட்டியதும், அது பறந்தோடி விட்டது. பின்னர், ஆண்டகையவர்கள் பிரார்த்தனைக்காகக் கரங்களை ஏந்தி இறைஞ்சியதும், சபையினரும் பிரலாபித்தவாறே அவர்களின் பின்னால் அழுது கூச்சலிட்டுக் கொண்டே ஜாமிஆ மஸ்ஜிதுக்கு வந்து சேர்ந்தனர். அங்கே ஆண்டகையவர்கள் மேலும் தொடர்ந்து பேசியதாவது :

இது இறுதி யுகமாகும். இரட்சகா! இதன் வேதனை எங்களை அணுகிவிடாமலிக்க உன்னிடமே அடைக்கலம் தேடுகிறோம். எனக்குப் புனிதமான அகமியம் ஒன்று காட்சி தருகிறது. அதை அப்பாலாக்கிவிட்டு ஓடிவிட ஆசிக்கிறேன். எனினும், இறை சங்கல்பம் என்னைத் தடுக்கிறதே! இந்த இம்மையின் பாசங்கள் உன் சுத்த சன்மார்க்கத்தை நாசமாக்காமலிருக்கட்டும்; உன் கண்ணியத்தைப் பேணிக் காத்துக் கொள்! ஏதேனும் (ஜீவனோபாயத்துக்காகத்) தொழில்புரி! அப்போதுதான் உன் சிந்தனையை ஒருமுகப்படுத்த

முடியும். தொழிலும், உழைப்பும் இறைவனிடமிருந்து (ரிஜ்கு) வாங்கிக் கொள்ளும் வாயிற்படிகளாகும். அவற்றின் மூலம் படைப்புகளின் தாட்சண்யத்திலிருந்து அப்பாலாக்கிக் கொள்ளலாம். காரணகர்த்தாவிட மிருந்து, காரண சாதனங்களும், உள்ளத்திலிருந்து வெளிக்கோலமும், "உழைப்பு, கஷ்டம் என்ற வாதமெல்லாம் முடிந்துவிட்டது. (அதாவது, இறைவனே உணவளித்துப் போசிப்பான்") என்றோ, "ஏதாவது (இறைவன் அருளாத) ஒரு புதிய பொருளைத் தேடவேண்டும்" என்றோ கூவிக் கொண்டிருக்கின்றன.

இதனால்தான், "என்னோடு வாருங்கள், நாமும் காரண கர்த்தாவிடம் சென்று விடுவோம். அசல் ஊற்றுக்கே போய்விடுவோம். மூலவேர் இருக்கும் இடத்துக்கே சென்று தங்கிவிடுவோம். சென்று, இறை நாட்டம் என்ற பீடத்தைத் தாங்கிக் கொள்வோம். மெய்ஞ்ஞானத் திருவாயிலிலும், கிருபாகடாட்சமென்ற நதியின் கரையிலும் போய் நிற்பதோடு, நதியில் நீந்தி, அது உற்பத்தியாகும் மூலஸ்தானத்துக்கே போய்விடுவோம்" என்று கூறி அழைக்கப்படுகிறீர்கள். இறைவனின் கருணை, மெய்ஞ்ஞானம் என்ற இரண்டு நதிகளின் மூலஸ்தானத் துக்கு வந்ததும், அது கிருபாகடாட்சமென்ற மலையிலிருந்து சுரப்பதைக் காண்பீர்கள். (அதை) அள்ளி அருந்துவதற்கு யாருக்கும் உழைப்போ, கஷ்டமோ இருக்காது. ஆகவே, அங்கேயே முகாமிட்டு விடுவீர்கள். அந்தப் படிவத்தில் (கிபாயத்து என்ற) திருப்தியும், (இனாயத்து என்ற) இரட்சகனின் கருணையும், மெய்ஞ்ஞானப் பிரகாசமும், பக்திப் பாதையும் (ஹிதாயத்தும்) துலக்கமாகும். அத்துடன், வேறு பல ஞான அகமியங்களும் தெளிவாகும். இதனால், நீங்கள் பூரித்துப் போவீர்கள்.

இரட்சகனோடு ஐக்கியமாகிவிட எனக்கு எத்தனையோ வாயில்கள் இருக்கின்றன. அவைகளின் மூலம் இரட்சகனை அணுகி விடுவேன். சிறப்பான ஒழுக்கங்களையே கடைப்பிடித்துச் சித்தி பெறு! பெரியார் இப்ராஹீமுல் கவாஸ் (ரஹ்) அவர்கள் கூறிய இந்தச்



சம்பவத்தைக் கவனி : " நான் பல ஆண்டுகள் தனிமையான காட்டில் ஏகாந்த வணக்கத்திலிருந்தேன். அப்போது ஒரு நாள் அசரீரியான ஒரு வழிகாட்டி என்னை ஓர் இடத்தில் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டது. அந்த இடத்தைக் கண்டதும் எனக்கு திகிலுண்டாகி விட்டது. அப்போது திடீரென்று என்முன் வாலிபன் ஒருவன் வந்து நிற்பதைக் கண்டு, நான் பிரமித்தேன். "எங்கிருந்து வருகிறாய்?" என்று அவனிடம் வினவி னேன். "அதுவே அது" என்று அவன் பதிலளித்தான். "எங்கே போகிறாய்?" என்று கேட்டதற்கும், "அதுவே அது" என்றே பதிலளித்தான். ('அதுவே அது'வில் தன்னை அர்ப்பணித்துவிட்ட) அவனிடம், "நீ மெய்யாகவே ('அதுவே அது'வில்) அர்ப்பணமாகிவிட்டவனாயின், அவனில் பலியாகிவிடு பார்க்கலாம்!" என்றேன். உடனேயே அந்த வாலிபன் ஒரு சப்தமிட்டுக் கீழே சாய்ந்துவிட்டான். நான் அவனை அணுகிப் பார்த்தேன். அவன் உயிர் போய்விட்டது. அவனை அடக்குவதற்கு இடத்தைத் தயார் செய்துவிட்டு, வந்து பார்த்தபோது அவன் சடலத்தையே அங்குக் காணோம். (நான் திகைத்து நின்று கொண்டிருந்தேன்.) அச்சமயம், "ஏ இப்ராஹீமுல் கவாஸ்! அந்த மனிதனை 'மலக்குல் மௌத்' தேடினார். கிடைக்கவில்லை. சுவர்க்கம் தேடியது கிடைக்கவில்லை. நரகமும் தேடியது. காணவில்லை" என்று அசரீரியான சப்தம் ஒன்று எழும்பியது. "அப்படியானால் அந்த வாலிபன் எங்கே?" என்று நான் வினவியதற்கு, அதே அசரீரி, "அழிவற்ற திவ்விய இடத்தில் பூங்காவும், நதிகளும் சூழ்ந்த இடத்தில் சர்வசக்தனான இறைவனின் திருச் சந்நிதியில் இருக்கிறான்" என்று சத்தமிட்டது.

இகத்தின் பாசங்களில் மூழ்கிக் கிடப்போனே! அஞ்ஞானியாகத் திரியாமல் வீட்டுக்குள் (இறைவன் சமூகத்துக்குள்) புனிதமாக நுழைந்துவிடு! கடந்த ஞானி (மஷாயிகு)களின் வழிகாட்டுதலின் மூலம் வா! அந்த மகாத்மாக்கள், இறைவனின் மெய்வணக்கத்தில் தங்களை இருந்தும் இல்லாமலாக்கிக் கொண்டு, முழுக்க முழுக்க

ஆன்மீக வாதிகளாக ஆகிவிட்டதால், இறைவனின் புனித முடுகுதலிலாகி, அவனுடைய மேன்மைமிக்க விருந்தினர்களாகச் சமைந்து விட்டனர். (அதன் மகிமையால்) அவர்களுக்குக் காலையில் ஒரு தட்டு அமுதும், மாலையில் ஒரு தட்டு அமுதும் அவனிடமிருந்தே கருணையாகின்றன. அத்துடன் வித விதமான புனித உடையும் (கில்அத்தும்) அணிவிக்கப் பெற்று, அவனது ராஜ்யங்களிலும், பூமியிலும், வானத்திலும், அகமியங்களிலும், மெய்ஞ்ஞானத்திலும் பவனியாக அழைத்தேகப்படும் மகிமையையும் பெறுகின்றனர்.

மூன்று மைல் (அகலமுள்ள) கனமுள்ள ஒரு சுவருக்குப் பின்னால் நின்று கொண்டு, தன் கையிலுள்ள ஊசியால் அதில் பொத்தல் போட்டு, உள்ளிருக்கும் காட்சிகளைத் தரிசிக்க நினைக்கும் மூடனாகவே நீ விளங்குகிறாய். இறைவனின் உத்தம நேயர்கள் இந்தச் சுவரின் அருகில் வந்ததும், அவர்களுக்கு (இறைவன் கருணையால்) ஆயிரக்கணக்கான திருவாயில்கள் திறந்துவிடப்படுகின்றன. ஒவ்வொரு வாயிலும் தன் மூலமாகவே அவர்கள் உள்ளே போகவேண்டும் என்று அழைக்கின்றன. உனக்குக் கிடைத்துள்ள இம்மையின் (நீஃமத்) சௌபாக்கிய சம்பத்துக்களையும், அதன் பாசங்களையும் களங்கமின்றி அப்பாலாக்கிவிட்டு, அந்தச் சௌபாக்கியங்கள் மெய்யாகவே புனிதமானவைதாமா, அல்லது தண்டனையானவையா என்று சிந்தித்துப்பார்! அவற்றின் வெளிக்கோலத்தைக் கண்டு மயங்கிக் கருணையாளனான இறைவனை மறந்துவிடாதே! அவற்றின் வலமோ, இடமோ திரும்பிப் பார்க்காதே! அந்தக் கருணையாளனின் திசையிலிருந்து உன் பார்வையை அப்பாலாக்காதே! இம்மையின் கரங்களால் அவைகளை உண்ணாதே! ஏனெனில், அவைகளில் நஞ்சு கலந்திருக்கலாம். இம்மை தன் சௌபாக்கியங்களை உன்னிடம் கொடுத்ததும், திருக்குர்ஆன்-ஹதீஸ் என்ற இரண்டு மந்திரிகளிடமும் அவை பற்றி யோசனை கேள்! அவை அனுமதி கொடுத்துவிட்டாலும், அப்போதும் சிறிதே தாமதம் செய்! அவசரப்படாதே! பேராசை கொள்ளாமல் தீர்ப்புக் கூறுபவர்கள் அனுமதித்தாலும்



உன் கீழான மனத்திடமும் முடிவுகேள்! அது தீர்ப்பளித்ததும், அதற்குப் பணிந்துவிடாமல், அதனுடன் புனிதமாகப் போரிட்டால், அது தூய்மையாகி இதயத்தோடு ஐக்கியமாகிவிடும்.

அப்போதுதான் அந்தப் புனித ஆத்மாவை நோக்கி, "ஏ நற்சாந்தி பெற்றுவிட்ட ஆத்மாவே!" என்று சோபனத்தோடு அழைக்கப்படும். அதற்குப் புனித இதயத்தின் மூலமாயும், இதயத்துக்குத் தூய உள்ளத்தின் மூலமாயும், உள்ளத்துக்கு இறைவன் புறத்திலிருந்தும் சுபச் செய்திகள் கூறப்படும். பேணுதலுக்குரிய பங்கை ஈந்த பின்னரே உண்ணத் தொடங்கு. அதிலும் மிதமிஞ்ச வேண்டாம். பயபக்திக்குரிய உரிமையையும் கொடுத்த பின்னரே உண்ணத் தொடங்கு. அதிலும் அளவு கடந்து விடாதே. (இரட்சகா!) நாங்கள் உன் திசையையே நாடி விட்டோம். உன்னையே எங்கள் புனித லட்சியமாக ஏற்றுவிட்டோம். உன்னையே நாடுகிறோம். உன்னையே தேடுகிறோம். உன் மீதே எங்கள் தூய விசுவாசத்தை நிலைநிறுத்திவிட்டோம். எங்கள் சந்தான பாக்கியங்களையும், குடும்பம், உற்றார், சுற்றத்தார், வீடு, வாயில்கள் அனைத்தையும் (உனக்காகவே) அப்பாலாக்கி விட்டோம். எனவே, எங்களை நீ புறக்கணித்துவிடாமலிருக்கப் பிரார்த்திக்கிறோம்.

படைப்புகளோடு பிணைந்து கொள்வதும், இறைவனின் திருவாயிலைப் புறக்கணித்துவிட்டு ஓடுவதும், கீழான மனத்தோடு இணைந்திருப்பதும் பெரும் பாவங்களாகும். ஞான மகான்கள் சிலருக்கு அமரர்கள்கூடப் பணிந்து (ஊழியம் புரியக்) கைகட்டி நிற்கின்றனர். மெய்நேசர்களோ, வேறு சிலரோ அமரர்களையே நேரில் காண்கின்றனர். இவ்வாறான மகான் ஒருவர் ஷாம்தேச மஸ்ஜித் ஒன்றில் அமர்ந்து கொண்டு, "ஆ எனக்குத் தலையாய திருநாமம் (இஸ்முல் அஃலம்) மட்டும் தெரிந்துவிட்டிருந்தால்..." என்று கூறிக் கொண்டிருந்தார். அப்போது திடீரென்று அவருக்கு முன் இரண்டு மனிதர்கள் (அவர்கள் மனித உருவில் வந்த அமரர்களே) வந்து அவர் பக்கத்தில் அமர்ந்தனர். ஒருவர் மற்றவரை விளித்து, "(ஏன் உனக்கு)

இஸ்முல் அஃலமைப் பார்க்கவேண்டுமா?" என்று வினவினார். மற்றவர் "ஆம்" என்றார். உடனே முதல்வர் "அல்லாஹ்" என்று கூறு. இதுதான் இஸ்முல் அஃலம்" என்றார். (மீண்டும் அப்பெரியார் கூறுகிறார்) "நான்தான் எத்தனையோ தடவை 'அல்லாஹ்' என்று கூறி இருக்கிறேனே! (அதன் அபூர்வ சக்திகள் எனக்குப் புலனாக வில்லையே!)" என்று நான் எண்ணிக் கொண்டிருக்கும்போதே, அந்த முதல் மனிதர், "இவ்வாறு வாயால் சொல்லிவிடுவதைக் குறித்து நான் கூறவில்லை. உன் தூய இதயத்தில் வேறு எதையும் அமர்த்தக் கொள்ளாமல், களங்கமின்றி 'அல்லாஹ்' என்று துதிக்கவேண்டும். அப்போதுதான் அதன் அற்புத மகிமைகளைக் காணும் பாக்கியம் சித்தியாகும்" என்றார். அதன்பின் "அவ்விருவரும் நான் பார்த்துக் கொண்டிருக்கம்போதே வானத்தின் பக்கம் பறந்துவிட்டார்கள்" என்று அப்பெரியார் தெரிவித்துள்ளார்.

உன் வெளிக் கோலத்தை (சடலத்தை)ப் படைப்புகளுக்காக ஒதுக்கிவிட்டுத் தூய இதயத்தை மறுமைக்காக (சிந்திக்க) வைத்து விட்டுத் தூய உள்ளத்தை இம்மை, மறுமை இரண்டிலும் பிணைந்து விடாமல் அப்பாலாக்கி, இறைவனோடு ஐக்கியப்படுத்திச் சீர்படு! இவ்வாறு உன்னால் முடியுமானால் செய்! இன்றேல், ஈடேற்றம் என்ற நண்பன் கிடைக்கமாட்டான். கையை உதறிவிட்டுக் காடு வனாந்தரங் களை நோக்கி ஓடிவிடு! ஏகாந்த வணக்கங்களிலும், காடு வனாந்தரங்களிலும், உன்னதமான மெய்விசுவாசத்தைத் தேடிப் பெற்றுக்கொள்! பின்னரே படைப்புகளின் திக்கில் திரும்பவேண்டும். அவைகளை அணுகுவதற்கு முன், புனித ஏகாந்தத்தின் மூலம் மெய் நேசனைத் தேடி வசப்படுத்திக் கொள்! ஞான குருவின் வழிகாட்டலின்றி, ஏகாந்த வணக்கங்கள் கூடச் சில சமயங்களில் பயனின்றிப் போகலாம். (ஆண்டகையவர்கள் சிறிது நேரம் ஏதோதோ உரையாடி விட்டுப் பின்னர் மேலும் தொடந்தார்கள்.)

இறைவனின் மெய்நேசர்கள் மற்றவர்களுக்காகவே (இம்மை யின் செல்வங்களை) எடுத்துப் பங்கிட்டு விடுகின்றனர். அவர்களோ,



மெய்ப்பொருளான இறைவனுடன் பிணைத்து நிற்கின்றனர். உன்னிடமிருந்து வாங்கி, அவைகளை உனக்கே தானமளித்து விடுகின்றனர். சீர்பெற்ற சாதகரும் இறைவனிடமிருந்தே எடுத்துக் கொள்கிறார். மெய்ஞ்ஞானிகள் (ஆரிபீன்கள்) படைப்புகளிடமிருந்தே எடுத்துக் கொள்கிறார்கள். ஏனெனில், மெய்ஞ்ஞானிகள் காரியஸ்தர் களாயும், சர்வ சக்தனான அல்லாஹ்வின் பிரதிநிதிகளாயும் நியமனமாகி, படைப்புகளிடமிருந்து வசூலித்துத் தாங்கள் எடுத்துக் கொள்ளாமல் மற்றவர்களுக்குப் பங்கிட்டு விடுகின்றனர். அவர்களுக்கோ இறை வனிடமிருந்து அமுது நிரம்பிய தட்டுக்கள் கிடைத்துக் கொண்டிருக் கின்றன. அவர்களுடைய ஆத்மபாசங்கள் அவர்களுடைய காலின் கீழ்போட்டு மிதிக்கப்பட்டு, மூஸா நபி (அலை) அவர்களின் ஊன்று கோல் எல்லாவற்றையும் விழுங்கியும் அதில் எந்த மாறுதலும் காணப் படாமலிருந்ததுபோல், சர்வ படைப்புகளும் அவர்களின் புனித நிழலில் தங்கியும், தம்மில் எந்த மாறுதலுமற்றவர்களாகத் திகழ்கின்றனர்.

என் கரத்தின் மீது தீட்சை பெற்றும் (பைஅத்துச் செய்தும்) நீ வெற்றி பெறவில்லையென்றால், பிறகு உனக்கு எங்குமே ஆத்ம சித்தி என்ற வெற்றி கிட்டாது. உன் வல்லமை, பெருமைகளைக் கண்டு பயந்து, நான் இந்தச் சம்மட்டியடிகளைக் கொடுக்கவில்லை. உன் செல்வங்களை ஆசித்து, உனக்கு ஞானோபதேசம் செய்யவில்லை. என்னை அணுகவிடாமல் உன்னை மறக்கடிக்கும் கருமங்களே உனக்கு சாபத் தடையாய்ச் சமைந்துவிடும். இந்தச் சாபத் தடை (உன்னோடு மட்டும் நின்று விடாமல்) விரைவில் உன் மக்கள்-குடும்ப பாக்கியங்களையும் சூழ்ந்து கொள்ளும். அதனால் அவர்கள் பிச்சை எடுக்கவும் தொடங்கிவிடுவர். சான்றோர்களான உத்தம சீலர்கள் தங்கள் குடும்ப புத்திர பாக்கியங்களை இறைவனின் உன்னதமான பாதுகாப்பில் ஒப்படைத்து விடுகின்றனர். நயவஞ்சகர்களே தங்கள் குடும்பம், உற்றார், உறவினர்களைத் தாங்கள் சேமித்த செல்வங் களின், தொழில்களின் ஆதரவை நம்பியே விட்டுவிடுகின்றனர்.

எனவேதான், நிச்சயமாக அவர்களின் முடிவும் விசனத்துக்குரிய தாகவே ஆகிவிடுகிறது. நீயோ அஞ்ஞானியாய் சபிக்கப்பட்டவனாய் (இரட்சகனின் கருணை கிட்டாது) அப்பாலானவனாய், அவன் சீற்றத்துக்கு ஆளாகிச் சுழன்று கொண்டிருக்கிறாய். உன் இதயத்துள் இம்மையின் பாசங்கள் நிறைந்து கிடக்கின்றன. இரட்சகா! உன் புனித சன்மார்க்கத்தை வளர்க்க உதவும் இம்மையை வேண்டுபவனுக்கே அதை நீ கடாட்சமாக்கு! உன் பரிசுத்த உள்ளமையின் திருப்திக்காக மறுமையை ஆசிப்பவனுக்கே அதை அளித்தருள்! (தானும் ஒரு சன்மார்க்கவாதி என்று) காண்பித்துக் கொள்வதற்காக, மறுமையை வேண்டுபவனுக்கு அதைக் கிடைக்கவிடாதே! இம்மையின் சுகபோகங் களை ருசிக்க விரும்பி, அதை யாசிப்பவனுக்கு இறைவா! அதை அருளிவிடாதே! ஏனெனில், இந்த இரண்டும் (இத்தகைய இம்மையும், மறுமையும்) அடியான் உன்னை அணுகாமல் தடுக்கக்கூடிய தடை களாகும். ஆம், உங்களில் எவருக்கேனும் (ஆத்ம) வெற்றி சித்தியாகிவிட்டிருந்தால், நாளை (நானும்) அவர் முன்றாணையைப் பற்றிக் கொள்வேன். சான்றோர்களான உத்தமர்கள் எவரேனும் என்னை அணுகினால் (அவரிடம் நான்), "உங்களுக்கு மறுமையில் இறைவனால் அருட்பாக்கியங்கள் ஏதேனும் அருளப்படின், அதில் என்னையும் சேர்த்துக் கொள்ளுங்கள்! உங்களுடைய அங்கீகரிப்பைப் பெற்ற புனிதப் பிரார்த்தனையில் (துஆவில்) அடியேனையும் சேர்த்துக் கொள்ளுங்கள்! அவ்வாறே இறைவன் எனக்கு ஏதேனும் அருட்பாக்கியங்களை அனுக்கிரகித்தால், அதில் உங்களுக்கும் நான் பங்கு தருகிறேன்" என்று விண்ணப்பித்துக் கொள்வதுண்டு.

சித்தசுத்தி (இக்லாஸ்)யோடு, தூய இதயத்துடன் நான் கூறும் ஞானோபதேசங்களை ஏற்றுச் சீர்பட்டால், நீ ஜெயசீலனாய்த் திகழ்வது நிச்சயம். ஏனெனில், இது மட்டும் புனிதமாக நிறைவேறிவிடுமாயின், நானும் நீயும் லட்சியத்தை எய்தியவர்களாகி விடுவோம். இதற்கு (என் ஞான போதத்துக்கு) மாற்றமான நிலையுண்டாயினும் கூட, நான்



கூறும் வழி சரியில்லாது போவதாக வைத்துக் கொண்டால் கூட, நீ ஜெயசீலனாயும், நான் நஷ்டவாளியாகவுமே ஆகிவிடுவோம். அமரர், ஷைத்தான், மனிதன் என்று படைப்புகளில் மூன்று வகையுள்ளன. எனவே, அமரர் அப்பட்டமான புனிதத்தன்மையே அருளப்பட்டவர். ஷைத்தானோ அதற்கு மாற்றமாக தீமையே உருவானவன். மனிதனோ (அவனில்) நன்மை, தீமை இரண்டுமே கலந்து உருவானவன். ஆகவே, அவனிடமுள்ள புனிதம் மிகைத்துவிடின், அவன் அமரர்களுடன் இணைந்துவிட முடியும். அவனிடமுள்ள தீய இயல்புகள் மிகைத்துவிடின், அவன் ஷைத்தானோடுதான் சேர்ந்து விடுவான்.

- 40 -

அருமந்த நேசனே! வழிகேடர்களின், பாவிகளின், சன்மார்க்க நெறிமுறையில் (ஷரீஅத்தில்) இல்லாத கருமங்களை எல்லாம் (இஸ்லாத்தின் பெயரால்) புதிது புதிதாக உண்டு பண்ணும் அனாச்சாரம் பிடித்தவர்களின், (ஞானி என்றோ நடித்து அவ்விதம்) வேடமிட்டுத் திரிபவர்களின், தங்களிடமில்லாத மகத்தான சக்திகளெல்லாம் தங்களிடம் இருப்பதாக நடித்துத் திரிபவர்களின் கொடுமைகளைத் தாளாமல், தூய்மையான இஸ்லாம் அழுது காப்பாற்றும்படி பிரலாபித் துக் கொண்டிருக்கிறது. உனக்கு முன் சென்று விட்டவர்களையும், இப்போது உன்னோடு இருப்பவர்களையும் கூர்ந்து நோக்கு! அவர் களும் நல்லதை ஏவிக் கொண்டும், தீயதை விலக்கிக் கொண்டும், (உன்னைப் போன்றே) உணவருந்திக் கொண்டும் தாமிருந்தனர். (திடீரென்று மரணமாகி) பிறக்காதவர்கள் போன்றே மறைந்து விட்டனர். உன் நெஞ்சமோ, இறுகிப் பாறையாகி விட்டது. நாய்கூடத் தன் எஜமானனோடு வேட்டையாடுவதிலும், அவனைக் காப்பதிலும், அவன் ஆடு, மாடுகளை, அவன் வேளாண்மைகளைக் காப்பதிலும் ஈடுபட்டுத் தன் எஜமானனின் நன்மையில் கண்ணும் கருத்துமாய் இருக்கிறது. (அதையெல்லாம் பார்த்த எஜமானன்) மாலையில் அதற்குச் சில கவளம் உணவளிக்கிறான். (அதைத் தின்றுவிட்டு வாலை ஆட்டுகிறது.) நீயோ, அல்லும் பகலும் ஒப்பற்ற, விதவிதமான

அருட்கொடைகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறாய். அந்தத் திரவிய போகபாக்கியங்களை இறைவன் எந்த லட்சியங்களுக்காக உனக்களித்தானோ அவற்றை நீ நிறைவேற்றவில்லை. அதற்குரிய நன்றியையும் செலுத்தாமல், (அதற்கு மாற்றமாக) அவனுடைய தூய்மையான ஆணைகளை மறுப்பதுடன், அவனிட்ட வரம்புகளையும் (ஷரீஅத்தின் ஆணைகளையும்) மீறி நடக்கிறாய்.

அன்பு மகனே! ஏழ்மை, பொறுமை, ஈடேற்றம் என்ற அருட் கொடைகளுக்குச் சமமாக, வேறெந்தப் பாக்கியத்தையும் உயர்வானதாகக் கருதாதே! உன் ஏழ்மையில் இறைவனின் செல்வப் பண்பை ஐக்கியப்படுத்திக்கொள். ஏனெனில், இம்மையின் செல்வம் (பெரும் பாலும்) தீமையானதையே ஏவி, இரட்சகனையே (நினைக்கவிடாமல்) மறக்கச் செய்துவிடும். (ஏனெனில்,) செல்வன் இகவாழ்வின் போகத்தையே பெரிதாக எண்ணி, இரட்சகனின் புனிதமான ஏவல் விலக்கல் (ஹுக்மு)களை விட, தன் இச்சாபாசங்களுக்கு முதலிடம் கொடுத்து விடுகிறான்; இறைவனின் ஏவல்களில் கீழான மனத்தின் வேட்கைகளையும், சுபாவச் சேட்டைகளையும் புகுத்திவிடுகிறான். உயர்வான நோன்பை கடைப்பிடிப்பதை விட, (பணத் திமிரால்) அதை கடைப்பிடிக்காமலிருக்குமாறே அவனுடைய கீழான மனம் அவனைத் தூண்டுகிறது. ஆகுமான கருமங்களை விட, விலக்கப்பட்ட கருமங் களைச் செய்வதற்கே அது அவனை ஏவுகிறது. விழிப்பை (விழித் திருந்து மெய்வணக்கம் புரிவதை) விடத் தூங்கிக் கொண்டி ருப்பதையே அது வேண்டுகிறது. பாவமன்னிப்புத் தேடுவதைவிட, (மேலும் மேலும்) தீய செயல்கள் செய்து கொண்டிருப்பதிலேயே அது மகிழ்ச்சி கொள்கிறது.

அந்தோ பரிதாபம்! உன் தீய செயல்கள் யாவும் வெட்ட வெளிச்ச மாகிவிட்டன. எனினும், நீ சிறிதேனும் அதுபற்றி வெட்கப்படக் காணோம். "(ஒரு காலம் வரும். அப்போது) ஒரு மனிதனிடம் போவதைவிட(த் தூரத்திலிருந்தே) அவனைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொண்டு, அவனைச் சோதித்துப் பார்ப்பதே உனக்கு நன்மையாகும். அவ்வாறு அவனைச் சோதித்தால், அவனை என்ன, அவன்



நடத்தையைக் கூட நீ வெறுப்பாய்!" என்று நபி பெருமான் (ஸல்) அவர்கள் அருளியுள்ளதைச் சிந்தித்துப்பார்! இது மகத்தானதொரு உணர்ச்சிமிகுந்த சக்தியை ஊட்டும் காலமாகும். பலவகைப்பட்ட படைப்புகளோடு (மக்களோடு), சேர்ந்து பழகுவதே மகத்தான தீமைகளை உண்டாக்கிவிடும். (ஏனெனில், அவர்களின்) உள்ளம் (பாதின்) வரைக்கும் உள்ள கந்தல், கிழிசல்கள் வெளியில் தெரிகின்றன. உள்ளே கறையானால் (செல்) அரிக்கப் பெற்று, மேல் பக்கம் பசுமையாகத் தெரியும் மரக்கட்டைகளாகவே அவர்கள் (படைப்புகள்) விளங்குகின்றனர். விறகுக்காக நெருப்பிலிட்டு எரிக்கவே தவிர வேறெதற்கும் அவர்கள் பயன்படமாட்டார்கள்.

மெய்வணக்கங்களைத் தூய்மையாகக் கடைப்பிடித்ததாலும், இறைவன் விலக்கியுள்ளவைகளைப் புனிதமாக அப்பாலாக்கியதாலும், ஏகாந்த வணக்கம், பகிரங்க வணக்கம் ஆகிய இரண்டிலுமே இறைவனின் பவித்திரமான ஏகத்துவத்தைப் பரிசுத்தப்படுத்திக் கொண்டதாலும், இம்மையின் பாசங்களை வெறுத்து ஒதுக்கியதாலும், சீர்பெற்ற மெய்விசுவாசி இகம் பரம் ஆகிய ஈருலகுக்குமே அரசன் போல் திகழ்கிறான். (அதனால்,) இம்மையின் சுக சம்பத்துக்கள் தங்களை ருசிக்கும்படி, "மகனே, மகனே!" என்று கெஞ்சிக் கொண்டே (அரசனுக்குப்பின் ஏவலாளர்கள் போவதைப் போன்று) அவன் பின்னே ஓடுகின்றன. அந்த நிலையில் உத்தம மெய்விசுவாசி "உங்களில் விஷம் கலந்திருக்கலாம். எனவே, பவித்திரமான மறுமையின் திருவாயிலில் உறுதியுடன் அமர்ந்து கொள்ளும் வரை, நான் உங்களை ருசிக்கமாட்டேன். ஏ தாயே, (இம்மையே) எனக்காக உன்னிடமுள்ள என் பாகத்தை (மக்ஸும்) வைத்துவிட்டுச் செல்! மறுமையின் மேலதிகாரி வந்து அதை முகர்ந்தும், சுவைத்தும் பரீட்சித்துப் பார்த்துவிட்டு, அதை நான் சுவைக்கலாம் என்று எனக்கு அனுமதி தரட்டும். பிறகு அந்த மேலதிகாரியின் கையாலேயே அதை உண்ணுவேன்" என்று கூறிவிடுவான்.

(அந்தப் புனித நிலை உனக்குச் சித்தியானபின்) புனிதமிக்க மறுமையே உன்னைத் தன் பக்கம் அழைத்தேகித் தன்னிடமுள்ள

அமுதபானங்களை உனக்கு ஊட்டி, நீ உண்ணுமாறு செய்யும். அப்போது உனக்கும், இம்மைக்குமிடையில் தடை போடப்பட்டிருப் பதைக் காண்பாய். இந்த நிலையில், இரட்சகனின் ரோஷமென்ற கரமும், கண்ணியமென்ற கரமும் உன்னைப் பற்றி இழுத்து, "நான் (இரட்சகன்) அல்லாதவர்களோடு நீ எப்படி ஐக்கியமாகலாம்?" என்று அதட்டிக் கேட்கும். மகனே! இம்மை மறுமை இரண்டுமே, படைப்புகள் தாம். அவற்றை ஒதுக்கி அவனையே, அவன் முடுகுதலையே நாடு. அப்போது அவனே உனக்குக் கண்ணியமெனும் உடை உடுப்பான்; புனிதம் அருகிலாதலைக் கருணை புரிவான். தீரியாக்கை (பாம்பின் விஷத்தை இறக்குவதற்கு உபயோகப்படுத்தும் ஒரு மூலி)கை உண்ணக் கொடுப்பான்; புனித பயபக்தி, அதிகமான சகாயம், தூய்மையான பாதுகாப்பு என்ற அணிமணிகளை அணிவித்து அருள்பாலிப்பான். இறைவனின் நல்லுதவி பின் தொடர, நீ இம்மையை நோக்கி வருவாய். நீ வர்த்தகம் (நல் அமல்கள்) செய்யக் கடையை நிர்மாணித்து வைத்திருப்பான். (மறுமையின் வணிகனாகி) இம்மைவாசிகளோடும், மறுமையின் வாசிகளோடும் உரையாடும் நற்பேற்றையும் உனக்கருள்வான்.

இம்மையின் திரவிய சம்பத்துக்களைச் சேகரித்து என்ன செய்வது? உனக்கு வரும் பிணியை, வராமல் ஒரு வினாடியாவது அவற்றால் தடுத்து நிறுத்த முடியுமா? உனக்கு வரும் மரணத்தை வரவிடாமல் செய்ய முடியுமா? ஏன், அடுத்த வினாடியே நீ மரண மடைந்தாலும், அதில் வியப்புக்குரியது எதுவுமில்லை. இரட்சகனின் மெய்நேசர்களான மகான்களோடு, களங்கமின்றிப் பிணைந்துகொள்! பைத்தியக்காரர்களும், இம்மை என்ற கடலில் மூழ்கித் தவிப்பவர் களும், அவர்களருகிலாகி மேலான சிகிச்சை பெறுகின்றனர். மூழ்கியவர்களை அவர்கள் கரை சேர்க்கின்றனர்; இறைவனின் வேதனைக்கு ஆளாகிவிட்ட பாவிகளைக் கண்டு அனுதாபப் படுகின்றனர். இத்தகைய சித்தி பெற்ற மகான்களைத் தரிசிக்க நேர்ந்தால், அவர்களிடமே சரணடைந்துவிடு. உனக்கு (வழிகாட்டும்) மகான்கள் கிடைக்காவிடின், அதோகதிக்குள்ளாகிவிட்ட உன்



துர்ப்பாக்கிய ஆத்மாவுக்காக அழுது பிரலாபி! இறை சங்கல்பத்துக்கு நல்லிணக்கம் காட்டும் உத்தமர்களுக்கெதிரில்தான், அதுவும் புன்முறுவல் பூத்து, அவர்களின் கரங்களைப் பிடித்து அழைத்துச் சென்று, அவர்களைக் கருணையாளனான இறைவனின் அருகிலாக்கி, அவனுடைய மகா கனம் தங்கிய முடுகுதலை, அவர்கள் பெற்றுத் தீழைக்கச் செய்கிறது. அந்த நிலையில் சான்றோர்களான அவர்கள் பரம்பொருளின் மெய்நேசர்களின் திருக்குழுவில் ஐக்கியமாகிக் கொள்கின்றனர்.

இறை சங்கல்பத்துக்கு மெய்யான நல்லிணக்கம் காட்டு. அதை எதிர்த்துப் போரிடாதே! மெய்நேசமென்பது (முராபிகத்தென்பது) நல்லிணக்கத்தின் (முவாபிகத்தின்) மற்றொரு திருப்பெயர்தான். (முவாபிகத்தில்லையேல், முராபிகத்துமில்லை.) மகா கனம் தங்கிய நபிமார்கள், தீர்க்கதரிசிகளின் பிரதிநிதியாயும், அவர்களின் புனித அகமியங்களைத் தாங்கியவர்களாயுமுள்ள மெய்நேசர்களின் (சித்தீகின்களின்) வாய்மொழிகள், அல்லாஹ்வால் உதிப்பாக்கப்படும் (இல்ஹாம்) ஞான ஜோதிகளாகும். அவர்களின் திருவாக்குகள் இறைவன் புறத்திலிருந்தே, அவனோடு ஐக்கியமாகியே, அவனைக் குறித்தே வெளிப்படுகின்றன. ஏதேனுமொருவரின் புதைகுழியருகில் சென்று, அதில் அடக்கமாயுள்ளவரை நோக்கி, "(தோழா,) நீ கண்டதென்ன? உன் இறுதி நிலை எவ்வாறு முடிந்தது? உன் சந்தான பாக்கியங்கள் எங்கே? உன் உற்றார் உறவினர் எங்கே? மாட மாளிகைகள் எங்கே? உன் செல்வ சம்பத்துக்கள் எங்கே? உன் யௌவனம் எங்கே? உன் சக்தியும், வல்லமையும் எங்கே? உன் ஆட்சி எங்கே? ஏவல் விலக்கல்கள் எங்கே? உன் கொடுக்கல் வாங்கலெல்லாம் எங்கே சென்றுவிட்டன? உன் நண்பர்கள் கூட்டமெங்கே? உன் ஆசாபாசங்களெல்லாம் எங்கே சென்று விட்டன?" என்று வினவிப்பார்! அவன் தன் குரலால், "நான் விட்டு வந்தவைகளெல்லாம் எனக்கு நஷ்டத்தையே தந்துள்ளன. நான் முன்னரே இங்கு அனுப்பி வைத்தவை (நல் அமல்கள்) மட்டுமே

எனக்கு மகிழ்ச்சி தருகின்றன" என்று பதிலளிப்பான். புதைகுழியைக் காணுந்தோறும் இவ்வாறே ஆத்மீக விசாரணை செய்துபார்! மெய்ஞ்ஞானம் பெற்றுச் சீர்படு!

இச்சமயம் ஆண்டகையவர்களின் திருச்சபையைக் கடந்து, பிரேதம் (மையித்) ஒன்று சென்று கொண்டிருந்தது. ஆண்டகையவர்கள் அதைச் சுட்டிக்காட்டிச் சபையோர்களைப் பார்த்துச் சொன்னதாவது:)

மரணமாகிவிட்ட இவர் நிலையை நீங்கள் உணர்கிறீர்களா? மரணம் இவரை அணுகியதும், அது இவர் மதியை மயக்கி விடுவதால், இவருடைய உணர்வும், அறிவும் அப்பாலாகி விடுகின்றன. அந்த நிலையில் இவர் தன் சுற்றத்தார்களைக் கூட அறிந்து கொள்ள முடிவதில்லை. இவ்வாறே தான் மெய்ஞ்ஞான நிலையும் (மஃரிபத்தும்), சீர்பெற்ற மெய்விசுவாசியின் தூய இதயத்தில் ஐக்கியமானதும், அவரை ஒரு மயக்கத்தில் ஆழ்த்தி, அவருடைய புலனுணர்ச்சியையும், சுதாரிப்பையும் அப்பாலாக்கிவிடுகிறது. (இந்தப் புனிதப் படிவத்தில்), அவர் தன் இரட்சகனான அல்லாஹ்வையன்றி வேறு எதையுமே அறிந்து கொள்ள முடிவதில்லை.

"மாபெரும் தவசீலர் முஹ்யித்தீன் ஆண்டகை"
மூன்றாம் பாகம் முற்றுப் பெற்றது.